

# பொருளியல் நோக்கு

நவம்./டிசம்.
1986




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் வங்கி வெளியீடு




மூலம்: இலங்கை மத்திய வங்கியும் வரவு
செலவுத்திட்ட உரையும்

# பொருளாதார குறிகாட்டிகள்

"கனத்த அளவிலான வ. செ. தி. பற்றுக் குறைகள் வெளிநாட்டு நிதிகளாலும், உள்நாட்டு, வெளிநாட்டு வங்கி முறையை உள்ளடக்கிய உள்நாட்டுக்கடன்களினாலுமே பெருமளவில் நிதிப்படுத்தப்பட்டு வந்துள்ளன.... அதிகளவிலான வெளிநாட்டுக்கடன்கள் சலுகை ரீதியில் பெறப்பட்ட போதிலும், குறித்த சில அரச கூட்டுத்தாபனங்களுக்கெனப் பெறப்பட்ட வர்த்தக கடன்களும் உள்ளன. இது பாரிய கடன் சுமை ஒன்றைத் தோற்றுவித்திருப்பதுடன், இச்சுமை இப்பொழுது உச்ச மட்டத்தை அடைந்துள்ளது."


வரவு செலவுத்திட்ட உரை, 1987.

"மேலதிக வருமானங்களுக்கான தேவை பாரதூரமான அளவில் உணரப்பட்ட போதிலும் தற்போதை வருமானவரி விகிதங்களை அதிகரிப்பதில்லை என நான் தீர்மானித்துள்ளேன்..... 1977 ஆம் ஆண்டில் நாம் காலடி எடுத்து வைத்த பாதையில் தொடர்ந்து முன்னேறிச் செல்வதற்கும், 1987/88 வரி மதிப்பீட்டாண்டில் வருமான வரியையும் கம்பனி வரியையும் மேலும் குறைப்பதற்கும் நான் விரும்பியிருப்பேன். ஆனால், துரதிர்ஷ்டவசமாக, அதிகரித்து வரும் பாதுகாப்புச் செலவினங்களுக்கு மேலதிக நிதிகள் தேவைப்படுவதன் காரணமான அதனை என்னால் செய்யமுடியவில்லை."


"சமீப ஆண்டுகளில் மொத்த வியாபார வரி அரசாங்கத்தின் பிரதான வருமான மூலமொன்றாக இருந்து வந்துள்ளது. இது 1977ல் 66.2 கோடி ரூபாவிலிருந்து 1985ல் 1019.5 கோடி ரூபாவாக அதிகரித்துள்ளது. மொத்தவியாபார வரி வருமானத்தில் இதன் பங்கு 1977ல் 12 சதவீதமாக இருந்து 1985ல் 33 சதவீதமாக அதிகரித்துள்ளது. வரி வீதங்களில் அறிமுகப் படுத்தப்பட்ட மேல் நோக்கிய திருத்தங்கள், தாக்கமான வரி அறவீடு என்பன காரணமாக மொத்த வரி வருமானம் துரிதகதியில் அதிகரித்து வந்துள்ளது."

"விளை பொருள்களின் விலை வீழ்ச்சி, சுற்றுலாத் துறையின் குறைந்த சம்பாத்தியங்கள், ஏற்கனவே பெறப்பட்ட சில வர்த்தக கடன்களின் மீளச் செலுத்துகை ஆகியவற்றின் கூட்டுத்தாக்கம் காரணமாக இவ்வாண்டில் கடன் சேவை மிக மோசமாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. சர்வதேச நாணய நிதியத்தின் கொடுக்கல் வாங்கல்களையும் உள்ளடக்கிய கூட்டுமொத்த கடன் சேவை விகிதம் 1985ல் 22.3 சதவீதமாகவும், 1986ல் 30.8 சதவீதமாகவும் இருந்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும் வெளிநாட்டுக்கடன்களைப் பெறுவதில் நாம் மிகுந்த எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டுமென்பதையே இது எடுத்துக்காட்டுகிறது."

வரவு செலவுத்திட்ட உரை, 1987.




மூலம்: வரவு செலவுத்திட்ட உரைகளும்
வ. செ. தி. விவாதங்களும்




மூலம்: இறைவரி ஆணையாளரின் நிர்வாக
அறிக்கை 1985; வரவு செலவுத்
திட்ட உரை 1987

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளியல் நோக்கு

மலர் 12 இதழ் 8/9 நவம்./டிசம். 1986

மக்கள் வங்கியின்
ஆராய்ச்சிப்பகுதி வெளியீடு:
தலைமைக்காரியாலயம்,
11 வது மாடி,
கொழும்பு 2,
இலங்கை

## நிரல்கள்


| | | |
|---|---|---|
| நிகழ்ச்சிக்குறிப்பேடு | 2 | அக்டோபர் 1986 |
| வெளிநாட்டுச் செய்தித் தொகுப்பு | 22 | சவூதி அரேபியாவின் பிரச்சினைகள் |
| விலை பொருள்கள் | 23 | சர்வதேச பண்ட உடன் படிக்கைகள் |


## விசேஷ அறிக்கை


| | | |
|---|---|---|
| | 3 | வரவு செலவுத்திட்டம் 1987 |
| காமினி அபேசேகரா | 4 | வரவு செலவுத்திட்டமும் பொருளாதாரமும் |
| டப். எம். திலகரத்ன | 10 | ஏற்றுமதிகள் – வரவு செலவுத்திட்டமும் பொருளாதாரமும் |
| யசபால கருணாசிங்க | 13 | வரவு செலவுத்திட்டத்தில் வருமான முன்மொழிவுகள் |


## சிறப்புக்கட்டுரை


| | | |
|---|---|---|
| தேசிய போதைவஸ்து கட்டுப்பாட்டுச்சபை | 26 | இலங்கையில் போதைவஸ்து வியாபாரமும் பாவனையும் – தற்போதைய நிலைமை |


பொருளியல் நோக்கு கருத்துக்களையும், அறிக்கைகளையும், புள்ளிவிவரத்தரவுகளையும், உரையாடல்களையும் பல்வேறு கோணங்களிலிருந்து அளிப்பதன் மூலம் பொருளாதாரத்திலும் பொருளாதார அபிவிருத்தியிலும் ஆர்வத்தை உண்டாக்கி அறிவினை வளர்ப்பதைக்குறிக்கோளாகக் கொண்டது.

பொருளியல் நோக்கு மக்கள் வங்கியின் ஒரு சமூகப் பணித்திட்டமாகும். எனினும் அதன் பொருளடக்கம் பல்வேறு ஆசிரியர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைக் கொண்டதாயிருக்கும். அவை வங்கியின் கொள்கைகளையோ உத்தியோக பூர்வமான கருத்துக்களையோ பிரதிபலிப்பவையல்ல. எழுத்தாளரின் பெயருடன் பிரசுரிக்கப்படும் சிறப்புக்கட்டுரைகள் அவ்வாசிரியர்களின் சொந்தக்கருத்துக்களாகும். அவை அவர்கள் சார்ந்துள்ள நிறுவனங்களைப் பிரபலிப்பனவுமாகா. இத்தகைய கட்டுரைகளும், குறிப்புக்களும் வரவேற்கப்படுகின்றன.

பொருளியல் நோக்கு மாதந் தோறும் வெளியிடப்படும். அதனை சந்தா செலுத்துவதன் மூலமோ, விற்பனை நிலையங்களிலிருந்தோ பெற்றுக்கொள்ளலாம்.

### அடுத்த இதழில்

- ★ விஞ்ஞானமும் அபிவிருத்தியும் - இலங்கை நிலைமை
- ★ வட்டி வீதங்களும் பொருளாதார அபிவிருத்தியும் - இலங்கையின் அனுபவம்
- ★ இலங்கையில் வீடமைப்பு அபிவிருத்தி
- ★ சீனாவில் நவீனமயமாக்கம்

அட்டைப்படம்
சேபாலிக்கா பெர்னாண்டோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிகழ்ச்சிக் குறிப்பேடு

**அக்டோபர்**

1. கொழும்பு நுகர்வோர் வாழ்க்கைச் செலவுச் சுட்டெண் அக்டோபர் 1986ல் 613.9 ஆக இருந்ததென சனத்தொகை கணிப்பீட்டு, புள்ளிவிவரத் திணைக்களம் அறிவித்தது. இது செப்டம்பர் 1986ல் 611.0 ஆகவும், 1985 அக்டோபரில் 550.0 ஆகவும் இருந்தது.

2. இலங்கை மின்சார சபையினால் நிதிப்படுத்தப்படவிருக்கும் உத்தேச ஒன்பதாவது மின்வலுச் செய்திட்டத்தை நிதிப்படுத்தும் பொருட்டு சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திலிருந்து 4 கோடியே 32 லட்சம் எஸ். டி. ஆர். (ரூ. 145.6 கோடி) கடன் பெறுவதற்கு அரசாங்க அங்கீகாரம் கிடைத்தது. இச்செய்திட்டம் மின் வினியோகத்தை விருத்தி செய்வதுடன், தற்போது நிலவிவரும் குறைந்த வோல்டேஜ் பிரச்சினைகளையும் தீர்த்து வைக்கும். இக்கடன் 15 வருட காலத்தில் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும்; மேலும் இது வட்டியில்லாத 10 வருட தாட்சண்ய காலத்தையும் உள்ளடக்குகிறது.

9. மலேசியாவின் பெட்ரொனஸ் நிறுவனத்திடமிருந்து இலங்கை பெட்ரோலிய கூட்டுத்தாபனம் 01. 10. 1986 திகதியிலிருந்து ஆரம்பமாகும் ஒரு வருட காலத்துக்கு 240,000 மெட். தொன் மிரி சுத்திகரிக்கப்படாத எண்ணெய்யை கொள்வனவு செய்வது என்ற சக்தி, வலு அமைச்சரின் பிரேரணைக்கு அரச அங்கிகாரம் வழங்கப்பட்டது. வளைகுடாப் - பிரதேசத்துக்கு வெளியே இலங்கை பெட்ரோலியம் கூட்டுத்தாபனம் ஒரு வழங்குனரைப் பெறுவது இவ்வொப்பந்தத்தின் ஓர் அனுகூலமாகும். மத்திய கிழக்குக்கு வெளியே சுத்திகரிக்கப்படாத எண்ணெய் பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரே மூலமும் இதுவாகும்.

11. யென், டொயிஷ் மார்க் ஆகிய நாணயங்களுக்கெதிராக டொலர் 40% வரை வீழ்ச்சியடைந்துள்ளது என 'எகனமிஸ்ட்' சஞ்சிகை தெரிவித்தது.

15. உலக வங்கியின் தலைவராக ஐந்து ஆண்டுகள் பணிபுரிந்ததன் பின்னர் டொம் குளோசன் தனது பழைய பதவியான பாங்க் ஒப் அமெரிக்காவின் தலைவர் - பிரதம நிறைவேற்று அதிகாரி பதவியில் மீண்டும் அமர்ந்தார்.

கிரிந்தி ஓயா (லுணுகம் வெஹெர) செய்திட்டத்தின் மொத்தச் செலவில் 80 சதவீதத்தை நிதிப்படுத்துவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி 2 கோடியே 66 லட்சம் அ. டொலர்களை வழங்கும் என காணி அமைச்சர் அரசாங்கத்துக்கு அறிக்கையிட்டுள்ளார்.

இச் செய்திட்டம் 32,000 ஏக்கர் காணிகளுக்கு நீர்ப்பாசன வசதிகளை வழங்குவதுடன், 8300 பண்ணைக் குடும்பங்களையும் குடியமர்த்தும். இது தென் மாகாணத்தைப் பொறுத்த வரையில் ஒரு முக்கிய வளர்ச்சிக் காரணியாக இருக்கும். சிவில எந்திரவியல் வேலைகள், பாதைகள், நீர் வினியோக முறைமை, காடு வளர்ப்பு, விலங்கு வளர்ப்பு அபிவிருத்தி, இரண்டு சக்கர உழவு யந்திரங்களுக்கான கடன்கள், அடக்கச் செலவை மீளப் பெறும் வகையிலான வீடமைப்பு உதவி, யானைகளை வேறு இடங்களுக்கு கொண்டு செல்வதற்காக வன விலங்கு இலாகாவுக்கு உதவி போன்றவற்றுக்கு இக்கடன் பயன்படுத்தப்படும்.

கரும்புச் சீனி ஆராய்ச்சி நிறுவனத்தினுள்ள ஆராய்ச்சி உபகரணங்களை விருத்தி செய்வதற்கான கேள்விப்பத்திரத்தை டோயா மென்கா கெயிஷா நிறுவனத்துக்கு வழங்குவதற்கான உணவு, விவசாய அமைச்சரின் சிபார்சினை அரசாங்கம் ஏற்றுக் கொண்டது. இது தொடர்பாக இலங்கை 50 லட்சம் யென் கொடை ஒன்றினை பெற்றுள்ளது.

1987 ஆம் வருடத்துக்கான செலவு ஒதுக்கீட்டு மசோதாவை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கான நிதியமைச்சரின் முன்மொழிவுக்கு அரசாங்கம் அங்கீகாரமளித்தது. 1987 ஆம் வருடத்துக்கான மொத்தச் செலவு 7200 கோடி ரூபாவாக இருக்கும். இதில் மீளவரும் செலவு 3900 கோடி ரூபா; மூலதனச் செலவு 3300 கோடி ரூபா. மதிப்பிடப்பட்ட வருமானம் 4180 கோடி ரூபாவாகும். பற்றுக்குறையான 3020 கோடி ரூபா கடன்கள், வெளிநாட்டு உதவி, ஏனைய மூலங்கள் என்பவற்றால் நிதிப்படுத்தப்படும்.


தேசிய சுகாதார நிறுவனத்துக்கு களுத்துறையில் ஒரு விடுதிக் கட்டடத்தை நிர்மாணிப்பதற்கு சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவராண்மை 240,000 அ. டொலர் கொடையொன்றினை வழங்கியுள்ளது.

23. சுகாதார அமைச்சின் வைத்திய வழங்கல் பிரிவுக்கு களஞ்சியத் தொகுதி ஒன்றை நிர்மாணிப்பது தொடர்பாக ஜப்பானுடன் பத்திரங்களை பரிமாறிக்கொள்வதற்கு சுகாதார அமைச்சருக்கு அரசாங்கம் அனுமதியளித்தது. நாட்டில் இயங்கும் 1,100 சுகாதார பராமரிப்பு நிறுவனங்களுக்கு அத்தியாவசிய மருந்துகளையும், வைத்திய உபகரணங்களையும் வினியோகிப்பதற்கு இப்பிரிவு பொறுப்பாக இருக்கிறது. இக்களஞ்சியத் தொகுதி நிர்மாணத்துக்கென ஜப்பானிய அரசாங்கம் 24.5 கோடி ரூபா உதவிக் கொடையொன்றை வழங்கும்.

30. இலங்கையில் கொள்கை கற்கை நெறிகள் நிறுவனம் ஒன்றை ஸ்தாபிப்பதற்கான சட்ட மூலமொன்றை தயாரிக்குமாறு நீதியமைச்சர் சட்டவரைஞர் திணைக்களத்துக்கு விடுக்கும் வேண்டுகோளுக்கு அரசாங்க அனுமதி வழங்கப்பட்டது. தேசிய அபிவிருத்தி திட்டமிடுவோருக்காக கொள்கை தொடர்பான ஆராய்ச்சிகளை ஆரம்பித்து, ஊக்குவித்து, நடத்துவதும், அரசு சார்பற்ற நிறுவனங்கள், பல்கலைக் கழகங்கள் போன்ற தேசிய திட்டமிடல் தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் ஏனைய தாபனங்களுடன் இணைந்து செயலாற்றுவதும் இப்புதிய நிறுவனத்தின் நோக்கமாகும். டச்சு அரசாங்கத்தின் தொழில் நுட்ப உதவியுடன் இந்நிறுவனம் ஸ்தாபிக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மூலம்; வரவு செலவுத்திட்ட உரை

# வரவு செலவுத்திட்டம் 1987

நிதி, திட்டமிடல் அமைச்சர் திரு ரொனீ டீ மெல் 1986 நவம்பர் 12 ஆம் திகதியன்று தமது தொடர்ச்சியான பத்தாவது வரவு செலவுத்திட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார். ஒரு நாட்டின் நிதியமைச்சர் தொடர்ச்சியாக பத்து வருடாந்த வரவுத்திட்டங்களை சமர்ப்பிப்பது மிக அரிதான ஒரு செயலென்றே கருதப்படுகிறது. மேலும் பொருளாதார கொள்கைத்தொகுதியொன்றின் தர்க்க ரீதியான தொடர்ச்சியாகவும், தடங்கலின்றி நடைபெற்று வரும் அபிவிருத்தித்திட்டம் ஒன்று மீதான உறுதியான ஒரு அணுகுமுறையாகவும் இது கருதப்படுகிறது. தன்னுடைய வரவு செலவுத்திட்டம் இலங்கை வரலாற்றின் கொந்தளிப்பான காலகட்டமொன்றிலும், சர்வதேச பொருளாதாரத்தின் மிக மோசமான சூழலுக்கு மத்தியிலும் சமர்ப்பிக்கப்படுவதாக நிதியமைச்சர் கூறினார். எனினும், 1977ல் அறிமுகம் செய்துவைக்கப்பட்ட கொள்கைச் சீர்திருத்தங்களும், அதன் பிறகு மிக விவேகமான முறையில் மேற்கொள்ளப்பட்ட பொருளாதார முகாமையும், இக்கொந்தளிப்புக்களுக்கு மத்தியிலும் தொடர்ந்து நாட்டுக்கு நன்மை அளித்து வருவதாக அவர் தெரிவித்தார். ''பொருளாதார தளம் மீதான எமது திட்டங்களும், நிகழ்ச்சித் திட்டங்களும் இனப்பிரச்சினை காரணமாக நிச்சயமாக பாதிக்கப்பட்டுள்ளன. இதனை மறுக்க அல்லது கண்டுகொள்ளாது விட முயற்சிப்பது முட்டாள்தனமாகும். கடந்த மூன்றாண்டுகளில் நாங்கள் எதிர்நோக்கிய சகலவிதமான துன்பங்களுக்கு மத்தியிலும் கூட நாடு குறிப்பிடக்கூடிய அளவிலான முன்னேற்றத்தை எய்தியுள்ளது; பொருளாதார வளர்ச்சி வீதம் குறைந்த ஒரு மட்டத்திலாயினும் தொடர்ச்சியாக நிகழ்ந்து வந்துள்ளது. வரவு செலவுத்திட்டப் பற்றுக்குறையின் பரிமாணம், குறுகிய ஏற்றுமதித் தளம் என்பன பொருளாதாரத்தை நிலையாக வருத்தி வரும் அடிப்படைப் பிரச்சினைகளாக இருந்து வருகின்றன. நாட்டில் சமாதானம் மீண்டும் நிலை பெறுவிட்டால் இத்துறைகளில் சிறிதளவு முன்னேற்றமே எய்த முடியும்'' என்றும் அவர் சொன்னார்.

1987 ஆம் வருடத்துக்கான எதிர்பார்க்கப்பட்ட வரவு செலவுத்திட்டப்பற்றுக்குறை ரூ. 2618.5 கோடியாகும். இது 1986 ஆம் வருட பற்றுக்குறையை விட 9 சதவீதம் குறைவானதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரவு செலவுத் திட்டமும் பொருளாதாரமும்

## அபிவிருத்திக்குரிய நெறிமுறைகள்

காமினி அபேசேகர,
(பொருளாதார விவகாரங்களின் மேலதிக பணிப்பாளர், நிதி – திட்டமிடல் அமைச்சு)

நிதி - திட்டமிடல் அமைச்சர் திரு. ரொனி டீ மெல் கடந்த வருடம் தமது ஒன்பதாவது வரவு செலவுத் திட்ட உரையின் ஆரம்பத்தில் குறிப்பிட்டதுபோல், அவருடைய பதவிக் காலத்தில் கடந்த பல வருடங்களில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டங்கள் நாட்டின் அபிவிருத்திக்கான நெறி முறைகளைக் குறித்துள்ளதுடன், ''அரசாங்கத்தின் மிக முக்கியமான கொள்கை முனைப்புகளையும் அடக்கியிருந்தன.'' அதன்படி, 1977ம் ஆண்டின் பிற்பகுதியில் அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட புதிய பொருளாதாரக் கொள்கைகள், நோக்கத்திற்கொண்ட முழுப் பயன்களையும் சாதிப்பதற்காக சம்பூரணமாக நிறைவேற்றப் படுவதை உறுதிப்படுத்துவதற்கு அவை வழிப்படுத்தப்பட்டன.

எனவே, 1977ம் ஆண்டுக்குப்பின் அடுத்தடுத்து நிகழ்த்தப்பட்ட வரவு செலவுத் திட்ட உரைகள், முற்றாக ஸ்தம்பித மடையும் விளிம்பில் தத்தளித்துக் கொண்டிருந்த ஒரு பொருளாதாரத்துக்கு ஒரு புதிய திசைப் போக்கையும், பரிமாணத்தையும் கொடுக்கும் ஒரு தொடர்ச்சியான முயற்சியின் அமைவில் நோக்கப்படவேண்டும். இதேபோல, இனி வரும் வரவு செலவுத்திட்ட உரையின் முக்கிய அறை கூவல், வெறும் நெருக்கடியைச் சமாளிக்கும் ஒரு வேலையெனக் கருதப்படுவதைவிட இதுவரை கைக்கொள்ளப்பட்ட அபிவிருத்தி உபாயத்தை உறுதியாக நீடிக்கும் ஒன்றாகக் கருதப்பட வேண்டும்.

இலங்கையில் வரவு செலவுத் திட்டங்களின் வரலாற்றில் புகுத்தப்பட்ட மிக்க தூரவீச்சுள்ள கொள்கைச் சீர்திருத்தம் தற்போதைய நிதியமைச்சர் முதன் முதலாகச் சமர்ப்பித்த வரவு செலவுத் திட்டமெனவே தோன்றியது. அதாவது 1977 நவம்பரில் பொருளாதாரம் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டுத் தாராளமாக்கப்பட்டதாகும். கடந்த ஒன்பது வருடங்களில் இந்த அணுகுமுறை எவ்விதத்தும் மாற்றப்படவேயில்லை. தாராளமாக்கும் கொள்கையில் இறக்குமதிக் கட்டுப்பாடுகளையும், நாணயப் பரிவர்த்தனைக் கட்டுப்பாடுகளையும் தளர்த்துவது மட்டுமன்றி, வர்த்தகத்துக்கும் முதலீடுகளுக்கும் இருந்துவந்த தடைகளை அகற்றுவதும் அடங்கியிருந்தது.

அதன்படி, இலங்கையின் அபிவிருத்தி முயற்சியில் தனியார் துறை பங்குபற்றுவதையும் வெளிநாடுகளின் ஒத்துழைப்பையும் திரட்டும் நோக்கத்துடன் முதலீட்டு நடவடிக்கைகளுக்கும் மற்றும் பொருளாதாரக் கொடுக்கல் வாங்கல்களுக்குமான வாய்ப்புக்கள் உண்டாக்கப்பட்டன. 1977ம் ஆண்டிலிருந்து சமர்ப்பிக்கப்பட்ட ஒவ்வொரு வரவு செலவுத்திட்டத்தின் உரையிலும் இக்கொள்கை வற்புறுத்தல் மீண்டும் இடம்பெற்றதுடன் அரசாங்கம் கடப்பாடாக ஏற்றுள்ள தாராள பொருளாதாரத் தத்துவங்களும் மீண்டும் ஊர்ஜிதஞ் செய்யப்பட்டன.

1977ம் ஆண்டுக்குப் பிற்பட்ட காலத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டங்களின் உரைகளிலிருந்து, முதலீடு, வளர்ச்சி, வேலை வாய்ப்புகள் போன்ற குறிப்பிட்ட அபிவிருத்திக் குறிக்கோள்கள் சம்பந்தமாக பேரண்டப் பொருளாதாரக் கொள்கைகள் அனைத்தையும் திசைவழிப்படுத்த மனமறிய முயற்சி செய்யப்பட்டுள்ளதென் பதும் தெளிவாகின்றது. அதன்படி, மொத்த உள்நாட்டு உற்பத்தியின் ஒரு சதவிகிதமாக மொத்த உள்நாட்டு முதலீடுகள் 1970ம் ஆண்டுக்கும் 1977ம் ஆண்டுக்குமிடைப்பட்ட காலத்திலிருந்து வந்த 16 சதவிகித சராசரியிலிருந்து, 1978ம் ஆண்டுக்கும் 1985ம் ஆண்டுக்குமிடைப்பட்ட காலத்தில் 27 சதவிகிதத்துக்கு உயர்ந்தன.

இதன் விளைவாக, 1970ம் ஆண்டுக்கும் 1977ம் ஆண்டுக்கு மிடைப்பட்ட காலத்திலிருந்த வருடாந்த சராசரி வளர்ச்சி விகிதமான 2.6 சதவிகிதத்துடன் ஒப்பிடுகையில், 1978ம் ஆண்டுக்கும் 1985ம் ஆணடுக்கு மிடைப்பட்ட காலத்தில் இலங்கைப் பொருளாதாரம் ஆண்டொன்றுக்கு 5.8 சதவிகிதத்துக்கு மேற்பட்ட சராசரி வளர்ச்சி விகிதத்தைச் சாதிக்க முடிந்தது. இதேபோல, 1977ம் ஆண்டில் இருந்தவாறு திகிலூட்டும் விகிதமான 25 சதவிகிதத்தை அடைந்துவிட்ட வேலையற்றோர் தொகை 1985ம் ஆண்டளவில் ஏறக்குறைய 14 சதவிகிதத்துக்கு வீழ்ச்சியடைந்தது. பொருளாதாரத்தில் இந்தச் செயற்பாடுகள் விவேகமான பொருளாதார முகாமைத்துவத்தினால் சாத்தியமாயின.

1977ம் ஆண்டுக்குப் பிற்பட்ட காலத்தில் பொருளாதாரத்துறையில் நிலைநாட்டப்பட்ட சாதனைகள், எந்தக் குறிப்பிட்ட வருடத்தின் வரவு செலவுத்திட்ட யோசனைகளை நிறைவாக்குவதற்குப் பயன்படுத்தப்பட்ட பேரண்டப் பொருளாதாரக் கொள்கைக்கலவையின் பயனுறுதிக்குச் சான்று பகர்கின்றன. நாணயக் கொள்கைக்கும் அரசிறைக் கொள்கைக்குமிடையே இணக்கத்தை வைத்திருக்க மனமறியச் செய்யப்பட்ட முயற்சி, பொருளாதார வளர்ச்சிக்கு மட்டுமன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலை ஸ்திரத்துக்கும் உதவியது. ஆரம்பத்தில் பணவீக்கம் சற்றே உயர்வாக இருந்த தற்குப்பின், விலைக் குறியீட்டெண்ணில் ஏற்பட்ட அதிகரிப்பைக் கடந்த ஆண்டு குறிப்பிடத்தக்க குறைந்த விகிதத்தில் கட்டுப்படுத்தி வைக்க முடிந்துள்ளது.

சேமிப்புகளில் பெரும் அதிகரிப்பு

எனினும், பல துறைகள், கொள்கை வகுப்போருக்குக் கவலையை உண்டாக்கி வந்துள்ளன. இதில் உடனடியாகக் கவனஞ் செலுத்துவது அவசியமாகும். உதாரணமாக, சேமிப்புகளில் கவனிக்கத்தக்க அதிகரிப்பு ஏற்பட்டிருந்த போதிலும், முதலீட்டு நடவடிக்கைகளில் பெரும் பகுதிக்கு வெளிநாட்டு உதவி கொண்டு நிதியளிப்புச் செய்யப்பட்டுள்ளது. வரும் வருடங்களில் இவ்வுதவி உடனடியாகக் கிடைக்காமலிருக்கலாம். ஆதலால், தேசியச் சேமிப்புக்களைத் திரட்டி, உற்பத்திக்கான முதலீடுகளில் அவற்றை நெறிப் படுத்துவதற்கு யோசித்துத் தீர்மானிக்கப்பட்ட முயற்சி செய்யப்படுவது ஜீவாதாரமாகுமெனத் தோன்றுகிறது.

இதேபோல, பிரதானமாக உள்நாட்டு விவசாய, நிர்மாணத் துறைகளுக்கும் மற்றுஞ்சில சேவைத் துறைகளுக்கும் அடக்கப்பட்டிருந்துள்ள பொருளாதார நடவடிக்கைகளை விரிவாக்கி, பன்முகப்படுத்த வேண்டியதவசியமாகும். இதில் கைத்தொழில் துறை விசேஷ கவனத்தைப் பெற வேண்டும். மேலும், நாட்டின் சென்மதி நிலுவைகள் பிரதானமாகக் குறைந்த விளைபொருள் விலைகளாலும், உல்லாசப் பயணத்துறை வருமானத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியாலும் பாதிக்கப்பட்டுள்ளதால், இறக்குமதி செய்வதற்கும் கடன்களை அடைப்பதற்குமான சக்தியை நிலை நிறுத்துவதற்காக அதன் (சென்மதி நிலுவைகள்) நிலைமை பலப்படுத்தப்படவேண்டும்.

முடிவாக, பிரதானமாகப் பெருகிவரும் பாதுகாப்புச் செலவுகளாலும், திறமைக் குறைவான அரசாங்கத்துறை முயற்சிகளாலும் அதிக வருமானம் பெறுவதற்கு உதவாத கட்டுக்கோப்பாலும் வளர்ந்து வரும் வரவு செலவுத் திட்டப் பற்றுக்குறை, பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கும் பொருளாதார வளர்ச்சியை உறுதிப்படுத்துவதற்கும் பரிகரிக்கப்படவேண்டும். ஆதலால், ஒரு குறிப்பிட்ட வருடத்தின் வரவு செலவுத்திட்ட உரையை அரசாங்கத்தின் வருமானத்தையும் செலவுகளையும் எடுத்துரைக்கும் ஒரு கூற்றுக மட்டும் நோக்கக் கூடாது.

அதற்குப் பதிலாக, ஒரு நாட்டின் முழு அபிவிருத்திக் குறிக்கோள்களையும் சாதிப்பதற்குத் தேவையான நாளது வரையான பேரண்டப் பொருளாதாரக் கொள்கை நடவடிக்கையென அது (வரவு செலவுத்திட்ட உரை) அங்கிகரிக்கப்படவேண்டும். ஆதலால், எந்த வரவு செலவுத்திட்ட உரையிலும் அடங்கியுள்ள குறிப்பான வருமான – செலவு யோசனைகள் சம்பந்தமாக முக்கியத்துவம் அளிப்பதில் ஒரு பொதுக் கருப் பொருளையும், சங்கமத்தையும் காண்பது சாத்தியமாக வேண்டும்.

முந்திய வ. செ. திட்டங்களின் நோக்கம்

*1977*ம் ஆண்டுக்குப் பிற்பட்ட காலத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத்திட்ட உரைகளை நுணுக்கமாகப் பரிசீலித்துப் பார்த்தால், வருமான யோசனைகள் செலவு யோசனைகள் ஆகிய இரண்டினதும் நோக்கம் வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதும், வேலைவாய்ப்புகளைப் பெருக்குவதுமாகுமென்பது புலப்படும். வரிச் சகாயக் கொள்கைகள் தனியார் முதலீடுகளுக்கும், ஏற்றுமதிகளுக்கும், கைத்தொழில்களுக்கும் ஊக்கமளிப்பதற்காகவே உருவாக்கப்பட்டன. செலவுக்காகப் பணத் தொகைகளை ஒதுக்குவதன் குறிக்கோள் பல்வேறு துறைகள் வளருவதற்கு உதவியாக நீர்ப்பாசனம், மின்சாரம், தந்திப்போக்குவரத்து முதலியன அடங்கிய சமூகப் பொது முதலீட்டு வசதிகளை ஏற்படுத்துவதற்குரிய வசதி செய்வதேயாகும்.

இதையே வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், அடுத்தடுத்து வருடா வருடம் சமர்ப்பிக்கப்பட்ட வ. செ. திட்டங்களில் கண்டுள்ள யோசனைகளுக்கு ஆதாரமாய் அமைந்த எடுகோள்கள், முதலீடுகளையும் வளர்ச்சியையும் வேலை வாய்ப்புகளையும் உண்டாக்கும் நோக்கத்துக்குப் பொருத்தமான ஊக்குவிப்புகளையும், உகந்த நிலைமைகளையும் தாராளமாக்கிய பொருளாதாரம் சிருஷ்டித்துத்தரும் என்பதாகவே இருந்துள்ளனவெனத் தோன்றுகிறது.

எனினும், *1986*ம் வருட வ. செ. திட்ட உரை ''சிறந்த பொருளாதார முகாமைத்துவத்துக்கு ஓர் உறுதியான, திட்டமிட்ட முறை தேவை'' என்று வலியுறுத்தியது. ''முழுப்பொருளாதாரத்துக்கும் திட்டமிட முயன்ற கடந்தகால முயற்சிகளில் அதை அமுல் செய்வதற்குப் போதிய ஏற்பாடு செய்யப்படவில்லையென்பதைக் கவனிக்குமிடத்து, இத்தகைய ஒரு திட்டமிடும் முறையதார்த்தமாகவும், காரிய சாத்தியமானதாகவுமிருக்க வேண்டுமென்று அதே உரையில் குறிப்பிடப்பட்டுள்ளதென்பதும் கவனிக்கப்பட வேண்டும்.''

எனவே, இத்தகைய ஒரு திட்டமிட்ட அணுகுமுறை ஒரே சீரான நிலையிலிருக்க முடியும்; அது ஒரு திறந்த (கட்டுப்பாடற்ற) பொருளாதாரக் கொள்கையுடன் ஒத்துப்போவதாயிருக்கவேண்டுமென்று அரசாங்கம் தெளிவாக அங்கீகரித்துள்ளது. இதையே வேறு சொற்களில் கூறுவதெனில், தனியார் துறையின் தீவிரமான பங்குபற்றல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதார நடவடிக்கைகளில் அரசாங்கத் துறையின் ஈடுபாடுகளுக்கு ஒரு மாற்முக அன்றி அதை நிறைவாக்கும் ஒன்ருகவே கருதப்பட்டுள்ளது.

இந்த அமைவில், அரசாங்கம் ஒரு ''சுழலும் திட்டத்''தின் அடிப்படையில் ஒவ்வொரு வருடமும் ஓர் அரசாங்க முதலீட்டுத் திட்டத்தைத் தயாரித்துள்ளது. இப்பணி ஒரு குறிப்பிட்ட வருடத்தில் வரவு செலவுத்திட்ட யோசனைகள் உருவாக்கப்படுவதற்கு முன்பு செய்து முடிக்கப்பட்டது. அரசாங்க முதலீட்டுத்திட்டம் ஏற்பாடு செய்யும்போதும் பொருளாதாரத்தில் தனியார் துறை பங்குபற்றுவதற்கான வாய்ப்புகளை எடுத்துக்காட்டும் போதும் முதலீடு செய்வதற்கு முதலிடம் அளிக்கப்பட வேண்டிய துறைகளை இனங்காண்கிறது.

### யோசனைகளின் விளைவுகள்

ஒரு வரவு செலவுத்திட்டத்திலுள்ள வருமான - செலவு யோசனைகள் ஒரு பொருளாதாரத்தில் முக்கிய விளைவுகளை உண்டாக்குகின்றன. ஏனென்ருல், அவற்றில் ஒதுக்கும் விளைவுகளும், பகிரும் விளைவுகளும் உள்ளன. உதாரணமாக,' அரசாங்கத்துக்கு வருமானத்தைக் கொண்டுவரும் ஒரு மூலமே வரி விதிப்பு. இதுவே பல்வேறு சமூக, பொருளாதாரத் திட்டங்களுக்கும் வேலைத்திட்டங்களுக்கும் நிதியளிப்புச் செய்ய அரசாங்கத்துக்கு உதவுகின்றது. நேரடி வரிகள் செலுத்தும் திறமையின்படி அறவிடப்படுகின்றன. குறைந்த வருமானமுள்ள மக்கள் பிரிவினர் வருமான வரியிலிருந்தும் செல்வ வரியிலிருந்தும் விலக்களிக்கப்படுகிருர்கள்.

எனவே, ஒப்பியல் ரீதியாக அதிக வருமானமுள்ள செல்வந்தர்களின் வருமானம் மற்றவர்களுக்கு மறு பகிர்வு செய்யப்படுவதற்கு வரி விதிப்பு உதவுகிறது. எனினும், இலங்கை போன்ற வளர்முக நாடுகளில் வருமானத்தை உண்டாக்க நேரடி வரிகளை முற்ருக நம்பியிருப்பது சாத்தியமல்ல. மொத்த அரசாங்க வருமானத்தின் ஒரு விகிதமென்ற முறையில் நேரடி வரிகள் சமீப ஆண்டுகளில் 20 சதவிகிதத்துக்குக் குறைவான தொகைக்கே பொறுப்பாயிருந்துள்ளன.

ஆதலால், சுங்கத் தீர்வைகள், கலால் தீர்வைகள், விற்பனைவரிகள், மொத்த வியாபார வரிகள் உட்பட மறைமுக வரிகள் பெருமளவுக்கு நாடப்படுகின்றன. இது பல வளர்முக நாடுகளில் ஒரு பொது அம்சமாக இருக்கிறது. மற்றப்படி ''வரி விதிப்பதற்குக் கடினமாயுள்ள குழுக்களை'' வரி வலைக்குள் கொண்டு வர, வரி அடிப்படையை விரிவாக்குவதில் மறைமுக வரிகள் அதிக பயனுறுதி வாய்ந்தனவாயிருக்கின்றன.

உதாரணமாக, சிறிய விவசாயிகளும் சிறிய கைத்தொழிலதிபர்களும் மற்றும் சிறிய தொழில் முயற்சியாளர்களும் பெருந்தொகையாகப் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள ஒரு நாட்டில், அவர்கள் எந்த முறையான வியாபார அல்லது வர்த்தக ஸ்தாபனங்களையும் அமைத்திராவிட்டால், அவர்களை வருமான வரிக்கு உட்படுத்துவதற்கான, வாய்ப்பும் திறமையும் வரையறுக்கப்பட்டுள்ளன.

இத்தகைய நிலைமைகளில், மொத்த வியாபார வரிகள், விற்பனைவரிகள், சுங்கத் தீர்வைகள், கலால் தீர்வைகள், போன்ற மறைமுகவரிகள் ஓர் அரசாங்கத்துக்கு வரி வசூலிக்கப் பயனுள்ள கைபிடிகளாகின்றன. எனினும், மறைமுக வரிகள் பொதுவாகப் பிற்போக்குத் தன்மையுள்ளவை என்று கருதப்படுகின்றன. ஏனென்ருல், இத்தகைய வரி விதிப்பு இறுதியில் சாதாரண மக்களின் (நுகர்வோர்) வருமான மட்டங்கள் எப்படியிருந்த போதிலும் அவர்கள் தலைமீதே போய் விழுகின்றன. ஆதலால், உற்பத்தி மீதும் நுகர்வு மீதும் மறைமுக வரிகள் உண்டாக்கக் கூடிய விளைவுகளைக் கணக்கிலெடுத்துக் கொள்வது முக்கியமாகும்.

### ஏற்றுமதி இறக்குமதித் தீர்வைகள்

இதேபோல, மறைமுக வரிகள் என வகைப்படுத்தப்படும் ஏற்றுமதி, இறக்குமதித் தீர்வைகள் வளைந்து கொடுக்கும் கருவிகளாகின்றன. ஏற்றுமதி, இறக்குமதி விலைகளையும் சர்வதேச வர்த்தகத்தில் காணப்படும் போக்குகளையும் அனுசரித்து இத் தீர்வைகளைத் திருத்தியமைக்கமுடியும். அதன்படி, ஏற்றுமதிகளை ஊக்குவிப்பதன் மூலமும் இறக்குமதிகள் மீது கட்டுப்பாடுகளை விதிப்பதன் மூலமும் நாட்டின் சென்மதி நிலுவைகளைப் பெருக்க இத்தகைய வரிகளை உபயோகிப்பது சாத்தியமாக வேண்டும். அத்துடன், கைத்தொழில் உற்பத்தி, நுகர்வோர் பாதுகாப்பு போன்ற பிற குறிக்கோள்களைச் சாதிக்கவும் இவ்வரிகளை உபயோகிக்க முடியும்.

தாராளமாக்கிய ஓர் அணுகுமுறையின் கீழ், காப்பு வரிகளின் பங்களிப்பு அரசாங்கத்துக்கு வெறும் வருமான நடவடிக்கையைவிட மிக முக்கியமாகின்றது. இத்தகைய வரிகளின் அடிப்படைப் பொருளாதார நியாயம் என்னவென்ருல், தொகை அல்லது அளவு, விநியோகம் ஆகிய வற்றின்மீது கட்டுப்பாடுகளை விதிக்காமல் வர்த்தகம் சுதந்திரமாகக் கட்டுப்பாடின்றி நடக்க அனுமதிப்பதும், இறக்குமதிகளையும் ஏற்றுமதிகளையும் வழிப்படுத்துவதற்குக் காப்புவரிகளை உபயோகிப்பதுமாகும். எனவே, உள்நாட்டுக் கைத்தொழிலுக்குப் பயனுள்ள பாதுகாப்பு அளிக்கும் அதே வேளையில், போட்டியுள்ள வர்த்தகம் நடைபெறுவதற்கும் நுகர்வோர் சேமநலத்துக்கும் வழிசெய்யும் வகையில் காப்புவரி விகிதங்கள் நிர்ணயிக்கப்பட வேண்டும்.

புகையிலை மீதும், மது மீதும் கலால் தீர்வைகளை அதிகரிப்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் நிகழ்த்தப்படும் வ. செ. திட்ட உரைகளின் ஒரு பொது அம்சமாக இருந்து வந்துள்ளது. இப்பொருள்களுக்கான கோரிக்கை வளரக்கூடிய தெனக் கருதப்படுவதால், விலையில் ஏற்படும் ஒரு மிதமான அதிகரிப்பின் விளைவாக அவற்றின் நுகர்வில் எந்தக் கணிசமான குறைவும் ஏற்படாதென எண்ணப்படுகிறது. ஆதலால், இத்தகைய பொருள்கள் மீது ஒருவரி விதிக்கப்படும்போது, வருமான வசூல் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

வரவு செலவுத்திட்ட யோசனைகளில், நேரடி வரிகள், மறைமுக வரிகளுடன், லைசென்ஸ் கட்டணங்கள், சேவைகள் சம்பந்தமான பல்வேறு கட்டணங்கள் போன்ற வருமானத்தை அதிகரிக்கக்கூடிய பிற நடவடிக்கைகளும் அடங்கியிருக்கலாம். அரசாங்க சேவைகள், தபால் தந்திப் போக்குவரத்து போன்ற பொதுப் பயன்பாட்டுச் சாதனங்கள் சம்பந்தமாகக் கோரிக்கை விரிவாகாதிருக்கும் கருதுகோளின் அடிப்படையிலும் இந் நடவடிக்கைகள் அமுல் செய்யப்படுகின்றன.

எனினும், கட்டண உயர்வின் விளைவாக இத்தகைய முகவரகங்களுக்கு வரும் வருமானம் அதிகரிப்பதன் பயனாக, இவற்றின் வினைத்திறன் அதிகரிக்க வேண்டும்; பொதுமக்களுக்கான சேவைகள் அபிவிருத்தியடைய வேண்டும். வருமானத்தைச் சேகரிக்கும் கோணத்திலிருந்து நோக்குமிடத்து, இத்தகைய திணைக்களங்களும் முகவரகங்களும் தங்களுடைய மீளவரும் செலவுகளை யேனும் சமாளிப்பதற்கும், சாத்தியமானால், சேவைகளை விரிவாக்குவதற்கும் விருத்தி செய்வதற்கும் தேவையான மூலதனச் செலவுகளுக்கு நிதியளிப்புச் செய்ய கொஞ்சம் உபரி வருமானத்தை உண்டாக்குவதற்கும் போதிய பணம் சம்பாதிப்பதவசியம்.

வரவு செலவுத்திட்டத்தைப் பற்றி நினைக்கும்போது, மக்களிடையே காணப்படும் பொது மனப்போக்கு ''வரவு செலவுத் திட்ட இரகசியங்களை''ப் பற்றிய ஊகங்களுக்கு இடமளிப்பதாகும். மிகப் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் வரவு செலவுத்திட்ட இரகசியங்கள் எனச் சொல்லப்படும் இந்த இரகசியங்கள் வருமானத்தை அதிகரிப்பது பற்றிய யோசனைகளாகவே இருக்கின்றன. இதன் காரணமாக, பல்வேறு நோக்கங்களுக்கும் அரசாங்க செலவினங்களை ஒதுக்கும் ஒரு கருவியென்ற முறையில் வரவு செலவுத்திட்டத்தின் முக்கியத்துவத்தில் அவ்வளவாகக் கவனஞ் செலுத்தப்படுவதில்லை.

**புதிய பொருளாதாரக் கொள்கைகள்**

1977ம் ஆண்டின் பிற்பகுதியில் புதிய பொருளாதாரக் கொள்கைகள் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டு, கட்டுக் கோப்பு சீராக்கப்பட்டதற்குப் பின், மூலதனச் செலவுகளை அதிகரிக்கவும் நடப்புச் செலவுகளைக் கட்டுப்படுத்தவும் மனமறிய முயற்சி செய்யப்பட்டுள்ளதென்பது இச்சந்தர்ப்பத்தில் கவனிக்கப்படவேண்டும்.

பலகாரணங்களின் நிமித்தம் இப்படிச்செய்ய வேண்டியிருந்தது:

1. மூலதனவாக்கத்துக்குப் பெரியதோர் ஊக்குவிப்பு வழங்குவதன் வாயிலாகப் பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்தல்;

2. ஒரு பேரளவிலான அரசாங்க முதலீட்டுத் திட்டத்தின் முன்முக, பின்முக இணைப்புகளை, அனுகூலப்படுத்திக்கொண்டு, உற்பத்தி நடவடிக்கைகளில் பங்குபற்றத் தனியார்துறையைத் தூண்டுதல்;

3. தனிப்பட்ட முதலீட்டாளர்களையும் வெளிநாட்டு முதலீட்டாளர்களையும் கவர்வதற்காக உள்ளமைப்பு வசதிகளைப் புனருத்தாரணஞ்செய்து, நவீனப் படுத்தல்;

4. அதிகமான தொழிலாளர்களுக்கு வேலை தரக்கூடிய அரசாங்கத் துறைத் திட்டங்கள் வாயிலாக வேலைவாய்ப்புகளை வரிவாக்குதல்;

5. வெளிநாட்டு நிதியளிப்புக்காக ஆழ்ந்து சிந்தித்துத் திட்டிய பல தொடர்ச்சியான கருத் திட்டங்களை உள்ளடக்கிய ஓர் அரசாங்க முதலீட்டுத் திட்டத்தின் வாயிலாக, விரும்பப்படும் முதலீடுகளின் மட்டத்துக்கும் கிடைக்கக் கூடியதாயுள்ள சேமிப்புகளின் மட்டத்துக்குமிடையே யுள்ள இடைவெளியை நிரப்ப வெளிநாட்டு உதவிகளைத் திரட்டுதல்.

அதற்கேற்ப, 1977ம் ஆண்டுக்குப் பின் அடுத்தடுத்து வந்த வரவு செலவுத் திட்டங்கள் மீளவரும் செலவுகள் துரிதமாகவளர்வதைக் கட்டுப்படுத்தும் அதே சமயத்தில், மூலதனச்செலவுகளை விரிவாக்குவதில் முழுக் கவனஞ் செலுத்தின. இந்த அணுகுமுறை வரவு செலவுத் திட்டத்திலுள்ள நடப்புக் கணக்குப் பற்றுக் குறையைக் கட்டுப்படுத்தவும், அதன் மூலம் பணவீக்கத்துக்கு முக்கிய காரணமாயுள்ள ஒரு மூலத்தைக் கட்டுப்படுத்தவும் உதவியது. வரவு செலவுத் திட்ட ஏற்பாடுகள் சிறந்த முறையில் நிர்வகிக்கப்படுவதற்காகவும், அத்துடன் மூலதனம் முதலீடு செய்யப்படுவதற்கு வசதி செய்வதற்காகவும், இலவசக் கல்வி, இலவச ஆரோக்கிய வசதி, உணவு மான்ய உதவி ஆகியன அடங்கிய முழுச் சமூக சேமநலத் திட்டத்திலிருந்து அரசாங்கம் திரும்பவில்லையென்பது கவனிக்கத்தக்கது.

**வறியோருக்கு உணவு மான்ய உதவி**

எனினும், உணவு மான்யம் சம்பந்தமாக, இந்த நன்மையை

(21- ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கக்கட்சி

திரு. ரொனி டி மெல்

எங்களது பெருங் கஷ்டங்களை ஒரு சில வார்த்தைளில் சுருக்கிக் கூறிவிடலாம். பாதுகாப்புச் செலவு காரணமாக எங்களது செலவு அளவுமீறி அதிகரித்துள்ளது. 1977 ல் எனது முதலாவது வரவு செலவுத்திட்டத்தில் 50 கோடி ரூபாவாக இருந்த பாதுகாப்புச் செலவினம் இந்த வரவு செலவுத்திட்டத்தில் 1000 கோடிக்கு மேல் அதிகரித்துள்ளது. நான் கூறியதுபோல நான் எதிர் நோக்கிய இரண்டாவது சங்கடம், எமது பிரதான வருமானத் துறைகளான தேயிலை, இறப்பர், தென்னை, உல்லாச பிரயாணம் முதலியவற்றில் வருமானம் குறைந்தமையாகும். 1984 ம் ஆண்டுடன் ஒப்பிடுகை கையில் எமது வருமானம், தேயிலை, இறப்பர், தென்னை, உல்லாசப் பயணம் ஆகியவற்றில் எமது வருமானம் குறைந்ததனால் 800 கோடி ரூபாவுக்கு மேற்பட்ட தொகையினால் குறைந்தது. எனவே ஒரு புறம், பாதுகாப்புச் செலவு 900 கோடி ரூபாவை விட அதிகரித்திருக்க மறுபுறம், வருமானம் 900 கொடி ரூபாவினால் குறைந்திருக்கிறது. அதிலேயே ஏற்பட்ட வீழ்ச்சி 1800 கோடி ரூபா.

வெளிநாட்டு உதவி பெறுவதில் வெட்கப்படுவதற்கு ஒன்றுமில்லை; நாணமடைவதற்கு ஏதுமில்லை; தாழ்வுணர்ச்சிக்கு எதுவுமில்லை; வெளிநாட்டுதவியில் தாழ்வுச் சிக்கலுக்கும் ஒன்றுமில்லை. அபிவிருத்தி உதவி குறித்தும் அபிவிருத்திக் கூட்டுறவு குறித்தும் எதிர்க்கட்சி விசித்திரமானதொரு சிக்கலுக்கு உள்ளாயிருக்கிறது. இந்தச் சிக்கலை நீக்கிக் கொள்ளுங்கள். இந்த உதவியைப் பெறுவதில் நம்மை நாம் தாழ்வாக எண்ணிக்கொள்வதற்கு ஏதுமில்லை. மூன்றும் உலக நாடுகள் பிச்சாபாத்திரத்தை ஏந்திச் செல்வதாகக் கூறுவது வெறும் கட்டுக்கதை. நாம் பிச்சாபாத்திரத்தைக் கையில் ஏந்திச் செல்லவேண்டியதில்லை. அப்படிக்கூறுவது, வெளிநாட்டுதவியைப் பற்றிய மிகைப்பட்ட கூற்றாகும்.

வெளிநாட்டுதவியில் குறைந்தபட்சம் 85 சதவீதமானது சலுகைமிக்க நியதிகளின் கீழ் பெறப்பட்டுள்ளன. ஏறக்குறைய 30 சதவீதம் திருப்பிச் செலுத்தத் தேவையற்ற உதவியாக - நீங்கள் அதனை அன்பளிப்பு என்று கூறலாம் - தரப்பட்டுள்ளது. சலுகைகளோடு தரப்பட்ட 85 சதவீதம் போக மீதி நீள் தவணைக் கடன்களாகப் பெறப்பட்டுள்ளன. சில 50 வருடங்களிலும் சில 40 வருடங்களிலும் சில எவ்வித வட்டியும் இல்லாமலும் பெறப்பட்டுள்ளன. 40 வருடங்களுக்குப்பின் கடனாகப் பெற்ற தொகையை மட்டுமே திருப்பிச் செலுத்த வேண்டும், சில கடன்களுக்கு ½ சதவீத வட்டி செலுத்த வேண்டும். சிலவற்றுக்கு ஒரு சதவீதமும் சிலவற்றுக்கு 2 சதவீதமும் சிலவற்றுக்கு 3 சதவீதமும் வட்டி செலுத்த வேண்டும். இத்தகைய கடன் பெறமுடியுமானால் எந்த நாடும் பெற்றுக்கொள்ளும்.

நான் அடிக்கடி இச்சபையில் கூறியிருப்பதுபோன்று, நிதி அமைச்சர் என்ற வகையில் நான் எப்பொழுதும் எமது கடனிறுக்கும் விகிதத்தை முடியுமானால் 20 சதவீதத்துக்குக் குறைவாக வைத்துக் கொள்ளவே முயன்றுள்ளேன். ஆனால் இம்முறை 1986ல் ச. நா. சபைக் கொடுக்கல் வலங்கல்கள் தவிர்ந்த, எல்லாமடங்கிய விகிதம் 24 சதவீதமாகும். ச. நா. சபைக் கொடுக்கல் வாங்கல்களுட்பட அது 30 சதவீதம்வரை சென்றுள்ளது. இதை நாம் குறைக்கலாம் என நம்புகிறோம். எதிர்காலத்துககு எமக்கு ஒரு திட்டமிருக்கிறது. எமது தற்போதைய கடன் சட்டகத்தின் அடிப்படையில் கடன் இறுத்தல் விகித்தை 1987ல் 24 சதவீதமாகவும், 1988 ல் 22 சதவீதமாகவும், 1989 ல் 20 சதவீதமாகவும், 1990 ல் 16 சதவீதமாகவும் குறைக்கலாம் என நம்புகிறோம்.

எதிர்க்கட்சித் தலைவர், அடிமட்டத்திலுள்ள 40 சதவீதமானோரின் மொத்த வருமானம் பற்றிக் கூறினார். அடிமட்டத்திலுள்ள 40 சதவீதமானோரின் மொத்த வருமானம் குறைந்துவிட்டது என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். எவ்வாறாயினும், அடிமட்ட 40 சதவீதமானோரின் திட்டவட்டமான வருமானம் வியக்கத்தக்க அளவு அதிகரித்துள்ளது. அடிமட்ட 40 சதவீதமான மக்களின் சராசரி வருமான விபரங்களைத் தருகிறேன். 1973 ல் அவர்களின் சராசரி மாதாந்த வருமானம் ரூ. 85. 1978 லும் 1979 லும் ரூ. 187. 1981, 1982 ல் ரூ. 327. அதற்கு பிந்திய ஆண்டுகளுக்கான புள்ளி விபரங்கள் என்னிடமில்லாதது குறித்து வருந்துகிறேன்.

இது சாதாரணமாக 1973க்கும் 1981க்குமிடையில் 282 சதவீத அதிகரிப்பைக் காட்டுகிறது. 1973க்கும் 1982க்குமிடையில் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் 151 சதவீதத்தால் அதிகரித்தது. அதாவது அதே கால எல்லையில், இதன் பொருள் அடிமட்டத்திலுள்ள 40 சதவீதமானோரின் வருமானம் 131 சதவீதத்தால் அதிகரித்துள்ளது என்பதாகும். 1973க்கும் 1981, 1983க்குமிடையில் அடிமட்ட 40 சதவீதமானோரிடையே வருமானம் உழைப்போரின் எண்ணிக்கையும் 1.18 முதல் 1.27 பேராக அதிகரித்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இது இத்துறையில் வேலைவாய்ப்பு அதிகரித்துள்ளது என்பதைப் பிரதிபலிக்கிறது. இதிலிருந்து, வருமானம் பெறுபவரின் சராசரி வருமானம் அதிகரித்துள்ளது என்றுமட்டுமன்றி, வருமானம் உழைப்போரின் எண்ணிக்கையும் ஏறத்தாழ 8 சதவீதத்தில் அதிகரித்துள்ளது என்றும் நாம் நியாயமாக முடிவு செய்யலாம். இதன் கருத்து யாதெனில் தாராளப் பொருளாதாரக் கொள்கை அமுல் செய்யப்பட்டபின் குடும்பங்களின் வருமானமும் குறிப்பிடத்தக்க வகையில் அதிகரித்துள்ளது என்பதாகும்.

சேமநலன், இலவசக்கல்வி, இலவச மருத்துவம், இலவசப் பாடப் புத்தகங்கள் என்பவற்றில் நாம் எதையும் குறைக்கவில்லை. கமக்காரர்களுக்கு உலக விலையின் அரைவாசியில் உரம் வழங்குகிறோம். எமது தேயிலை, இறப்பர், தென்னை மீள் நடுகை உதவிப்பணம் குறைக்கப்படவில்லை; கூட்டப்பட்டிருக்கிறது. புது நடுகை உதவிப்பணம் கூட்டப்பட்டிருக்கிறது. ஏனைய பயிர்களுக்கு உதவிப் பணம் உணவு, மண்ணெண்ணெய் முத்திரைகள்; பாடசாலைப் பிள்ளைகளுக்குச் சலுகை பஸ்டிக்கட்டுகள். போக்குவரத்துக்கு உதவிப் பணம்; புகையிரதச் சேவைக்கும் இ. போ. ச. வுக்கும் இயன்றளவு உதவிப்பணம் அளித்துள்ளோம். வீடமைப்புக்கு, நீருக்கு, கிராமப் புறங்களுக்கு மின் வழங்கலுக்கு எல்லாம் மானியம் வழங்கியுள்ளோம். அப்படியிருக்க இந்நாட்டில் மானியம் வழங்கப்படுவதில்லை என்று சொல்பவர் யார்? ஆனால் வளர்ச்சி, முதலீடு, அபிவிருத்தி என்பவற்றைக் கொண்டு மானியங்களைச் சமப்படுத்தல் இவ்வாண்டுகள் அனைத்திலும் எமது நிதிக் கொள்கையாக விளங்கியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்க்கட்சி

### திரு. லக்சுமன் ஜயக்கொடி

இந்த வரவு செலவுத்திட்டத்தில் வலிமையோ வீரியமோ சாதனை அல்லது நம்பிக்கையோ இல்லை. இது 1960 முதல் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத்திட்டங்களில் மிகப்பெரிய மனச்சோர்வை ஏற்படுத்தும் திட்டமாகும். பொருளாதாரத் தாராளமயம் எனக் கூறப்படும் நீதி அறிமுகப்படுத்தப்பட்டு பத்தாண்டுகளுக்குப்பின் இன்று பொருளாதாரமானது ஒரு தேக்க நிலையை அடைந்துள்ளது; யுத்தத்துக்கு முன்பிருந்த நிலையை அடைந்துள்ளது. அன்று வெளிநாடுகளை பெரும்பாலும் நம்பியிருக்கவேண்டிய காலனித்துவப் பொருளாதாரம் இருந்தது. மொத்த வியாபாரம், வங்கித் தொழில், வர்த்தம், விவசாயம், இறக்குமதி – அத்தனையும் வெளிநாட்டவர் கைகளில் இருக்கின்றன.

பொருளாதாரம் இப்பொழுது ஓர் இருண்ட பாதையிற் சென்று கொண்டிருக்கிறது. பாரிய கொள்கைச் சீர்திருத்தங்கள், சிறந்த பொருளாதார, நிதி முகாமை, திடமான பொருளாதாரத் திட்டமிடல் என்பன இல்லாமல் இப்போக்கைத் திருத்த முடியாது என்று தோன்றுகிறது. சென்ற பத்தாண்டுகளாக இவ்வரசாங்கம், உள்நாட்டு வளங்களைத் திரட்டுவதில் போதிய கவனஞ் செலுத்தாமல் பெருமளவில் வெளிநாட்டு வளங்களைத் திரட்டுவதற்குப் பெருமுயற்சி செய்தது. அதில் பெரும்பகுதி தவறான முகாமை, திருட்டு, மோசடி, ஊழல் என்பவற்றின் மூலம் விரயமாக்கப்பட்டுவிட்டது.

சென்ற ஒன்பது ஆண்டுகளாக இவ்வரசாங்கம் கடைப்பிடித்த பொருளாதாரக் கொள்கைகள், இந்நாட்டில் ஏறத்தாழ 80 சதவீதமான மக்களுக்குச் சொல்லொணாத் துன்பத்தை ஏற்படுத்தியுள்ளன. இவ்வரசாங்கத்தின் கொள்கைகள், மேல் மட்டத்திலுள்ள 20 சதவீதமானவர்களுக்கு மட்டுமே உதவியுள்ளது. சென்ற ஒன்பது ஆண்டுகாலமாக இலங்கை முன்னொருபோதும் காணாத பணவீக்கத்தைக் கண்டது. இதற்கு இவ்வரசாங்கத்தின் விரிவாக்கக் கொள்கையும் ஓரளவு காரணமாகும். 1977 ல் 203.2 ஆக இருந்த கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் 1985 இறுதியில் 575.3 ஆகவும் இன்று 618 ஆகவும் உயர்ந்துள்ளது. இது வருடாந்தம் சராசரி 22 சதவீத அதிகரிப்பைக் காட்டுகிறது. 1970 - 77ம் ஆண்டு காலப் பிரிவில் வருடாந்த அதிகரிப்பு 7 சதவீதமாகவே இருந்தது.

உணவுத் துறையைப் பொறுத்தமட்டில், 1977 முதல் இதைவிடக் கூடுதலாக அதிகரித்து 1977 - 1985 ஆண்டுகளுக்கிடைப்பட்ட காலத்தில் சராசரி வருடாந்த அதிகரிப்பு 25 சதவீதமாக இருந்தது. அரிசி, மா, பாண் போன்ற அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலை 1977ம் ஆண்டின் பின் 400 சதவீதம் அதிகரித்துள்ளது. இந்த வரவு செலவுத்திட்டத்தோடு மாவின் விலை கிலோ ஒன்றுக்கு மேலும் 30 சதத்தால் அதிகரிப்பது தவிர்கக முடியாததாகும். அத்துடன் அரிசியின் விலை அதிகரிப்பதும் தவிர்க்க முடியாததாகும்.

தற்போதைய வேலையில்லாத் திண்டாட்டம் மிகப் பாரதூரமான நிலைமையை அடைந்துள்ளது. 1981ல் கூட, 1981 குடிசன மதிப்பீட்டின்படி வேலையில்லாமை 18.3 சதவீதமாக இருந்தது. இதன்படி 1981 ல் 50 இலட்சம் தொழிலாளரில் 10 இலட்சம் பேர் வேலையில்லாதிருந்தனர். சில மதிப்பீடுகளின்படி வேலையில்லாதிருப்போரின் தொகை பதினைந்து லட்சம் பேர் அல்லது 25 சதவீதமாகும்.

1977 இறுதியில் இலங்கையின் வெளிநாட்டுக் கடன் நிலுவை 1060 கோடி ரூபாவாக இருந்தது. இது 1985 இறுதியில் வானைமுட்டும் அளவில் 6770 கோடி ரூபாவாக அதிகரித்தது. 1977 முதல் அதிகரித்த தொகை 5000 கோடி ரூபாவாகும். ஒரு தலைக்கு 1977 ல் 735 ரூபாவாக இருந்த இந்நிலுவை 1985 ல் 4,454 ரூபாவாக அதிகரித்தது. இது 6 மடங்கு அதிகரிப்பைக் காட்டுகிறது. இவ்வதிகரிப்பில் ஒரு பகுதிக்குக் காரணம் இலங்கை ரூபாவின் கண்டபடியான மதிப்பிறக்கமாகும். இம்மதிப்பிறக்கம் 1977 முதல் 360 சதவீதத்தை ஒத்ததாகும். இம்மதிப்பிறக்கத்தின் பிரதான நோக்கம் இலங்கைப் பொருட்களை மிகக் கூடியளவு போட்டிக்குரியனவாக ஆக்குவதாகும். எனினும் இதுவரை அது நடைபெறவில்லை. மதிப்பிறக்கம் பணவீக்கத்தையே தோற்றுவித்துள்ளது. இதனை நாம் அனைவரும் கடந்த ஏழு, எட்டு ஆண்டுகளாகக் கண்டு வருகிறோம்.

### திரு. அநுரா பண்டாரநாயக்கா

எனக்கு மகிழ்ச்சி என்பதே இல்லை. மகிழ்ச்சியில்லை என்பதை விட, இந்த வரவு செலவுத்திட்டமானது, இதற்கு முந்திய ஆண்டுகளின் வரவு செலவுத்திட்டங்களின் அடிச்சுவட்டையே பின்பற்றிச் செல்கிறது என்பதைக் காண மனச்சோர்வடைகிறேன். இந்த வரவு செலவுத்திட்டம் இலங்கையில் நாசமும் குழப்பமும் நிறைந்த ஒரு கால கட்டத்தைத் தோற்றுவிக்கும் என்பது மட்டுமல்ல; மீள்வதற்கு மிகக்கடினமான ஒரு நிலைக்கும் எம்மைத் தள்ளிவிடும்.

### திரு. முனசிங்ஹ

இவ்வரசாங்கம் 10 ஆண்டுகள் அதிகாரத்தில் இருந்திருக்கிறது. அது வெளிநாட்டுக்கடனை வெகுவாக அதிகரித்துள்ளது. ஆனால், கடன் பெற்ற அளவுக்கு உற்பத்தி அதிகரிக்கவில்லை.

### திரு. தினேஷ் குணவர்த்தன

இந்த வரவு செலவுத்திட்டம் இந்நாட்டு மக்களின் அபிலாசைகளுக்கு எதிரான ஐ.தே.கட்சிக் கொள்கையை அம்மணமாக எடுத்துக் காட்டுகிறது. இது மக்களுக்கு எவ்வித நிவாரணமும் அளிக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏற்றுமதிகளும் வரவு செலவுத் திட்டமும் பொருளாதாரமும்

கலாநிதி டப்ளியு. எம். திலகரத்ன

உலக நாடுகள் அனைத்துக்கும் பொருந்தக்கூடிய அபிவிருத்திப் பாதையொன்று இல்லை. இறைமையுள்ள பொருளாதார அமைப்பு ஒவ்வொன்றும், அதன் முழுமையான அபிவிருத்தி உபாயத்திற்கு அது திட்டவட்டமாக எதிர்நோக்க வேண்டிய யதார்த்த நிலைமைகளை அடிப்படையாகக் கொள்ளல் வேண்டும். உள்நாட்டு மூலப் பொருட்களையும் உள்நாட்டு சேமிப்புக்களையும் அடிப்படையாகக் கொண்ட, பலம் வாய்ந்த ஆக்கப்பொருள் துறை ஒன்றனை உருவாக்க முடியுமானால் தான், சொந்தக்காலில் நிற்கத்தக்க உபாயத்தின் மீது அமைக்கப்பட்ட கட்டுப்பட்ட பொருளாதார முறை மக்களின் நல்வாழ்வை விருத்தி செய்யமுடியும். இரண்டில் ஒன்றைத் தெரிவு செய்யத்தக்க நிலையில் இலங்கை போன்ற நாடுகளில்லை. போதியளவு சேமிப்பை உருவாகக்கூடிய திறன் எமக்கில்லை. அல்லது பொருளாதார ரீதியாக உருப்படியான, பலம் வாய்ந்ததொரு மூலதனப் பொருள் துறையைக் கட்டியெழுப்புவதற்கு அவசியமான வளங்களோ பெரிய சந்தையோ எமக்கில்லை. இந்நிலையில் நீண்டகால, குறுகியகால தொடர்ச்சியான வளர்ச்சியை உருவாக்குவதற்கு அவசியமான மூலதனப் பொருட்களையும், இடைநிலைப் பொருட்களையும் இறக்குமதி செய்ய நாம் நீர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம். இலங்கை போன்ற நாடுகள், அவற்றின் இறக்குமதி மட்டத்தை உயர்த்த முடியுமானால்தான் வளர்ச்சி வேகத்தை நிலைநிறுத்த முடியும்.

இந்நிலை, கூடிய ஏற்றுமதி வருமானத்தைக் கொண்டே நிலைத்திருக்கச் செய்யமுடியும். எனவே எமது நாட்டைப் போன்ற நாடுகளில் நீண்டகால வளர்ச்சிக்கு ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட அமைப்பே சிறந்த வாய்ப்புகளை அளிக்கமுடியும். இந்தியா, சீனா போன்ற பெரிய நாடுகளிற் கூட உள்நோக்கிய கட்டுப்படுத்தப்பட்ட கொள்கைகள், விரைவிலோ, காலப் போக்கிலோ வளர்ச்சிக்குத் தடையாக அமைகின்றன. இலங்கை போன்ற ஒரு நாட்டில் ஏற்றுமதி பன்முகப்படுத்தப் படாத பட்சத்திலும் வளர்ச்சி ஏற்படாத நிலையிலும் அபிவிருத்தி தொடர்ந்து நடைபெறுவது சாத்தியமானதல்ல.

தொடக்க நிலையில் அரசாங்கம் கைக்கொண்ட அபிவிருத்தி உத்தி பயனளித்தது. துரித மகாவலி அபிவிருத்தித் திட்டம், வீடமைப்புத் திட்டங்கள், மற்றும் அபிவிருத்தி உத்திகள் என்பன உயர்ந்த வளர்ச்சி வீதத்தையும் உயர்ந்த முதலீட்டு வீதத்தையும் நாடு அடைவதற்கும், வேலையில்லாமை வீதத்தைக் குறைப்பதற்கும் உதவியுள்ளன. இவ்வபிவிருத்தி முயற்சிக்கு தேசிய சேமிப்பை விட அதிகமான வளங்கள் தேவைப்பட்டன. இவ்விடைவெளி வெளிநாட்டு நிதியைக் கொண்டு நிரப்பப்பட்டது. இதில் ஒரு பகுதி கொடையாக வந்தது. மற்றொரு பகுதி மிகச் சிலாக்கியமான கடன்களாகப் பெறப்பட்டது. சிறுதொகைகள் வர்த்தகக் கடன்களாக வெளிநாடுகளிடம் பெறப்பட்டன.

இவ்வாறாக, 1978 முதல் தொடர்ச்சியான நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறைகள் இருந்து வந்தன (சென்மதி நிலுவையில்). இப்பற்றாக்குறை 1980 லும் 1982 லும் எஸ். டி. ஆர். 50 கோடியாகவும், 1978 லும் 1984 லும் 10 கோடிக்குக் குறைவாகவும் இருந்தது. இவற்றுக்கு வெளிநாட்டு வளங்களிலிருந்து நிதியளிக்கப்பட்டது. எமது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இப்பற்றாக்குறைகள் சராசரி 8.5 சதவீதமாக இருந்தன. இவை 1980ல் 16 சதவீதமாக இருந்தன. வெளிநாட்டிலிருந்து நிதி வந்து கொண்டிருக்கும் வரையும் அதனால் ஏற்படும் கடன் பளு தாங்கக்கூடியதாக இருக்கும் வரையும் வெளிநாட்டு நிதியில் தங்கியிருக்கும் இவ்வுத்தி கையாளப்படலாம். ஆனால், சலுகை உதவி பெறுதல் இப்பொழுது வரவரக் கடினமாகி வருகிறது. வர்த்தகக் கடன் பெறுவதனால், கடன் அடைக்கும் பொறுப்பு தாங்க முடியாத நிலையை அடையும் நிலையை நாம் விரைவிலேயே எதிர்நோக்க வேண்டிவரும். கடன் அடைப்புப் பளு ஏற்கனவே எமது ஏற்றுமதிச் சம்பாத்தியத்தில் 30 சதவீதமாக உயர்ந்துள்ளது. இக்கடன் தீர்ப்பு மட்டம் பற்றி நாம் கவனஞ் செலுத்தவேண்டும். வெளிநாட்டுக் கடன் பெறுவதைக் கடுமையாகக் குறைப்பதற்கு இதற்குரிய பரிகாரமாகாது. வெளிநாட்டுக் கடன் பெறுவதை நாம் அளவுமீறிக் குறைத்தால் அது, எமது அபிவிருத்தி முயற்சியையும் அதன் வேகத்தையும் வெகுவாகப் பாதிக்கும்.

இதற்குரிய தீர்வு, போதியளவு இறக்குமதியைப் போலவும் எமது கடன் தீர்ப்புப் பளுவைக் குறைப்பதற்கும் போதிய அளவுக்கு பொருட்கள், சேவைகளின் ஏற்றுமதியை விரிவாக்குவதாகும். ஒட்டுமொத்தமாக இறக்குமதிகளுக்குத் தடைவிதிப்பதோ, சிலவற்றைத் தெரிவு செய்து தடைவிதிப்பதோ இதற்குத் தீர்வாகாது.

சென்ற ஒன்பது ஆண்டுக் காலத்தில் பொருளாதாரத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்சாகத்தை ஏற்படுத்திய துறைகள் இப்பொழுது முதிர்ச்சியடைந்துள்ளன. சந்தைப்படுத்தலைத் தாராளமாக்கியதனுல் கூடிய பயனளித்த நெல் துறையும் யதார்த்தபூர்வமான விலையிடற் கொள்கைகளும், நாம் அரிசியில் தன்னிறைவு நிலைக்குக் கிட்டிய மட்டத்தை அடைந்திருப்பதனுல் கட்டுப்படுத்தப்படும். மரப்பயிர் உபதுறையில் மேற்கொள்ளப்பட்டுள்ள பாரிய முதலீடு, பல்லாண்டு காலமாகக் கைவிடப்பட்டிருந்த நிலைக்கு ஈடு செய்வதை நோக்கமாகக் கொண்டதாகும். உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்படுவதைத் தடுப்பதற்கு இம் முதலீடு அவசியமாயிற்று. இடைநிலைத் தவணையில் இம்மரப்பயிர்கள் 2 அல்லது 3 சதவீதத்திற்கு மேல் வளர எதிர்பார்க்கப்படவில்லை. வளர்ச்சி, வேலைவாய்ப்பு உருவாக்கம் என்பவற்றுக்குக் குறிப்பிடத்தக்க வகையில் உதவிய வர்த்தக, நிர்மாணத்துறைகளிலும் வேகம் குறைந்துள்ளது. தாராளப் பொருளாதாரக் கொள்கை அமுல் நடத்தப்பட்டபின் அடக்கிவைக்கப்பட்டிருந்த தேவைகள் நிறைவேற்றப்பட்டுள்ளமையே இதற்குக் காரணமாகும்.

சீனி உற்பத்தி, பண்ணை அபிவிருத்தி, கடற்றெழில் ஆகிய துறைகளில் இறக்குமதி மாற்றீட்டு நடவடிக்கைகளுக்கு ஓரளவு இடமுண்டு. எவ்வாருயினும், இத்துறைகளில் முயற்சிகளை அதிகரிப்பது, நீண்டகாலமாக இருந்து வந்த வேலையில்லாமையை குறைத்து ஆண்டுதோறும் 135,000 தொழிலாளருக்குத் தொழில் வாய்ப்பு அளிக்கும் பொருட்டு நாம் கட்டியெழுப்பியுள்ள வளர்ச்சி வேகத்தைப் பேணுவதற்குப் போதியதன்று.

எனவே பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்றுமதித்துறையே இயந்திரமாக இருக்க வேண்டும். பொருளாதாரத்தின் இயக்கத்திற்கும் தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதற்குமான பொறுப்பில் பெரும்பங்கு விவசாய-கைத்தொழில் உற்பத்திப் பொருட்களுட்பட கைத்தொழில் ஏற்றுமதிகளைச் சார்ந்ததாகும். கைத்தொழில் ஏற்றுமதியை விருத்தி செய்தல் வளர்ச்சியையும் தொழில் வாய்ப்பையும் ஊக்குவிப்பதற்கு மட்டுமன்றி, எமது சென்மதி நிலுவையை உருப்படியான அடிப்படையில் அமைத்தற்கும் அவசியமான பன்முகப்படுத்தலைச் சாதிப்பதற்கும் அவசியமானதாகும்.

யதார்த்த பூர்வமாக நோக்குகையில் நாம் செல்லவிருக்கும் பாதை இலகுவாக இருக்கப் போவதில்லை என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். சர்வதேச சூழல் ஏற்றுமதி வளர்ச்சிக்கு உகந்ததாக இல்லை. மகா யுத்தத்துக்குப் பின்னர், ஏற்றுமதியை முன்னணியில் கொண்டு மூன்ரும் உலகில் ஏற்பட்ட வளர்ச்சி பற்றிய கதைகள் 1960ம் 70ம் ஆண்டுத் தொடர்களில் இடம் பெற்றவையாகும். அக்காலத்தில் விரிவடைந்து வந்த உலக வர்த்தகத்துறையின் வளர்ச்சி அனுகூலங்களை இந்நாடுகள் பயன்படுத்தின. உலக வருமானங்களும் வர்த்தகமும் அந்நாட்களில் துரிதமாக வளர்ந்து கொண்டிருந்தன. ஏற்றுமதி வளர்ச்சிக்கு ஏற்ற சில கொள்கைகளைக் கையாண்டு சில நாடுகள் அவற்றின் ஏற்றுமதியிலும் அதற்கேற்ப உண்மையான வருமானத்திலும் வளர்ச்சி காண இயலுமாயிற்று.

எவ்வாருயினும், 1970ம் ஆண்டுத் தொடரின் பிற்பகுதியில் நிலைமை முற்றிலும் வித்தியாசமானதாயிற்று. 1982 வரை, உலக பொருளாதாரம் யுத்தத்திற்கு பிந்திய காலத்தின் மிக மோசமான வீழ்ச்சியை எதிர் நோக்கியது. அதன் பின்னர் நிலைமை ஓரளவுக்குச் சீரடைந்துள்ளது. எவ்வாருயினும் இச்சீர் நிலை உறுதியானதாக இல்லை. அதனுல் உலக வர்த்தகம் தொடர்ந்து மந்த கதியிலேயே நடைபெற்று வருகிறது.

இவ்வாண்டின் வரவு செலவுத்திட்டம் பொருட்களை உற்பத்தி செய்து உள்ளபடியாக ஏற்றுமதி செய்வோருக்கு வழங்கும் வர்த்தக முயற்சிகளுக்கு இறக்குமதி வரிக் கழிவை அளித்தது. வங்கிகள் நேரடியாகக் கொடுப்பனவு செய்வதற்கான ஏற்பாட்டின் மூலம் இதற்கான நடைமுறைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. ஏற்றுமதி வரிகளைப் பொறுத்தவரை, அரசாங்கத்தின் வருமான இலக்குடன் ஏற்றுமதிக் கைத்தொழில்களுக்குப் போதிய இலாப எல்லைகளைச் சமப்படுத்தும் இக்கட்டான பொறுப்பு அரசாங்கத்திற்குண்டு. இவ்விடயத்திலும் ஓரளவு முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. தேயிலை, இறப்பர், தென்னை ஆகியவற்றுக்குரிய தீர்வை பல ஆண்டுகாலத்தில் படிப்படியாகக் குறைக்கப்பட்டுள்ளது. கைத்தொழில், கனிப்பொருள் ஏற்றுமதிகளில் இப்பொழுது மீன் பொருட்களும் காரீயமும் மட்டுமே தீர்வைக்கு உட்படுத்தப்படுகின்றன. பாதுகாப்புப் பலப்படுத்தலுக்கு நிதியளிக்கும் தேவை இல்லாமற் போனதும் ஏற்றுமதியாளர்களுக்கு மேலும் நிவாரணம் அளிப்பதுபற்றி ஆலோசிக்கப்படலாம்.

1977 முதல் ஏற்றுமதித் துறைக்கும் பல நேரடி வரிச்சலுகைகள் அளிக்கப்பட்டுள்ளன. 1978ல் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய வரிச் சீர்திருத்தங்களின் கீழ், பாரம்பரியமற்ற பொருட்களை ஏற்றுமதி செய்யும் எல்லாக் கம்பெனிகளுக்கும் ஓர் ஐந்தாண்டு வரி விடுதலை அளிக்கப்பட்டது. அத்துடன் விளம்பரம், மற்றும் விற்பனை ஊக்கப்பாடுகள், ஏற்றுமதி தொடர்பாக மேற்கொள்ளப்படும் பிரயாணம் என்பவற்றுக்கும் வரிக்கழிப்பு அளிக்கப்பட்டது. ஏற்றுமதிகளுக்குச்சார்பாக, ஊக்கப்பாட்டு அமைப்பை நகர்த்துவதற்கு ஏற்ற மேலும் பல நடவடிக்கைகள் 1984 வரவு செலவுத்திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தாண்டு வரி விடுதலை 1983 மார்ச் 31ம் திகதி முதல் ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்ட முயற்சிகளுக்கு மட்டுமே உரியதாக ஆக்கப்பட்டது. சமீபத்திய வரவு செலவுத்திட்டத்தில், சம்பந்தப்பட்ட கைத்தொழில் இலாபகரமாக நடைபெறத் தொடங்கும் முதலாவது ஆண்டிலிருந்தே வரி விடுதலைச் சலுகை தொடங்கும் எனக் கொள்ளப்பட்டது. அத்துடன் நிதி அமைச்சர் அங்கீகரிக்கும் முயற்சிகளில் முதலீடு செய்யும் பங்காளிகள், அவர்களின் முதலீட்டுக்கும் நிவாரணம் பெறுவதற்கு உரித்துடையோராவர். வரி விடுதலைக்கு அருகதையுள்ள முயற்சிகள் அளிக்கும் பங்கிலாபங்களுக்கும் வரி விடுதலை அளிக்கப்பட்டது.

1985 வரவு செலவுத்திட்டத்தில், 75 சதவீத தேறிய வெளிநாட்டுச் செலாவணி உள்ளடக்கத்தைக் கொண்ட ஏற்றுமதிகளுக்கு, ஐந்தாண்டு முழு வரி விடுதலையுடன் மேலும் பத்தாண்டுகளுக்கு அரை வரி விடுதலையும் அளிக்கப்பட்டது. இது ஐந்தாண்டு அரை வரி விடுதலையாகக் குறைக்கப்பட்டு 50 சதவீத வெளிநாட்டுச் செலவாணி உள்ளடக்கம் கொண்ட ஏற்றுமதிகளுக்கும் இச்சலுகை விரிவாக்கப்பட்டது. 1978 முதல் இரத்தினக் கற்களை ஏற்றுமதி செய்யும், வெளிநாட்டு நாணயத்திற்கு கற்களையும் நகைகளையும் விற்பனை செய்யும் அல்லது அரச இரத்தினக்கற் கூட்டுத்தாபனத்திற்கு விற்பனை செய்யும் நிறுவனங்களுக்கு எல்லையற்ற காலத்துக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டது.

நிதி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட குறிப்பிட்ட பொருட்கள் தொடர்பான களஞ்சிய வர்த்தகத்தின் கிடைக்கும் இலாபங்களும் வரி விலக்குக்கு உரித்துடையவையாகின. விற்பனை மொத்த வரிக்கழிவுத் திட்டத்திற்கமைய, பாரம்பரியமற்ற ஏற்றுமதிப் பொருட்களை உற்பத்தி செய்வதற்காக உபயோகிக்கப்படும் மூலப்பொருட்களுக்கு விற்பனை மொத்த வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது. தனது உற்பத்தியில் 50 சதவீதத்தையேனும் எற்றுமதி செய்யும் கைத்தொழில் ஒன்றின் உபயோகத்திற்காக இறக்குமதி செய்யப்படும் இயந்திரங்களுக்கும் இவ்விலக்கு உரியதாகும்.

இதுவரை நான் குறிப்பிட்ட வரிச் சலுகைகள், பாரிய கொழும்புப் பொருளாதார ஆணைக் குழுவுக்கு உட்படாத கைத்தொழில் முயற்சிகளுக்கு மட்டும் ஏற்புடைத்தானவையாகும். பா. கொ. பொ. ஆணைக்குழு வர்த்தக முயற்சிகளுக்கு, வேலை வாய்ப்பு உருவாக்கம், வெளிநாட்டுச் செலாவணிச் சம்பாதிப்பு போன்ற பல்வேறு சிறப்பியல்புகளைப் பொறுத்து 2 முதல் 10 ஆண்டுகள் வரை வரி விடுதலை அளிக்கப்படுகிறது. தொடக்கத்தில் வரிச்சலுகை அளிக்கப்படும் காலத்தைத் தொடர்ந்து மேலும் 15 ஆண்டு சலுகைக் காலம் அளிக்கப்படுகிறது. அக்கால எல்லையில் கூட்டு வருமான வரிக்குப் பதில் 2 சதவீத விற்பனை மொத்த வரிமட்டுமே விதிக்கப்படுகிறது. ஏற்றுமதியாளர்கள் தம் மூதலீட்டு, தொழிற்படு மூலதனத் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு சலுகை அடிப்படையிலான நிதி வழங்குவதற்கு பல திட்டங்களுண்டு.

1977ம் ஆண்டு கொள்கைச் சீர்திருத்தம் செய்யப்பட்டபின்பு கூட எமது ஏற்றுமதி அபிவிருத்தி முயற்சிகளுக்கு மட்டுப்பாடாக அமைந்த மிக முக்கியமான பிரச்சினைகளில் ஒன்று, உற்பத்தி அடித்தளத்தின் போதாமையாகும். தொடக்க வருடங்களில் ஊக்கப்பாட்டு அமைப்பு விற்க முடியாத துறைகளான தொழில், போக்குவரத்து, நிர்மாணம், நிதி ஆகியவைகளுக்குச் சார்புடையதாக இருந்தது. இது அனேகமாகத் தவிர்க்க மூடியாததாக இருந்திருக்கலாம். நீண்ட காலக் கட்டுப்பாடுகளுக்குப்பின் ஒரு பொருளாதார அமைப்பு தாராளமயப்படுத்தப்படும் போது, நான் குறிப்பிட்டது போன்ற துரிதமாகப் பயனளிக்கும் துறைகளுக்கு வளங்கள் ஈர்க்கப்படுகின்றன.

இவ்வாருக, ஏற்றுமதிக்கான உற்பத்தி அடித்தளத்தின் அபிவிருத்திக்கு, விற்கமுடியாத பொருட்கள் துறையிலிருந்து முதலீடு படிப்படியாக திசைதிருப்பப்பட வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. முழுமையான ஊக்கப்பாட்டு அமைப்பிலிருந்த ஏற்றுமதிக்கு எதிரான சார்பினை மாற்றுவதற்கு 1984 முதல் முயற்சி செய்யப்பட்டு வருகிறது.

செலாவணி வீதங்களும் கட்டண அமைப்பும் பிரச்சினைக்குரிய மற்றிரு விடயங்களாகும். 1980க்கும் 1984க்குமிடையில் இலங்கை ரூபாவின் பெறுமதி குறிப்பிடத்தக்க அளவிற்கு உயர்ந்தது. ஏற்றுமதி வளர்ச்சியில் செலாவணி மாற்றுவீதம் வகிக்கும் முக்கிய பங்கு வலியுறுத்தப்பட வேண்டும். உண்மையில் நான் இதனை உங்களுக்கும் அரசாங்கத்துக்கும் எனது பிரியாவிடைச் செய்தியாக விடுக்க விரும்புகிறேன்.

செலாவணி மாற்று வீதமானது, வாழ்க்கைச் செலவிலும் வருமானப் பகிர்விலும் முக்கிய பங்கை வகிக்கிறது. எனினும் நாம் போதியளவு ஏற்றுமதி செய்யாவிடத்து இப் பிரச்சினைகள் உக்கிரமடையலாம். வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கோ, வருமானப் பங்கீட்டை சிறப்புறச் செய்வதற்கோ ஒருக்காலும் செலாவணி மாற்று வீதம் ஒரு கருவியர்கப் பயன்படுத்தப்படக் கூடாது. உற்பத்தி, ஏற்றுமதி என்பவற்றைப் படுமோசமாகப் பாதிக்காமல் செலாவணி அப்பங்கினை ஆற்ற டுடியாது அவ்வாருயின் அப்பிரச்சினைகள் மேலும் உக்கிரமாகும். 1980 முதல் 1984 வரை நாம் செய்ததுபோல மீண்டும் ஒரு போதும் செலாவணி வீதம் உயர்வதற்கு அனுமதித்தலாகாது. அந்த நான்கு முக்கிய ஆண்டுகளில் மெது ஏற்றுமதி வேகத்தை நாம் இழந்தோம்.

# 1987 ம் வருட வரவு செலவுத் திட்டத்திலுள்ள வருமான யோசனைகள்

வை. கருணசிங்க
(சட்டத்தரணி, வரி ஆலோசகர்)

| | மாற்றியமைக்கப்பட்டது (கோடிரூபாக் கணக்கில்) | மதிப்பிடப்பட்டது (கோடிரூபாக் கணக்கில்) |
|---|---|---|
| மீளவரும் செலவுகள் | 3809 | 3700 |
| மூலதனச் செலவுகள் | 3403 | 3000 |
| | 7302 | 6700 |
| வருமானம் | 4004 | 3900 |
| | 3208 | 2800 |

1985ம் வருடம் தொடர்பாக் வரவு செலவுத் திட்டத்தில் முன்னர் எதிர்பார்க்கப்பட்ட உபரி கடைசியில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 16 சதவிகிதப் பற்ருக்குறையாகப் போய் முடிந்தது. வங்கித் துறையிலிருந்து கட்ஞக வாங்கப்பட்ட 100 கோடி ரூபாவைத் திட்டமிட்டு மதிப்பிடப்பட்டவாறு திருப்பிக் கொடுக்க முடியவில்லை. பதிலாக, அத்துறையிலிருந்து பெறப்பட்ட கடன் தொகைகள் 500 கோடி ரூபாவை அடைந்தன. வரவு செலவுத் திட்டத்தில் காணப்பட்ட இந்த அதிருப்திகரமான அம்சத்துக்கு கனத்த பாதுகாப்புச் செலவுகளும், விளைபொருள் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியும் காரணமாகும்.

'பொருளியல் நோக்கு' சஞ்சிகையின் 1985 டிசம்பர் மாத இதழில் 1986ம் வருட வரவு செலவுத் திட்டத்தைப்பற்றி நான் எழுதிய கட்டுரையொன்றில், வரவு செலவுத் திட்டத்தில் துண்டுவிழுமென மதிப்பிடப்பட்ட தொகை ஏறக்குறைய 2,800 கோடி ரூபாவாயிருக்குமெனக் காட்டப்பட்டது. ஆனல், புதிய வருமான யோசனைகளின் பயஞக வருமானத்தில் ஏற்பட்ட நிகர அதிகரிப்புக்காகச் சீராக்கல் செய்யப்பட்டபின் அப்பற்ருக்குறை 2,600 கோடி ரூபாவாகக் குறைக்கப்பட்டது.

சேமிப்புகள், குறைச் செலவுகள் முதலியனவற்றிற்காகச் சீராக்கல் செய்யப்பட்டதற்குப்பின் வரவு செலவுத் திட்டத்தின் கூட்டுமொத்தப் பற்ருக்குறை 3104 கோடி ரூபாவாக இருக்கிறது. இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 10 சதவிகிதத்துக்குச் சற்று மேற்பட்டதாயிருப்பது சாத்தியம். எனினும், இத்தொகை முன்னர் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏறக்குறைய 15 சதவிகிதமாயிருக்குமென மதிப்பிடப்பட்டது.

1987ம் வருடத்துக்கான நகல் வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகள் கீழ்க்கண்ட நிலைமையைக் காட்டுகின்றன:

| செலவுகள் | (கோடிரூபாக்கணக்கில்) |
|---|---|
| மீளவருவது | 3900 |
| மூலதனம் | 3300 |
| மொத்தம் | 7200 |
| வருமானம் | 4108 |
| பற்ருக்குறை | 3002 |

மீளவரும் செலவுகளான 109 கோடி ரூபா சம்பந்தமான குறைச் செலவுகளுக்கும் மூலதனச் செலவுகளான 200 கோடி ரூபாவின் கீழ் முற்பணக்கணக்குகள் மீது வழங்கப்பட்ட நிகரக் கடன்களுக்குமான சீராக்கங்களுக்குப்பின் 1987ம் ஆண்டுக்கான மொத்தப் பற்ருக்குறை 2805 கோடி ரூபா என மதிப்பிடப்படுகிறது.

அதிக வருமானத்துக்கான தேவை அத்தியாவசியமாயிருந்தபோதிலும், தற்போதுள்ள வருமான வரிவிகிதங்களை மாற்றுவதில்லையெனத் தாம் முடிவு செய்திருப்பதாக அமைச்சர் அறிவித்தார். 1986ம் வருட வரவு செலவுத்திட்டம் வரியமைப்பில் கணிசமான மாற்றங்களை ஏற்படுத்தியது. அவையாவன:-

★ தனிப்பட்ட அலவன்ஸ் 1985/86 கணக்கு வருடத்திலிருந்த 24,000 ரூபாவிலிருந்து 1986/87 கணக்கு வருடத்தில் 27,000 ரூபாவுக்கு அதிகரிக்கப்பட்டது.

★ வருமான வரியின் உச்ச விகிதம் (1985/86 கணக்கு வருடம்வரை இருந்துவந்த) 55 சதவிகிதத்திலிருந்து 1986/87 கணக்கு வருடத்தில் 50 சதவிகிதத்துக்குக் குறைக்கப்பட்டது.

★ விகிதப் பட்டிகள் 1985/86 கணக்கு வருடம்வரை இருந்துவந்த 11 லிருந்து 1986/87 கணக்கு வருடத்தில் 5க்குக் குறைக்கப்பட்டன.

மேற்சொன்ன மாற்றங்கள் 1987/88 கணக்கு வருடத்துக்கும் தொடர்ந்து பிரயோகமாகும். ஏனென்ருல் எந்த விலகலும் உத்தேசிக்கப்படவில்லை.

வரிவிகிதங்களின் குறைப்பும் வரிப் புகலிடங்களின் ஒழிப்பும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வரி முறையில் அண்மையில் அவதானிக்கப்பட்ட ஒரு புதுமையாக இருந்து வந்துள்ளன. இக் கொள்கை ஆசியாவிலும் ஐரோப்பாவிலுமுள்ள பல நாடுகளிலும் அமெரிக்காவிலும் பின்பற்றப்படும் கொள்கையை ஒத்திருக்கிறது. இக் கொள்கையின் அடிப்படை நியதி, வரி விதிப்பின் விருத்தி முறைமீது வரிச் சகாயங்கள் ஏற்படுத்தும் பாதகமான விளைவை ஒழிப்பதும், வரித்தளம் அரிக்கப்படுவதை நீக்குவதும், வரிவிதிப்பில் நடுநியாய நியதியை மீண்டும் ஏற்படுத்துவதுமாகும். அமைச்சர் இவ்வருடம் வரி விகிதங்களை மேலும் குறைக்க விரும்பினுரெனினும், பொருளாதாரத்தை மோசமாகப் பாதிக்கும் நாட்டில் நிலவும் நிலைமைகள் அவரை அப்படிச் செய்யவிடாது தடுத்து விட்டன. ஆனல், சமாதானம் மீண்டும் நாட்டில் ஏற்பட்டதும் கூடிய விரைவில் இப்படிச் செய்யப்படும் என்று அவர் நம்புகிமுர்.

**உத்தேசிக்கப்படும் மாற்றங்கள்:**

**(ஏ) விகிதங்கள்:** மாற்றப்படாது இருந்து வருகின்றன - 1985/86 கணக்கு வருடத்தைப் பொறுத்தவரை, 10 சதவிகிதம்; 20 சதவிகிதம்: 30 சதவிகிதம்: 40 சதவிகிதம்: 50 சதவிகிதம் ஆகிய வரிப்பட்டிகள் பிரயோகமாகும்.

**(பீ) சொந்த அலவன்ஸ்:** மாற்றப்படாது இருந்து வருகின்றது - 1986/87 கணக்கு வருடத்தைப் பொறுத்தவரை, விடுதொகை 27,000 ரூபாவாகும்;

**(சி) தகுதிபெறும் கொடுப்பனவுகள்:**

(i) ஆஸ்பத்திரியிலோ அல்லது பிணி ஆய்கூடத்திலோ அனுமதிக்கப்படும் ஒரு தனியாளுக்கு ஏற்படும் வைத்தியச் செலவுகள் சட்டத்தின் 31 வது பிரிவு அமுலான திகதியான 1987 ஏப்ரல் 01 ந் திகதியிலிருந்து தகுதி பெறும் கொடுப்பனவாகக் கருதப்படவேண்டும்.

(ii) அங்கீகரிக்கப்பட்ட சேமலாப/ஓய்வூதிய நிதிகளைப் போல சுய தொழில் செய்யும் தொழிலர்களுக்கும் விவசாயிகளுக்கும் வியாபாரிகளுக்கும் ஒரு தேசிய சேமலாப நிதி ஸ்தாபிக்கப்பட வேண்டும். இவ்வகைகளுக்குள் வரும் தனியாட்கள் இத்தகைய தொழில் துறைகளிலிருந்து தாங்கள் பெறும் வருமானத்தில் ஒரு குறித்த சதவிகிதத்தை இந்நிதியத்துக்கு உதவு தொகையாகச் செலுத்தி, அதைத் தகுதிபெறும் ஒரு கொடுப்பனவாகக் குறிப்பிடலாம்.

அமுலாகும் திகதி: ஸ்தாபிக்கப்படும் திகதி;

குறிப்பு:

உத்தேசிக்கப்படும் இனங்கள் சம்பந்தமாகக் கழிவொன்றைப் பெறத் தகுதிபெறும் வரிமதி வருமானத்தின் சதவிகிதம் மூன்றிலொரு பங்குக்குள் அல்லது 1,50,000 ரூபாவுக்குள், இதில் எது குறைவாயுள்ளதோ அதற்குள் இருக்க வேண்டும். இது 1986/87 கணக்கு வருடத்திலிருந்து அமுலாகும்.

**(டி) வதிவில்லாத வெளிநாட்டு நாணயக்கணக்கு - வட்டி**

மத்திய வங்கியின் அங்கீகாரத்துடன் வர்த்தக வங்கியொன்றில் திறக்கப்பட்ட கணக்கொன்றில் உள்ள பணத்தொகைகள் சம்பந்தமாக, எந்த நபருக்கும் அவர் இலங்கைக்கு வெளியே யிருக்கும் காலத்திலும் அவர் இலங்கைக்கு வந்து சேர்ந்து வசிக்கத் தொடங்கிய பின்னர் 10 வருடங்களுக்கும் வரும் வட்டிக்குச் சட்டத்தின் 10 (இ) பிரிவு வரிவிலக்கு அளிக்கின்றது. இந்தப் பத்து (10) வருட வரையறையை நீக்க உத்தேசிக்கப்படுகிறது.

குறிப்பு:

1979 ம் வருட சட்டத்தில் முன்னர் இருந்த ஏற்பாடு ஒரு தனியாள் இலங்கையில் வசித்து வராத காலத்துக்கு மட்டும் இத்தகைய வட்டிக்கு வருமான வரியிலிருந்தும், மூலதனத்துக்குச் செல்வ வரியிலிருந்தும் விலக்களித்தது. 1982 ம் வருடத்தில் செய்யப்பட்ட சட்டத்திருத்தம் அத்தனியார் இலங்கையில் வசித்துவரத் தொடங்கியதற்குப் பின் 3 வருடங்கள் வரை இந்த வரி விலக்கை நீடித்தது;

1984 ம் வருடத்தில் செய்யப்பட்ட சட்டத் திருத்தம் இக்காலத்தை 6 வருடங்களுக்கு நீட்டியது.

1985 ம் வருடத்தில் செய்யப்பட்ட சட்டத் திருத்தம் இக்காலத்தை 10 வருடங்களுக்கு நீடித்தது. இந்த வரையறை இப்பொழுது நீக்கப்பட்டு வருகிறது.

மூல நியாயம்:

வெளிநாட்டு நாணயங்கள் கனத்த அளவில் அனுப்பப்படுவதற்கு ஊக்கமளிப்பதும் கணக்கிலிருந்து பணம் மீள எடுக்கப்படுவதை நியாயஞ் சொல்லித் தடுப்பதுமாகும்.

**(ஈ) வெளிநாட்டு நாணயத்தில் வேதனங்கள்**

ஓர் உயர் தொழில் முறையிலோ அல்லது ஜீவனத் தொழில் முறையிலோ இலங்கைக்கு வெளியே புரியப்படும் சேவைகள் சம்பந்தமாக இலங்கையில் வசித்துவரும் ஒரு தனியாள் வெளிநாட்டு நாணயத்தில் சம்பாதிக்கும் வேதனங்கள் இலங்கைக்கு அனுப்பப்பட்டால் சட்டத்தின் 15 (சி) பிரிவு அவற்றிற்கு வரி விலக்கு அளிக்கின்றது;

இதேபோல, இலங்கையில் வசித்துவரும் ஒரு தனியாள் இலங்கைக்கு வெளியே புரியும் சேவைகள் சம்பந்தமாக வெளிநாட்டு நாணயத்தில் சம்பாதிக்கும் வேதனங்கள் இலங்கைக்கு அனுப்பப்பட்டால், சட்டத்தின் 10 (கே) பிரிவு அவற்றிற்கு வரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானவரியிலிருந்து விலக்கு அளிக்கின்றது.

வெளிநாட்டுக் கம்பெனிகளுக்காக அல்லது இலங்கைக்கு வெளியேயுள்ள தனி நபர்களுக்காக வேலை செய்யும் இலங்கையில் வசித்து வரும் ஓர் இலங்கையர் வெளிநாட்டு நாணயத்தில் பெறும் கொடுப்பனவுகள் வங்கிகள் வழியாக இலங்கைக்கு அனுப்பப்பட்டால், அக்கொடுப்பனவுகளுக்கு வருமான வரியிலிருந்து விலக்கு அளிக்க உத்தேசிக்கப்படுகிறது.

மூல நியாயம்:

தொழில் செய்வதிலிருந்து வெளிநாட்டு நாணயத்தை இங்கு கொண்டுவருவதற்கு இலங்கையில் வசிக்கும் இலங்கையர்களுக்கு ஊக்கமளிப்பதாகும்.

குறிப்பு:

மேற்போந்த (டி) (ஈ) ஆகியவற்றின் கீழுள்ள இரு ஏற்பாடுகளில் உள்ள ''வதிவு'' (வாசம்) என்ற சொல், சட்டத்தின் 67ம் பிரிவில் கண்டுள்ளபடி ஒரு தொழில் நுட்பப் பொருளைக் கொண்டுள்ளது.

(எப்) மூலதன இலாபங்கள்

(i) சட்டத்தில் கணக்கிடப்பட்டுள்ள 7 நிலைமைகளில் மூலதன இலாபங்கள் எழுகின்றன. மூலதன இலாபங்கள் சட்டத்தின் கீழ்வரியிலிருந்து விலக்களிக்கப்படும் 14 நிலைமைகள் உள்ளன. சொத்தின் உரிமை மாறும் விஷயத்தில் மூலதன இலாபத்திலிருந்து ஒரு விசேஷ கழிவின் உருவத்தில் மேலும் நிவாரணம் அனுமதிக்கப்படுகிறது:

(அ) சொத்துரிமை மாற்றம் 5 வருடங்களுக்கும் 15 வருடங்களுக்குமிடையே நேர்ந்தால், 25 சதவிகிதத்துக்குச் சமமான ஒரு தொகையும்;

(ஆ) 15 வருடங்களுக்குப் பின் நேர்ந்தால், 50 சதவிகிதத்துக்குச் சமமான ஒரு தொகையும்.

ஒரு மூலதன இலாபம் மீது விதிக்கப்படும் வரியின் உச்ச விகிதம் 25 சதவிகிதம். (1959/60 கணக்கு வருடம் ஆரம்பித்ததிலிருந்து 1965/66 கணக்கு வருடம்வரை விகிதம் 45 சதவிகிதம்)

25 வருடங்களுக்கு மேல் வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள் சம்பந்தமாக மூலதனத்தில் ஏற்படும் அதிகரிப்புக்குவரி விதிப்பது நியாயமல்லவென்று கருதும் அமைச்சர் நீண்டகால உடைமைக்கும் குறுகியகால உடைமைக்குமிடையே வித்தியாசம் உள்ளதெனக் கூறுகிறார். குறுங்கால உடைமை என்பது வாங்கி விற்கும் வியாபார உருவமெடுக்கிறது என விளங்கிக்கொள்ளப்படுகிறது.

குறிப்பு:

உடைமைக் காலத்தைப் பொறுத்து 25 சதவிகித, 50 சதவிகித தற்போதைய விசேஷ கழிவு நீக்கப்படுமென்று கூறப்படவில்லை. மூலதன இலாபங்கள் பற்றிய முழுக் கருதுகோளும் மாற்றப்பட்டுவருவதால், இத்தகைய கழிவுகள் நீக்கப்படுவது சாத்தியம். எனினும், வாசத்துக்குரிய வீடுகள் முதலியவற்றின் விற்பனை சம்பந்தமாக 14ம் பிரிவின் கீழ் தற்போதைய வரிவிலக்குகள் தொடர்ந்து இருந்து வரக்கூடும்.

(ii) பெறுமான மதிப்பீடும் கணக்கீடும்

மூலதன இலாபங்களின் நோக்கத்துக்காக, பெறுமான மதிப்பீட்டின் தற்போதைய அடிப்படை வருமாறு;

★ ஆதனத் தோட்டம் 1957 - 04 - 01 க்கு முன்பெனில், அத்திகதியிலிருந்தவாறு சந்தைப் பெறுமதி.

★ தோட்டம் அத்திகதிக்குப் பின்பெனில், தோட்டத்திற்கான செலவு.

தற்போது கணிப்பீடு உடைமை மாற்றத்தின் கிடைத்த விற்பனை ஆதாயத்திலிருந்து அல்லது சொத்தின் சந்தைப் பெறுமதியிலிருந்து கழிப்பதன் மூலம் செய்யப்படுகிறது.

★ 1957. 04. 01ம் திகதியின்று சந்தைப் பெறுமதி/சொத்து வாங்கப்பட்டபோது அதன் பெறுமதி.

★ சொத்து வாங்கப்பட்டபோது ஏற்பட்ட செலவுகள் சேர்மானங்கள், சீர்திருத்தங்கள்.

★ விற்றுத் தீர்க்கும்போது ஏற்பட்ட செலவுகள்.

★ சொத்து 5 வருடங்களுக்கும் 15 வருடங்களுக்குமிடையே வைக்கப்பட்டிருந்ததா அல்லது 15 வருடங்களுக்கு மேல் வைக்கப்பட்டிருந்ததா என்பதைப் பொறுத்து இலாபத்தின் 25 சதவிகிதம்/50 சதவிகிதம்.

(1) கீழ்க்கண்ட மாற்றங்களைச் செய்ய உத்தேசிக்கப்படுகிறது.

| (1) உடைமைக்காலம் | விகிதம் |
|---|---|
| (அ) இருவருடங்களைவிடக் குறைவானது | 50 சதவிகிதம் - இலாபத்துக்கு வழமையான வருமானம் போலவரிவிதிக்கப்படும் தற்போதுள்ள உச்சவிகிதமான 25 சதவிகிதம் நீக்கப்படுகிறது. |
| (ஆ) 2 விருந்து 5 வருடகாலம்வரை | 25 சதவிகிதம்-தற்போதையவிகிதம் |
| (இ) 5 விருந்து 15 வருடங்கள் வரை | 17.5 சதவிகிதம் |
| (ஈ) 15 விருந்து 20 வருடங்கள் வரை | 12.5 சதவிகிதம் |
| (உ) 20 விருந்து 25 வருடங்கள் வரை | 5 சதவிகிதம் |
| (ஊ) 25 வருடங்களுக்குமேல் | இல்லை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுமான மதிப்பீட்டின் உத்தேச அடிப்படை வருமாறு:

★ சொத்து 1977.04.01 ந் திகதி முன்பு வாங்கப்பட்டிருந் தால் (முன்பு 1957.04.01), அத் திகதியில் அதன் சந்தைப் பெறுமதி.

★ அத்திகதிக்குப் பின்பெனில், அதைவாங்குவதற்கு ஏற்பட்ட செலவுகள்.

குறிப்பு:

செல்வ வரிக்கு அசையாச் சொத்தின் பெறுமான மதிப்பீட்டுக்கான தற்போதைய அடிப்படைத் திகதி 1977.04.01 மூலதன இலாப வரிவிதிப்பில் செய்ய உத்தேசிக்கப்படும் மாற்றங்களுடன் இரு வரிகளுக்குமான அடிப்படைத் திகதி ஒன்ருகவே இருக்கும்.

(iii) குறிப்பிடப்பட்ட பொதுக் கம்பெனிகளில் பங்குகள்

தற்போது குறிப்பிடப்பட்ட ஒரு பொதுக் கம்பெனியிலுள்ள பங்குகளை விற்பதிலிருந்து கிடைக்கும் மூலதன இலாபங்களுக்குப் பிரிவு 14 (ஏ) (xiii) ன் கீழ் வருமானவரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது.

இந்த வரிவிலக்கை அகற்றுவதற்கு உத்தேசிக்கப்படுகிறது.

உரிமையாளருக்குரிய (முதலாளித்துவ) அல்லது பங்காளித்துவ வியாபாரம் ஒரு குறிப்பிடப்பட்ட பொதுக் கம்பெனியாக மாற்றப்படுவதிலிருந்து எழும் மூலதன இலாபங்களுக்குத் தற்போது அளிக்கப்படும் வரிவிலக்கு, இத்தகைய ஒரு கம்பெனியிலுள்ள பங்குகளின் விற்பனை மீதுள்ள தற்போதைய வரிவிலக்கு நீக்கப்பட்டதை முன்னிட்டு, நீக்கப்படலாம். ஆனல் இது குறிப்பாகச் சொல்லப்படவில்லை.

குறிப்பு:

ஒரு குறிப்பிடப்பட்ட பொதுக்கம்பெனியிலுள்ள பங்குகள் சம்பந்தமான மூலதன இலாபங்களுக்கு அளிக்கப்பட்டுவந்த வரிவிலக்கு நீக்கப்பட்டதற்கான மூலநியாயம், எதிர் பார்க்கப்பட்ட இலட்சியங்கள் கை கூடாததே என அமைச்சர் கூறியுள்ளார். அந்த இலட்சியங்கள் வருமாறு:

★ கம்பெனிகள் அமைக்கப்படுவதற்கு ஊக்கமளிப்பது.

★ சிறிய கம்பெனிகளுக்குச் சலுகை வரிவிகிதம் (20 சதவிகிதம், 30 சதவிகிதம், 40 சதவிகிதம்), ஒரு சிறிய கம்பெனி (40 சதவிகிதம்) யின் வரைவிலக்கணத்துக்குள் வராத கம்பெனிகளுக்குக் குறைக்கப்பட்ட வரி விகிதம் ஆகியவற்றுடன் விரிவான அடிப்படையில் கம்பெனிகள் அமைக்கப்படுவதை ஊக்குவிப்பது.

★ இத்தகைய கம்பெனிகளின் பங்குகள் மீது முதலீடு செய்யுமாறு சிறு (முக்கியமற்ற) சேமிப்பாளர்களை ஈர்ப்பது.

ஒரு சில நிதிவளமுள்ள தனிநபர்கள் தங்களுடைய வரிப் பொறுப்பைக் குறைக்கும் விலக்கை நேர்மையற்ற முறையில் பயன்படுத்தியிருக்கிருர்களென்று அமைச்சர் வாதிக்கிருர்.

இந்த யோசனை பெருமளவுக்குச் சர்ச்சையை உண்டுபண்ணியிருக்கிறது. தகவல் தொடர்புச் சாதனங்கள் வாயிலாகப் பல்வேறு வகையான கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இப்பிரச்சினைபற்றி இன்னேர் அவதானிப்புரை - இந்த ஊக்குவிப்பினுல் சிறிய (முக்கியமற்ற) முதலீட்டாளர்கள் கவரப்படவில்லையென்பது உண்மையல்ல. ஆரம்பத்தில் பொது மக்களின் இப்பிரிவினரிடமிருந்து போதிய ஆதரவு கிடைத்த போதிலும், அவர்களுடைய முதலீடுகளின்மீது நியாயமான ஆதாயம் கிடைக்கவில்லையென்ற உண்மை, பங்குகளில் முதலீடு செய்யும் அவர்களுடைய உற்சாகத்தைக் குறைத்துவிட்டதென்பதை அனுபவம் எடுத்துக்காட்டியுள்ளது. ஒரு கம்பெனி அதன் ஆரம்ப வருடங்களில் இலாபங்களைப் பெறுவது சாத்தியமற்றதாயிருந்த போதிலும், கம்பெனிகளின் முகாமையில் உள்ள நிர்வாகிகள் எத்தனையோ மேலாதாயங்கள், வெகுமதிகளுடன் மிருதுவான பஞ்சணை சுகம் அனுபவிக்கிருர்கள். அதேசமயத்தில், முதலீட்டாளர்கள் தங்களுடைய முதலீடுகளிலிருந்து பிரதிபலனைப் பெற வருடக்கணக்கில் காத்திருக்கவேண்டியிருக்கிறது; அவர்களுக்கு அந்தப் பிரதிபலன் கிடைக்காமலும் போகலாம்.

எனவே, அவர்கள் தங்களுடைய சேமிப்புகளை நிரந்தர வைப்புகளுக்குத் திசை திருப்புகிருர்கள். கம்பெனிகளின் வருடாந்தப் பொதுக் கூட்டங்களில் அடிக்கடி கேட்டும் முதலீட்டாளர்களின் குறைகூறல்கள், அவர்கள் இழந்துள்ள தைரியத்துக்கும் அடைந்துள்ள மனக்கலக்கத்துக்கும் அச்சத்துக்கும் தக்க சான்ருகும். புதிய கம்பெனிகள் சட்டத்தினுல் இக்குறையை நீக்கமுடியவில்லை. பிரஸ்தாப கூட்டங்களில் அடிக்கடி எழுப்பப்படும் ஒரு கேள்வி, இலாப நஷ்டக் கணக்கில் பணிப்பாளர்களது வேதனங்களின் கீழ் காட்டப்படும் கனத்த தாக்கல்களை (செலவுகள்) யும் அவை போன்றவற்றையும் பற்றியதாகும். கம்பெனிகளின் சட்டத்தில் அடக்குமுறையையும், துர்நிர்வாகத்தையும் தடுப்பதற்கான ஏற்பாடு உண்டென்ற போதிலும், அது சம்பந்தமான நடைமுறை மாவட்ட நீதிமன்றத்துக்கு மனுச் செய்வதை உள்ளடக்கிய நீண்டகாலத்துக்கு இழுத்துப் போகும் ஒரு நடவடிக்கையாகும். முகாமை அதிகாரிகள் பெரும் மாற்ருர்கள் மூலம் மூடிமறைக்கப்பட்ட பெரும்பான்மை வாக்குகளை உபயோகித்து, ஆட்சேபனைகளை அமுக்கி விடமுடியும். பணிப்பாளர்கள் சிறு பான்மைப் பங்குதாரர்களை மதி நுட்பத்தாலும் தந்திர மந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரங்களாலும் குழப்பியடித்து வெல்வதன் மூலம் எந்த வழக்கு கள் மீதும் கம்பெனி நிதிகளை உப யோகிப்பார்கள்.

(ஜி) தேய்மானம்:

ஒரு சொத்தை வாங்குவத ற்கு ஆகும் செலவுக்கு உதவிப் பணம் (மான்யம்) வழங்கும் முறை 1979.04.01ந் திகதியிலி ருந்து 1981.03.31ந் திகதிவரை அமுலிலிருந்தது. இதற்குப் பதி லாகத் தேய்மானத்துக்காக ஒரு விடுதொகையை வழங்கும் வழங் குதல் 1981-04-01ந் திகதி யிலிருந்து நேர்க் கோட்டு முறை யில் அமுலுக்குக் கொண்டுவரப் பட்டது. இது சொத்தின் ஆயுளை அல்லது அது உபயோகிக்கப் படக் கூடிய காலத்தைப் பொறுத்து ஒரு நிலையான சத விகித அடிப்படையில் வழங்கப் பட்டது. பொறித் தொகுதி, இயந்திரங்கள் அல்லது குறு கிய ஆயுளுள்ள நிலையான பதிக் கும் சாதனங்கள் மீது 25 சத விகிதமும் நீண்ட ஆயுளுள்ள மற்றும் இத்தகைய பொருள்கள் மீது $12\frac{1}{2}$ சதவிகிதமும், வியா பாரத்தில், வர்த்தகத்தில், உயர் தொழிலில் அல்லது ஜீவனத் தொழிலில் உபயோகிப் பதற்காக நிர்மாணிக்கப்பட்ட கட்டடங்கள் மீது 5 சதவிகித முயாகத் தேய்மான விடு தொகைகள் அனுமதிக்கப் பட்டன. பொறித் தொகுதி, இயந்திரங்கள் அல்லது நிலையான பதிக்கும் சாதனங்கள் ஆகிய சகல சொத்துக்கள் மீதும் 33 3/1 சதவிகிதத் தேய் மானத் தொகையை 1987 - 04 - 01 ந் திகதியிலி ருந்து வழங்க உத்தேசிக்கப்படு கிறது. இத்தகைய சொத்துக் களின் அதாவது 3 வருடங்களில் பதிவழிப்பு செய்யப்படக் கூடிய சொத்துக்கள் உபயோகிக்கப் படக்கூடிய காலம் இதற்கு வகைப்படுத்தப்பட மாட்டாது.

எனினும், லொறிகள், பஸ் கள், ட்ராக்டர்கள் (இயந்திரக் கலப்பைகள்), ட்ரெயிலர்கள் போன்ற மோட்டர் வாகனங் களுக்கும் அத்துடன் காரியாலய தட்டுமுட்டுச் சாமான்களுக்கும் 3 வருடகாலத் தேய்மானச் சலுகை அனுமதிக்கப்பட மாட்டாது. ஆனால் 4 வருடங் களுக்கு மேல் தொடர்ந்து இருந்துவரும் அல்லது ஆண் டொன்றுக்கு 25 சதவிகிதத் தேய்மானத் தொகையைப் பெறும்.

வியாபாரம் அல்லது வர்த்த கம், உயர் தொழில் அல்லது ஜீவனத் தொழில் ஆகியவற்றுக் காக நிர்மாணிக்கப்பட்ட கட்டடங் கள் மீது ஆண்டொன்றுக்குத் தற்போதைய 5 சதவிகிதம் அல்லது 20 வருட பதிவழிப்புக் காலம் ஆண்டொன்றுக்கு 10 சத விகிதமாக அதிகரிக்கப்படும் அல்லது பதிவழிப்புக் காலம் 10 வருடங்களாகக் குறைக்கப் படும்.

மூல நியாயம்:

பொறித் தொகுதியும் இயந்திரங்களும் நிலையான பதிக் கும் சாதனங்களும் நவீனமாக் கப்பட வேண்டுமென்ற நோக்கத் துடன் நிலையான சொத்துக்களில் கனத்த முதலீடுகளுக்கு ஊக்க மளிக்கப்படுகிறது. உற்பத்தியை விரிவாக்குவதில் விருத்தி செய்யப் பட்ட தொழில் நுட்ப முறைகள் உபயோகிக்கப்படுவதையும், அதன் மூலம் வேலை வாய்ப்புக் களை அதிகரிக்கப்படுவதையுய் தூண்டுவதே இதன் நோக்க மாகும்.

தற்போதைய தேய்மான விகிதமுறையின் கீழ் நிலையான் சொத்துக்களில் செய்யப்படும் முதலீடுகளில் ஏற்படும் ரொக்கப் பணப் பாய்வுப் பிரச்சினைகளை வெல்ல, புதிய துரிதப்படுத்திய தேய்மான விகிதங்கள் வியாபார ஸ்தாபனங்களுக்கு உதவுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

(வருமானநஷ்டம் - ரூ. 30 கோடி)

(ii) தற்போது 23 (3) (பீ) பிரிவின்படி அடக்கவிலைக்கும் தேய்மானத்துக்கான மொத்த விடுதொகைக்குமிடையேயுள்ள வித்தியாசத்துக்கு மேலுள்ள விற்பனை விலையின் மேலதிக தொகை வியாபாரம் முதலிய வற்றின் வழமையான வருமானம் என்று கருதப்பட வேண்டும். இந்த ஏற்பாட்டின் விளைவாக வரிப்பொறுப்பு உச்ச விகிதமான 50 சதவிகிதமாகின்றது இந்த யோசனை 1987 - 04 - 01 ந் திகதி யிலிருந்து அமுலாகும்.

★ அடக்கவிலைக்கு மேலுள்ள இத்தகைய விற்பனை விலையின் மேலதிக தொகை மூலதன இலாபமாகக் கருதப்பட வேண் டும்.

★ புதிய சொத்து மாற்றப் பட்டால் அதன் ஆகுசெலவி லிருந்து விற்பனை விலையின் கழி வொன்று அனுமதிக்கப்பட வேண்டும். தேய்மானம் வழங் கப்படும் தொகை நிகரச் செல வாயிருக்கும்.

குறிப்பு:

புதிய மூலதன இலாப விகிதங்கள் (மேலுள்ள (எப்) 1 ஐப் பார்க்கவும்) மதிப்புக் குறைந்த சொத்துக்களின் விற்பனை சம்பந்தமாக எழுவ தாகக் கருதப்படும் மூலதன இலாபத்துக்கும் பிரயோகமாகு மென அநுமானிக்கப்படுகிறது.

(எச்) ஏற்றுமதிகள்:

i தற்போது, வணிகப் பொருள்களை உற்பத்தி செய் வதற்காக 1977 - 04 - 01 ந் திகதிக்குப் பின் அமைக்கப்பட்டு, (1989 – 03 – 31 ந் திகதிவரை) முதலாவது ஏற்றுமதித் திகதி யிலிருந்து 5 வருட காலத்துக்கு அமைச்சரால் அங்கீகரிக்கப் பட்ட கம்பெனிகளுக்கும் நிறு வனங்களுக்கும் 20 (i) (பீ) பிரிவும் 20 ஏ (i) பிரிவும் வரு மான வரியிலிருந்து விலக்கு அளிக்கின்றன. அத்துடன் 85 ஏ பிரிவு 10 வருட காலத்துக்குக் கழிவொன்றைப் பெற ஒரு கம்பெனிக்கு அல்லது நிறுவனத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துக்கு உரிமையளிக்கின்றது – 5 வருட வரியில்லாக் காலத்துக்குப் பின்பு, ஏற்றுமதிகள்மீது சம்பாதிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்கள் ஏற்றுமதிகளின் பெறுமதியில் 75 சதவிகிதத்துக்கு மேலுள்ளனவென்று ஏற்றுமதி அபிவிருத்திச் சபை அத்தாட்சிப்படுத்தினல், இலாபங்கள் மீதான வருமான வரியில் 50 சதவிகிதத்துக்குக் கழிவு அனுமதிக்கப்படும்.

தற்போதுள்ளதுபோல், கம்பெனி அல்லது நிறுவனம் முதலாவது ஏற்றுமதி செய்யும் வருடத்திலிருந்து அல்லாமல், கம்பெனி அல்லது நிறுவனம் இலாபமீட்டும் வருடத்திலிருந்தே வரியில்லாக் காலம் (வரிவிடுமுறை) அமுலுக்குவரும் என்பதே அமைச்சரின் யோசனை.

இதேபோல, அரைவரிவிடுமுறை சம்பந்தமாக, ஏற்றுமதிகளின் பெறுமதி மீது சம்பாதிக்கப்படும் வெளிநாட்டு நாணயங்களின் தொகை 75 சதவிகிதத்திலிருந்து 50 சதவிகிதத்துக்குக் குறைக்கப்படுகிறது.

ii ஏற்றுமதிக்கான சரக்குகளை உற்பத்தி செய்வோர் இப்பொழுது வரிச் சலுகைகளைப் பெறுவதில்லை. ஏனென்றல் வரிமுறை தற்போது ஏற்றுமதியாளர்களுக்கு மட்டும் எனக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

உண்மையான ஏற்றுமதியாளர்களுக்குச் சரக்குகளை வழங்கும் கம்பெனிகளுக்கும் தனியாட்களுக்கும் சலுகையை விரிவாக்குவதே யோசனை. இலங்கைக்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களுள் வெளிநாட்டு நாணயப் பெறுமதிக்கான சர்வதேச நாணயக் கடிதங்களுக்கு எதிராக, இவ் வழங்கல்கள் உள்நாட்டு வங்கிகளால் திறக்கப்பட்ட நாணயக் கடிதங்களை ஆதாரமாகத் கொண்டிருக்க வேண்டுமென்பதே இதற்கான சோதனைக் கோல்.

மூல நியாயம்:

அதிக வெளிநாட்டு நாணயங்களைச் சம்பாதிக்கும் நோக்கத்துடன் ஏற்றுமதிகளின் கன அளவை அதிகரிப்பதற்கு ஊக்கமளிப்பதேயாகும்.

(வருமான நஷ்டம் 5 கோடி ரூபா)

iii தற்போது, ஏற்றுமதிகளுக்கான சரக்குகளை உற்பத்தி செய்வதில் உபயோகிக்கப்படும் உள்ளீடுகள் மீது செலுத்தப்பட்ட தீர்வையிலிருந்து பிறக்கும் தீர்வைக்கழிவை ஏற்றுமதியாளர்களுக்குக் கொடுப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது.

இத் தீர்வைக் கழிவை ஓர் அரசாங்கத் திணைக்களத்தின் மூலம் செலுத்துவதற்குப் பதிலாக, சம்பந்தப்பட்ட வங்கிகள் வாயிலாகச் செலுத்துவதே யோசனை. வெளிநாட்டு நாணய அனுப்பீடுகள் இலங்கைக்கு வந்து சேர்ந்ததற்குப்பின் திறைசேரியின் சார்பில் இக்கழிவைக் கொடுக்க வங்கிகளுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. ஏற்றுமதியாளர்கள் தங்களுக்குத் திருப்பித் தரவேண்டிய தீர்வைக் கழிவைப் பெறுவதில் ஏற்படும் காலதாமதங்களை நீக்குவதற்காகவே இந்த ஏற்பாடு.

(ஐ) சேமலாப/ஓய்வூதிய நிதிகள்

(i) உள்நாட்டு இறை வரித் திணைக்கள ஆணையாளர் நாயகத்தால் அங்கீகரிக்கப்பட்ட சேமலாப/ஓய்வூதிய நிதிகளின் முதலீட்டு வருமானம் வரிக்கு உட்படுத்தப்படவில்லை. அவற்றின் முதலீடுகள் பிரதானமாக அரசாங்கக் கடன் பத்திரங்களில் (பிணைப்பத்திரங்கள்) முதலீடு செய்யப்பட்டுள்ளதே இதற்குக் காரணம்.

இந்த முதலீட்டுகளின் முதலீட்டு முறை இப்பொழுது மாறியுள்ளது. ஏனென்றல், அவை வங்கிகளிலுள்ள நிரந்தர வைப்புகளிலும் கம்பெனிகளிலுள்ள பங்குகளிலும் முதலீடு செய்ய விரும்புகின்றன.

இந்த நிதிகள் அரசாங்கக் கடன் பத்திரங்களுக்கு வெளியே முதலீடு செய்யப்பட்ட இடங்களில், இவற்றின் முதலீட்டு வருமானத்தின் மீது 20 சதவிகித வரி விதிப்பதே யோசனை. இவ் வரி விதிப்பு, அரசாங்கக் கடன் பத்திரங்களில் மட்டுமே முதலீடு செய்யும் ஊழியர் சேமலாப நிதியத்தை உள்ளடக்கவில்லை.

(ii) மற்றும் சிக்கன-சேமிப்புச் சங்கங்கள், ஊழியர்கள் மட்டும் சந்தாத் தொகைகளை உதவும் நிதியங்களின் முதலீட்டு வருமானத்துக்குத் தற்போது ஒரே சீரான அடிப்படையில் வரிவிதிக்கப்படுவதில்லை.

ஆண்டொன்றுக்கு 27,000 ரூபா வருமானத்துக்கு வழங்கப்படும் வரிவிலக்கு வரம்புக்கு உட்பட்டு, இத்தகைய முதலீட்டு வருமானத்துக்கு வரிவிதிப்பதே யோசனை. இந்த வரிவிலக்கு 27,000 ரூபா வருமானத்துக்குக் கீழே வருமானம் பெறுவோருக்கு ஆறுதலளிக்கும்.

(மேலதிக வருமானம் 15 கோடி ரூபா)

(ஜே) உள்நாட்டு இறைவரிச் சட்டத் திருத்தம்

வரி விதிப்புக்கெதிரான ஒரு மேன் முறையீடு (அப்பீல்) தீர்க்கப்படுவதற்குத் தற்போது எந்தக் கால வரம்புமில்லை. எனினும், சட்டத்தின் 117ம் பிரிவின் படி, மேன் முறையீடு 10 நாட்களுக்குள் தாக்கல் செய்யப்பட வேண்டுமென்ற கால வரையறை இருந்து வருகிறது.

1950 களிலிருந்தே மேன் முறையீடுகள் தீர்க்கப்படாது இருந்து வருகின்றனவென்பது யாவருமறிந்த விஷயம்.

★ இத்தகைய தீர்க்கப்படாத மேன் முறையீடுகள் வரியிறுப்பாளருக்கு அசௌகரியத்தை உண்டாக்குகின்றனவென்பதில் சந்தேகமேயில்லை. ஏனெ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னில், இறுதியாக நிர்ணயிக்கப்படும் வரை அவர்களுடைய வரிப் பொறுப்பு அவர்களுக்குத் தெரியாது.

★ தீர்க்கப்படாத இம்மேன் முறையீடுகளால், கட்டத்தவறிய வரிகள் என்று பெருந்தொகைகள் குறிப்பிடப்பட்டுள்ள பதிவேடுகளைத் திணைக்களம் தொடர்ந்து வைத்திருக்க வேண்டியுள்ளது.

★ இத்தகைய வரிகள் உண்மையில் வசூலிக்கப்பட்டனவாவென்று நிச்சயமாகத் தெரியாததன் காரணமாக, திறைசேரி ஒவ்வொரு நிதிவருடத்திலும் அதன் வருமானத் தேவையைச் சரியாக மதிப்பிட முடியாது தடுக்கப்படுகிறது.

மேன் முறையீடொன்று திணைக்களத்துக்கு வந்து சேர்ந்த 2 வருடங்களுக்குள் அம்முறையீடு தீர்க்கப்பட வேண்டுமென்று ஒரு கால வரம்பைக் குறிப்பதற்காக, சட்டத்தைத் திருத்த உத்தேசிக்கப்படுகிறது.

இந்தக் காலவரம்பு மேன் முறையீடொன்று வரிமதிப்பாளராலோ அல்லது ஆணையாளராலோ தீர்க்கப்படுவதற்கு மட்டுமே பொருந்தும். மீளாய்வுச் சபையாலோ அல்லது நீதிமன்றங்களாலோ தீர்க்கப்படுவதற்குப் பொருந்தாது.

மேன் முறையீடுகளை விசாரிந்து, இறுதி முடிவு செய்யும் அதிகாரமுள்ள நடு நியாயத் தீர்ப்பாளர்களின் குழுவொன்றை நியமிப்பதற்குரிய ஏற்பாடுகளைச் செய்வதற்காக, சட்டத்தின் 117ம் பிரிவைத் திருத்தியமைக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இன்னும் தீர்க்கப்படாது தேங்கிக்கிடக்கும் மேன் முறையீடுகளைத் துரிதமாகத் தீர்க்கும் நோக்கத்துடன் இந் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

மேலும், உத்தேசிக்கப்படும் சட்டத் திருத்தங்கள் வருமாறு:

★ 5,000 ரூபாவிலிருந்து 50,000 ரூபா வரையான வருமானத்துக்கும் செல்வத்துக்கும் விவரத் திரட்டொன்றைச் சமர்ப்பிக்கத் தவறுவதற்கு உள்நாட்டு இறை வரித் திணைக்கள ஆணையாளர் – நாயகத்தினால் விதிக்கப்படும் தற்போதைய அபராத வரம்பை அதிகரிப்பதற்காக, சட்டத்தின் 96ம் பிரிவைத் திருத்தியமைத்தல்;

★ 7,000/- ரூபாவிலிருந்து 50,000/- ரூபா வரையான (வருமானத்துக்கும் செல்வத்துக்கும் விவரத் திரட்டுகளைச் சமர்ப்பிக்கத் தவறுதல், பிழையான விவரத்திரட்டுகளைச் சமர்ப்பித்தல்) 151ம் பிரிவின் கீழ் குறிக்கப்பட்ட குற்றத்துக்கு அநாவசியமான சம்பிரதாயங்களும் நடைமுறைகளுமின்றித் துரிதமாக நடத்தப்படும் விசாரணைக்குப் பின் குற்றம் நிரூபணமாயின் ஒரு நீதவானால் விதிக்கப்படும் தற்போதைய அபராதவரம்பை அதிகரிப்பதற்காக அச்சட்டப்பிரிவைத் திருத்தியமைத்தல்.

குறிப்பு:

மொத்த வியாபார வரிச் சட்டத்துக்கு (அடியில்) உத்தேசிக்கப்படும் திருத்தங்களுக்கொப்ப உள்நாட்டு இறைவரிச் சட்டத்தை அமைப்பதற்காக இவ்விரு திருத்தங்களும் உத்தேசிக்கப்படுகின்றன.

(கே) மொத்த வியாபாரவரி:

மொத்த வியாபாரவரி அரசாங்கத்துக்கு இடையறாது வருமானத்தைக் கொண்டுவரும் ஓர் ஊற்றாக நிரூபணமாகியுள்ளது.

மொத்த வரி வருமானத்தின் சதவிகிதமாக 1977ம் ஆண்டில் 12 சதவிகிதமாக இருந்த இந்த வியாபார வரி வருமானம், 1985ம் ஆண்டில் 33 சதவிகிதத்துக்கு அதிகரித்துள்ளது. 1986ம் ஆண்டில் இது 35 சதவிகிதத்துக்குமேல் அதிகரிக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வரியில் எந்த முக்கிய மாற்றங்களையும் செய்ய வரவு செலவுத்திட்டம் உத்தேசிக்கவில்லை. 1985ம் வருட வரவு செலவுத்திட்டத்துக்கு முன்பு 10 ஆக இருந்த விகிதப் பட்டிகளின் தொகை 1986ம் வருட வரவு செலவுத் திட்டத்தில் 6 ஆகக் குறைக்கப்பட்டது. 1986.11.12ந் திகதியிலிருந்து அமுலுக்கு வரும்படியாக பட்டிகளின் தொகையை 5 ஆகக் குறைக்க இப்பொழுது உத்தேசிக்கப்படுகிறது.

தற்போதுள்ள 15 சதவிகிதப் பட்டியை நீக்கி, பொருத்தமான உருப்படிகளை 20 சதவிகிதப் பட்டியின் கீழ் வகைப்படுத்துவதன் மூலம் இம்மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

அந்த உருப்படிகள்:

பழ கோர்டியல்கள், சாறுகள், சர்பத்துகள், முக்கோண வடிவத்திலுள்ள கண்ணாடிகள், குடிக்கும் கண்ணாடித் தம்ளர்கள், மற்றும் கண்ணாடிச் சாமான்கள், ஐஸ்கிறீம்.

கீழ்க்கண்ட மாற்றங்களும் செய்யப்பட்ள்ளன:-

| உருப்படி | தற்போதைய விகிதம் | புதிய விகிதம் |
|---|---|---|
| 1. நகைகளும் கோலஉடை ஆபரணங்களும் உற்பத்தி செய்வதற்குச் சேவைகளை அளிக்கும் தொழில் | 5 | 10 |
| 2. நகைகளும் கோலஉடை ஆபரணங்களும் விற்கும் வியாபாரம் | 5 | 10 |
| 3. நகைகளும் கோலஉடை ஆபரணங்களும் உற்பத்திசெய்யும் தொழில் | 5 | 10 |
| 4. எந்தப் பொருளையும் உற்பத்தி செய்வதற்கு சரீரஉழைப்புத் தொழிலாளர்களை மட்டும் உபயோகிக்கும் வியாபாரம். இத்தகைய வியாபாரத்தின் மெத்த வியாபாரம் காலாண்டுக்கு 2,00,000 ரூபாவுக்கு மேல் போகாதவிடத்து. | | 3 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொத்த வியாபார வரியின் 7ம் பிரிவின் கீழான' உத்தரவு 1986.11.12ந் திகதி 427/12ம் இலக்கமுள்ள விசேட வர்த்தக மானியில் வெளியிடப்பட்டுள்ளது.

(மேலதிக் வருமானம் 2 கோடி 50 இலட்சம் ரூபா)

சுங்கத் தீர்வை அட்டவணையுடன் ஒப்பிடுகையில் மொத்த வியாபார வரி பற்றிய வர்த்தமான அறிவிப்பில் வர்ணனைச் சுருக்கத்தின் காரணமாக ஒரு குறிப்பிட்ட உருப்படிக்குப் பொருந்தக்கூடிய சரியான வரிவிகிதம்சம்பந்தமாக இப்பொழுது நிலவும் குழப்பத்தையும் சந்தேகங்களையும் நீக்குவதற்காக, சுங்கத்தீர்வை அட்டவணை போன்ற ஒரு சவிஸ்தாரமான வரிவிகித அட்டவணையை வெளியிட உத்தேசிக்கப்படுகிறது.

கீழ்க்கண்டவற்றிற்கு ஏற்பாடு செய்வதற்காக, மொத்த வியாபார வரிச்சட்டத்தைத் திருத்தியமைக்கவும் உத்தேசிக்கப்படுகிறது.

★ மேன் முறையீட்டுக்கு உட்பட்ட மொத்த வியாபார வரி வசூலை நிறுத்திவைத்தல்;

★ வரி செலுத்த வேண்டிய மொத்த வியாபாரத்தைக் கணக்கிடுவதில் அறவிட முடியாத ஐயக்கடன்களைக் கழித்துவிடுதல்.

★ வரி மதிப்பு, வசூல் சம்பந்தமாக மொத்த வியாபார வரிச் சட்டத்தை இறைவரிச் சட்டம் போலாக்குவதற்காக மற்றும் மாறுதல்களைச் செய்தல்.

தற்போதுள்ள அபராத வரம்பான 5,000/– ரூபாவுக்குப் பதிலாக (விவரத் திரட்டுகள், தகவல்கள் முதலியவற்றைச் சமர்ப்பிக்கத் தவறுதல்) சட்டப் பிரிவு 53ல் குறிக்கப்பட்ட குற்றங்களுக்கு அநாவசியமான சம்பிரதாயங்களும் நடைமுறைகளுமின்றி நடத்தப்பட்ட துரிதமான விசாரணைக்குப் பின்னர் குற்றம் நிரூபணமானதின் பேரில் 50,000/- ரூபாவுக்குமேற்படாத அபராதமொன்றை ஒரு நீதவான் விதிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்காக 1981ம் வருட 69ம் இலக்கமுள்ள மொத்த வியாபார வரிச்சட்டத்தின் 53 ம் பிரிவில் மேலும் ஒரு திருத்தம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(எல்) இறக்குமதித் தீர்வைகள்

உத்தேசிக்கப்படும் மாற்றங்கள் ஜனாதிபதி காப்புவரி ஆணைக் குழுவினது சிபார்சுகளை அடிப்படையாகக் கொண்டவையாகும். அம்மாற்றங்கள் வருமாறு:

(I) கோதுமைத்தானியம் – 5 சதவிகிதத்திலிருந்து 10 சதவிகிதத்துக்கு அதிகரிப்பு.

இந்த அதிகரிப்பு முழுவதையும் உணவு ஆணையாளரின் திணைக்களம் பொறுத்துக் கொள்ளவிருப்பதால், இவ்வதிகரிப்பின் விளைவாகப் பாணின் அல்லது கோதுமைமாவின் விலை உயராது.

(மேலதிக வருமானம் - 10 கோடி ரூபா)

(ii) சுத்திகரியாத எண்ணெய்

(அ) தற்போதுள்ள பெறுமதிப்படியான தீர்வையான 45 சதவிகிதம் மெட்ரிக் தொன் ஒன்றுக்கு 45 சதவிகிதம் அல்லது 1,800/- ரூபா ஆகிய இரண்டில் எது உயர்வோ அதுவாக மாற்றப்படும்.

(மேலதிக வருமானம் - 15 கோடி ரூபா)

(ஆ) இலங்கைப் பெற்றோலியம் கூட்டுத்தாபனத்தின் இபாபங்கள் மீது 50 கோடி ரூபா விசேட வரி விதிக்கப்படும்.

(மேலதிக வருமானம் - 50 கோடி ரூபா)

குறிப்பு:

1986 மார்ச் மாதத்தில் பெறுமதிப்படியான 45 சதவிகிதத் தீர்வை விதிக்கப்பட்டதன் மீது எதிர்பார்க்கப்பட்ட வருமானம் எதிர்பார்க்கப்பட்டவாறு வரவில்லை. இறக்குமதி செய்யப்படும் சுத்திகரியாத எண்ணெயின் விலையில் ஏற்பட்ட ஒரு வீழ்ச்சியே இதற்குக் காரணம்.

எனினும், உலக எண்ணெய் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியினால், இலங்கைப் பெற்றோலியம் கூட்டுத்தாபனம் எதிர்பாராதவாறு பெருத்த இலாபம் சம்பாதித்துள்ளது. அதில் ஒரு பகுதியைத் திறைசேரி எடுத்துக் கொள்வதற்காகவே விசேடவரி விதிக்கப்பட்டுள்ளது.

(எம்) கலால் தீர்வை:

1. புகையிலை

1986 நவம்பர் 12ந் திகதி நள்ளிரவிலிருந்து அமுலுக்கு வரும் படியாகப் புகையிலை மீதான தீர்வை கீழ்க்கண்டவாறு மாற்றப்பட்டுள்ளது:

தற்போதுள்ள தீர்வை
கிலோ ஒன்று ரூ. 603.50

உத்தேசிக்கப்பட்டது
கிலோ ஒன்று ரூ. 665.50

குறிப்பு:

சிகரெட் ஒன்றின் விலையில் 0.5 சதம் அதிகரிக்கப்பட்டுள்ளது. இது தீர்வை அதிகரிப்பை உள்ளடக்கப் போதுமானதாயிருக்காதாகையால், மிச்சத்தை இலங்கைப் புகையிலைக் கம்பெனி உள்வாங்கிக் கொள்ளுமென்று அமைச்சர் நம்புகிறார்.

இறக்குமதி செய்யப்படும் கீழ்க்கண்டவற்றிலும் இதே போன்று தீர்வையை அதிகரிக்க உத்தேசிக்கப்படுகிறது:

★ புகையிலை
★ சிகரெட்டுகள்
★ பீடி இலை

(மேலதிக வருமானம் 40 கோடி ரூபா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ii) மது பானம்:

1986 நவம்பர் 12ந் திகதி நள்ளிரவிலிருந்து அமுலுக்கு வரும்படியாக அதிகரிக்கப்பட்டுள்ள தீர்வைகள் வருமாறு:

| | தற்போதுள்ளது காற்று உட்புக முடியாத லீட்டர் ஒன்றுக்கு | உத்தேசிக்கப்படுவது காற்றுஉட்புக முடியாத லீட்டர் ஒன்றுக்கு |
|---|---|---|
| தென்னஞ் சாராயம் | ரூபா 71 | ரூபா 78.40 |
| மொலாஸஸ் சாராயம் | ரூபா 65. 40 | ரூபா 75. 40 |
| உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் வெளிநாட்டு மது வகைகள் | ரூபா 80.00 | ரூபா 87.00 |

பியர்-கனஅளவு லீட்டர் ஒன்றுக்கு ரூபா 3.25 அதிகரிப்பு

குறிப்பு:

இம் மாற்றங்களின் விளைவாக, சாராயம் போத்தல் ஒன்றுக்கு 6 ரூபா வீதமும் பியர் போத்தல் ஒன்று ரூ. 2.70 வீதமும் விலை அதிகரிக்கும். இறக்குமதி செய்யப்படும் மதுவகைகளின் விலையும் இதே போல அதிகரிக்கும்.

(மேலதிக வருமானம் 29 கோடி ரூபா)

(என்) முத்திரைத் தீர்வை

தற்போது நம்பிக்கைப் பொறுப்பு இரசீதுகள், நாணயக் கடிதங்கள், நம்பிக்கைப்பொறுப்புக் கடிதங்கள் சம்பந்தமாக 1000/- ரூபா அல்லது அதன் ஒரு பகுதி மீது 1/– ரூபா முத்திரைத் தீர்வை அறவிடப்படுகிறது.

1986 டிசம்பர் 12ந் திகதி நள்ளிரவிலிருந்து அமுலுக்கு வரும் படியாக ஒவ்வோர் 1000/- ரூபா அல்லது அதன் ஒரு பகுதிக்கும் 20/- ரூபா என்ற அடிப்படையில் இந்தத் தீர்வையை அதிகரிக்க உத்தேசிக்கப்படுகிறது.

(மேலதிக வருமானம் 105 கோடி ரூபா)

குறிப்பு:

இதன் விளைவாக, பொதுவாகச் சகல இறக்குமதிகளின் செலவுகளும் சுமார் 2 சதவிகிதம் அதிகரிக்கும்.

சுருக்கம்

குறித்த யோசனைகளின் விளைவாக:

(1) வருமான அதிகரிப்பு
— ரூ. 266 கோடி 50 இலட்சம்

(2) வருமானக் குறைவு
— ரூ. 35 கோடி

நிகர அதிகரிப்பு
— ரூ. 231 கோடி 50 இலட்சம்

வரவு செலவுத் திட்டத்துக்கு முன்பு நடப்புக்கணக்கு உபரி 408 கோடி ரூபாவிலிருந்து 701 கோடி ரூபாவுக்கு அதிகரித்ததன் விளைவாக, வரவு செலவுத்திட்டத்தில் ஏற்பட்ட மொத்த பற்றுக்குறையான 2805 கோடி ரூபா 2606 கோடி ரூபாவுக்குக் குறைகிறது.

வரவு செலவுத்திட்டப் பற்றுக்குறையைக் கீழ்க்கண்ட மூலங்களிலிருந்து நிதிகளைப் பெற்று நிரப்ப உத்தேசிக்கப்படுகிறது:

வெளிநாட்டுக் கொடைகள்
— ரூ. 409 கோடி 50 இலட்சம்

வெளிநாட்டுத் திட்டங்களும் வர்த்தகக் கடன்களும்
— ரூ. 1,112 கோடி

உள்நாட்டு ரூபாக் கடன்கள்
— ரூ. 750 கோடி

மொத்தம்
ரூ. 2,271 கோடி 50 இலட்சம்

இதன் விளைவாக ஏற்படும் நிகரப் பற்றுக்குறை 305 கோடி ரூபா. இப்பணம் கடன்களாக வங்கி முறையிலிருந்து வரும்.

(7 - ம் பக்கத் தொடர்ச்சி)

மிக்க வறிய நிலையிலுள்ள மக்கள் பிரிவினருக்கு வரையறுப்பதென ஒரு முடிவு செய்யப்பட்டது. அதன்படி, 1979ம் ஆண்டின் பிற்பகுதியில் அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட உணவு முத்திரைத் திட்டத்தின் நோக்கம், ஒரு குறிப்பிட்ட வருமான மட்டத்துக்குக் கீழே உள்ள குடும்பங்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருள்களை வாங்க ஓர் உபவருமானத்தை வழங்குவதாகும். உணவு முத்திரைத் திட்டத்தின் கீழ்கூட, மொத்தக் குடிமக்களில் கிட்டத்தட்ட பாதிப்போர் தொடர்ந்து நன்மைகளைப் பெற்றுவந்தனர்.

எனினும், நன்மையடைவோரின் தொகையும் உணவு முத்திரைகளின் நாணயப் பெறுமதியும் மாறாது அதே நிலையில் இருந்து வந்ததால், இத்தகைய உணவு மான்யத் திட்டத்தின் செலவை ஒரு நிலையான மட்டத்தில் வைத்திருப்பது சாத்தியமாயிற்று. மற்றும் சேமநலத் திட்டங்கள் சம்பந்தமாக எந்தப் பெரிய மாற்றங்களும் நிகழவில்லை.

இது போன்ற ஒரு சமயத்தில் வரவு செலவுத்திட்டத்தையும் பொருளாதாரத்தையும் பற்றிய ஆராய்ச்சிப் பரிசீலனையொன்றில், நாட்டை எதிர்நோக்கும் மிகக் கடினமான பிரச்சினையைப் புறக்கணிப்பது சாத்தியமல்ல. இந்தச் சந்தர்ப்பத்தில், நிதி-திட்டமிடல் அமைச்சர் கடந்த வருடம் தமது ஒன்பதாவது வரவு செலவுத்திட்ட உரையின்போது விடுத்த அறிக்கையொன்றை மேற்கோள் காட்டுவது பொருத்தமாகும்.

''இதற்கெல்லாம் வன்செயல்கள் முடிவடைந்து, இலங்கையில் சமாதானம் மீண்டும் ஏற்படவேண்டும்'' இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியை நிலைப்படுத்த இரு காரணிகள் ஜீவாதாரமாகும் — அதாவது சமாதானமும் கட்டுப்பாடும் — என்று அவர் மேலும் வலியுறுத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சவுதி அரேபியாவின் பிரச்சினைகள்

கடந்த ஆகஸ்டில் நடைபெற்ற ஒபெக் அமைச்சர்கள் மாநாட்டில், பெட்ரோலிய உற்பத்தி மட்டத்தை நாளொன்றுக்கு 1 கோடியே 67 லட்சம் பீப்பாக்களாக வைத்திருப்பது என்று எடுக்கப்பட்ட தீர்மானம் சவூதி அரேபியாவுக்கு கிடைத்த ஒரு வெற்றியாகும். ஆறு மாத கால கொந்தளிப்பான நிலைமைகளுக்குப் பிறகு எண்ணெய் விலைகளில் உறுதிப்பாடு தோன்றும் வாய்ப்பு இப்பொழுது தென்படுகிறது. சவூதியின் பொருளாதார சக்திக்கு தம்மால் சவால் விட முடியாத பலவீனத்தை உணர்ந்த ஏனைய ஒபெக் அங்கத்துவ நாடுகள் உற்பத்தி மட்டங்கள் குறித்து சவூதி அரேபியா விதித்த நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டுள்ளன. சவூதி அரேபியா அசையும் போது ஏனைய எண்ணெய் உற்பத்தி நாடுகள் குலை நடுக்கம் கொள்கின்றன.

சவூதி அரேபிய இராச்சியம் உலகின் பெற்றுக்கொள்ளக் கூடிய எண்ணெய் ஒதுக்குகளில் கால் பங்கினை தன்னகத்தே கொண்டிருக்கிறது. 1983 அளவில் நிரூபிக்கப்பட்ட எண்ணெய் ஒதுக்குகளின் மட்டம் 17,000 கோடி பீப்பாய் வரை அதிகரித்திருந்தது. எண்ணெய் உற்பத்தி இன்னும் 70 ஆண்டுகளுக்கு மட்டுமே செய்ய முடியும் என்று ஏற்கனவே கணிக்கப்பட்டிருந்த போதிலும், தற்பொழுது தென்கிழக்குப் பிரதேசத்தின் பாரிய வெற்று நிலத்தில் புதிய ஒதுக்குகள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதால் 22 ஆம் நூற்றுண்டு வரையில் எண்ணெய் வளம் தீர்ந்து விடாது இருக்கும் என நம்பப்படுகிறது.

உற்பத்தி அல் கவார், அஸ்ஸபானிய, அல் அப்காயிக், அல் பாரி ஆகிய நான்கு பிரதான எண்ணெய் வயல்களில் மேற்கொள்ளப்படுகிறது. முற்றிலும் சவூதி அரசாங்கத்துக்குச் சொந்தமான அரம்கோ கம்பனி இவ்வயல்களை பரிபாலித்து வருகின்றது. அல்கவார் தரை மீதுள்ள உலகின் மிகப்பெரிய எண்ணெய் வயலாகும். அஸ்ஸபானியா கரைக்கு அப்பாலுள்ள மிகப் பெரிய வயலாகும். மேலும், குவைத்துடன் தகராறில் இருக்கும் இயற்கை வலயத்தில் சிறு எண்ணெய் வயல்களில் இருந்தும் சவூதி அரேபியா கணிசமான உற்பத்தியைப் பெறுகிறது.

ஏற்றுமதிச் சந்தையில் ஏனைய போட்டியாளர்களை விடவும் சவூதி செலவு தொடர்பான அதிக அனுகூலங்களைப் பெற்றிருக்கிறது. சவூதி அரேபியாவின் பீப்பா ஒன்றுக்கான உற்பத்திச் செலவு 1 அ. டொலரிலிருந்து 2 டொலர்கள் வரையில் இருக்கிறது. வடகடலில் ஆகக் குறைந்த உற்பத்திச் செலவு 4 டொலர்களாகவும், ஐக்கிய அமெரிக்க 'ஸ்ரிப்பர் வெல்' எண்ணெய் வயலில் அது 10 டொலராகவும் இருக்கிறது. இதன் காரணமாக சவூதி அரேபியா சுத்திகரிக்கப்படாத எண்ணெய் சந்தையில் கேந்திர ஸ்தானத்தைக் கைப்பற்றியுள்ளது.

உலக மசகெண்ணெய் ஏற்றுமதியில் சவூதி அரேபியாவின் பங்கு 1979 ஆம் ஆண்டில் 20 சதவீதமாக இருந்தது. இது 1985ம் ஆண்டில் 4 சதவீதமாக மிக மோசமாக வீழ்ச்சியடைந்திருந்தது என மதிப்பிடப்பட்டுள்ளது. 1981 ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு 98 லட்சம் பீப்பாக்களாக இருந்த உற்பத்தி 1985 ஆம் ஆண்டில் 32 லட்சம் பீப்பாக்களாக வீழ்ச்சியடைந்தது. ஒபெக் நாடுகளின் உற்பத்தியில் சவூதி அரேபியாவின் பங்கு 20 சதவீதத்துக்கு கூடுதலாக இருக்கவில்லை.

ஒபெக் அல்லாத எண்ணெய் உற்பத்தி நாடுகளின் போட்டியே சவூதி அரேபியா இன்று எதிர்நோக்கும் மிகப்பெரிய சவாலாக இருக்கின்றது. 1986 ஆம் வருட ஆரம்பத்தில் உலக் சுத்திகரிக்கப்படாத எண்ணெய் வழங்கலில் ஒபெக் அல்லாத நாடுகளின் பங்கு 51 சதவீதமாகவும், ஒபெக் நாடுகளின் பங்கு 36 சதவீதமாகவும் இருந்தது. 1973 ல் ஒபெக்கின் பங்கு 53 சதவீதமாகவும், 1979 ல் 48 சதவீதமாகவும் இருந்துவந்தது.

1985ல் சவூதி அரேபியாவிலுள்ள தாயிபில் நடந்த ஒபெக் அமைச்சர்கள் மாநாட்டில், ஒரு புற நடையாக மன்னர் பஹத் உரையாற்றினுர். தாபனத்தின் விலை மற்றும் உற்பத்தி விதிமுறைகளை ஒபெக் அங்கத்துவ நாடுகள் பின்பற்ருத பட்சத்தில் சவூதி அரேபியா அதன் உற்பத்தியை நாளொன்றுக்கு 50 லட்சம் பீப்பாக்களாக அதிகரிக்குமெனஅவர் எச்சரிக்கை விடுத்தார். சவூதியின் முதல் நோக்கம் ஒபெக் அல்லாத நாடுகளுக்கு இழந்த சந்தைகளை மீளப் பெற்றுக்கொள்வதே என சவூதி எண்ணெய் அமைச்சர் தெரிவித்தார்.

கடந்த டிசம்பர் மாதத்தில் நடைபெற்ற ஒபெக் மாநாட்டின் போது, சென்மதி நிலுவைப் பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டிருந்த அல்ஜீரியா, லிபியா, இரான், நைஜீரியா போன்ற நாடுகளின் எதிர்ப்புக்குரல்கள் எழுந்த போதிலும், சந்தை நோக்கிலான ஓர் உத்தியை பின்பற்றுவதற்கு ஒபெக் நாடுகள் இறுதியில் இணங்கின.

1986ன் முதல் காலாண்டில் ஒபெக் உற்பத்தி நாளொன்றுக்கு 1 கோடியே 59 லட்சம் பீப்பாக்களிலிருந்து 1 கோடியே 73 லட்சம் பீப்பாக்களாக அதிகரித்தது. ஆனுல், கேள்வியில் எந்த அதிகரிப்பும் காணப்

(25-ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச பண்ட உடன்படிக்கைகள்

இறுதியில், ஜெனீவாவில் கொக்கோ உற்பத்தி நாடுகளுக்கும் நுகர்வு நாடுகளுக்குமிடையே நடைபெற்ற ஐந்தாவது சுற்றுப் பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக முடிவுற்றன. சுமார் ஈராண்டுக்காலமாக நடைபெற்ற பேச்சுவார்த்தைகளுக்குப்பின் 1986ம் வருட சர்வதேச கொக்கோ ஒப்பந்தம் ஏற்பட்டது. இந்த ஒப்பந்தம் இவ்வருடம் அக்டோபர் மாதத்திலிருந்து அமுலுக்கு வரவிருக்கிறது. ஒப்பந்தம் 3 வருட காலம் அமுலிலிருக்கும். மேலும் நீடிக்கப்படக்கூடிய சாத்தியக் கூறுகள் உண்டு. உடன்படிக்கை ஏற்பட்டதற்குப் பின் அங்டாட் செயலாளர் - நாயகம் கென்னத் டாட்ஸி ஒப்பந்தத்தை நம்பிக்கையுடன் இவ்வாறு வர்ணித்தார்: ''சர்வதேச வியாபாரச் சரக்கு ஒப்பந்தங்களின் ஒரு புதிய தலைமுறையைச் சேர்ந்த முதலாவது ஒப்பந்தம்.... பூரண பொருளாதார ஏற்பாடுகளுடன் இப் புதிய கொக்கோ ஒப்பந்தம் இன்று ஏற்கப்பட்டுள்ளதால், வியாபாரச் சரக்குத் துறையைச் சூழ்ந்துள்ள பிரச்சினைகளுக்கு யதார்த்தமான, உண்மையிலேயே நலம் பயக்கக்கூடிய பரிகாரங்களைக் கண்டுபிடிக்க ஒன்று சேர்ந்து வேலை செய்வதற்காக மற்றும் வியாபாரச் சரக்குகளின் உற்பத்தியாளர்களும் நுகர்வோரும் செய்யும் முயற்சிகள் மேலும் ஆக்கம் பெறும்'' என்று அவர் சொல்லி முடித்தார்.

எனினும், வியாபாரப் பண்டங்களின் விலை நிர்ணயத்தில் வடக்கும் தெற்கும் ஒத்துழைத்து வந்த சகாப்தம் முடிவுக்கு வந்து கொண்டிருக்கலாம் எனச் சந்தேகவாதிகள் கருதினர். றப்பர் வர்த்தக நாடுகள் சந்தையை ஸ்திரப்படுத்துவதற்கான ஒரு புதிய உடன்படிக்கையைப் பேசி முடிக்க, முன்பு இருமுறை தவறியுள்ளனர்; அக்டோபர் மாதத்தில் நடைபெற்ற ஒரு மூன்றாவது சுற்றுப் பேச்சுவார்த்தைகளும் முறிந்து விட்டன; ஏனென்றால், ஒரு புதியவிலை மட்டத்தை நிர்ணயிப்பதற்கு ஆதரவான ஏற்பாடுகளில் உபயோகிப்பதற்கான நாணயம் சம்பந்தமாகவும் அத்துடன் விலை மட்டத்தை மாற்றியமைப்பதற்கான நடைமுறை சம்பந்தமாகவும் உற்பத்தியாளர்களும் நுகர்வாளர்களும் ஓர் ஒப்பந்தத்துக்கு வரமுடியவில்லை.

ஒரு புதிய சீனி ஒப்பந்தம் மீதான பேச்சுவார்த்தைகளும் ஸ்தம்பித்துவிட்டன. உற்பத்தியாளர்களுக்கும் நுகர்வாளர்களுக்கும் இடையே 1986ம் ஆண்டு மே மாதம் லண்டனில் நடைபெற்ற கூட்டத்தில் முடிவொன்றும் ஏற்படவில்லை. சர்வதேச தகர ஒப்பந்தம் முறிந்து போன ஓர் ஒப்பந்தமாகும். அது அடுத்த வருடம் கலைக்கப்படவிருக்கிறது. இதற்கிடையில், கோப்பி உடன்படிக்கையொன்றைச் செய்வதற்கான சந்தர்ப்பங்களும் நிச்சயமற்ற நிலையிலிருந்தன. ஏனென்றால், 'கோட்டா' பங்குகள் சம்பந்தமாக எந்த முடிவான ஒப்பந்தமும் ஏற்படவில்லை.

எனினும், அங்டாட் (வர்த்தகம், அபிவிருத்தி பற்றிய ஐ. நா. மாநாட்டு ஸ்தாபனம்) செயலாளர்-நாயகம் புதிய கொக்கோ ஒப்பந்தத்தை ''சர்வதேச வியாபாரச் சரக்குகள் சம்பந்தமான ஒப்பந்தங்களின் கட்டுக்கோப்புக்குள்ளே உற்பத்தியாளர்களுக்கும் நுகர்வாளர்களுக்குமிடையே நிகழும் ஒத்துழைப்பின் வரலாற்றில் ஒரு முக்கியமான திருப்பத்தைக்'' குறிக்கிறதென வரவேற்றார். இச் சந்தர்ப்பத்தில் அவர் கூறினார்: ''உற்பத்தியாளர்களுக்கும் நுகர்வோருக்குமிடையே இருந்து வரும் ஒத்துழைப்பு, வியாபாரப் பண்டங்களுக்கான ஒன்றிணைந்த திட்டத்தின் முக்கிய தூண்களில் ஒன்றாகும். இத்திட்டம் (1968ம் ஆண்டில் நைரோபியில் நடைபெற்ற) நாலாவது அங்டாட் மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட 93வது தீர்மானத்தினால் ஸ்தாபிக்கப்பட்டது. சமீப வருடங்களில் வியாபாரப் பண்டங்கள் சம்பந்தமாகச் சர்வதேச ஒப்பந்தங்களை முடிக்கும் வாய்ப்புகள் தோன்றுவிடினும், சர்வதேச சமூகம் சர்வதேச ஒத்துழைப்பின் இந்தக் குறிப்பிட்ட மாதிரிக்கு அதன் தொடர்ச்சியான ஆதரவை அளிக்கும் கடப்பாட்டை எடுத்துக் காட்டியுள்ளது. கோதுமை, ஒலிவ் எண்ணெய், ஓட்டுப் பிராணிகளின் இறைச்சிச் சுருள் ஆகியனபற்றி ஒரு புதிய சர்வதேச ஒப்பந்தம் செய்வதற்கான பேச்சுவார்த்தைகளும், நிக்கல், வெப்பவலய வெட்டுமரங்கள் சம்பந்தமாகப் புதிய ஒப்பந்தங்களைச் செய்வதற்கான முயற்சிகளும் சர்வதேச பொருளாதார ஒத்துழைப்புக்கான திட்டமான கடப்பாடுகளாகுமென அங்டாட் செயலாளர் - நாயகம் கருதினார்.

புதிய கொக்கோ ஒப்பந்தத்துக்கான பேச்சுவார்த்தைகள் வியாபாரப் பண்ட உற்பத்தியாளர்களின் அச்சத்துக்கு ஒரு முன் மாதிரியான உதாரணமாகும். இந்த உற்பத்தியாளர்கள் வியாபாரப் பண்டங்களின் விலை நிர்ணய ஏற்பாடுகள் மீது முக்கிய செல்வாக்கைப் பிரயோகிக்கும் சர்வதேச கம்பெனிகளின் கூட்டுக் குழுக்களுடைய தயவில் இருக்கிறார்கள். மார்ச் மாதத்தில் நடைபெற்ற கொக்கோ பற்றிய பேச்சுவார்த்தைக் கூட்டத்தில் உரையாற்றிய ஐவரிகோஸ்டின் விவசாய அமைச்சர் சர்வதேச கட்டுப்பாட்டுக்கு உட்படாத அநாமதேய சட்டா பேரக்காரர்களால் நியூயார்க்கிலும், சிகாகோவிலும், லண்டனிலும் பாரிஸிலுமுள்ள பண்டமாற்று நிலையங்களில் விலைகள் சித்திகரமாக நிர்ணயிக்கப்படுகின்றனவென்று குற்றஞ்சாட்டியதுடன், புதிய ஒப்பந்தத்தினால் உற்பத்திச் செலவுகளைக் கணக்கிலெடுத்து, உற்பத்தியாளர்களுக்கு ஒரு நியாயமான விலையை உத்தரவாதஞ் செய்ய முடியாதென்ற காரணத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினுல் புதிய ஒப்பந்தத்தில் சேரவும் மறுத்துவிட்டார். (உலகின் மிகப் பெரிய உற்பத்தியாளரான) ஐவரிகோஸ்ட் பேச்சுவார்த்தை மேஜைக்கு வருவதற்கு இசையச் செய்யப்பட்டதற்குப்பின்புதான் விலையமைப்பு, விலைமட்டங்கள், விலை சீராக்கல் ஏற்பாடுகள் ஆகிய முக்கிய பிரச்சினைகள் இருந்து வருவதை உற்பத்தியாளர்களும் நுகர்வாளர்களும் ஒப்புக் கொண்டனர்.

இப்போதிருந்துவரும் கொக்கோ ஒப்பந்தத்திலுள்ளவாறு, விலைகளை ஸ்திரப்படுத்துவதற்கு, எதிர்பாரா நிலைமைகளைச் சமாளிப்பதற்காக அதிக அளவு சரக்குகளைக் கையிருப்பில் வைத்திருப்பதே பிரதான சூத்திரமாக இருக்கின்றது. இக் கையிருப்பின் கூட்டுமொத்தப் பரிமாணம் 2,50,000 தொன்களாக மாருமல் இருந்து வருகிறது. மேலதிகமாக 1,00,000 தொன்களும் சேர்க்கப்படும் சாத்தியக்கூறும் உண்டு. (தற்போதுள்ள ஒப்பந்தத்தில் அங்கம்வகிக்காத) ஐவரிகோஸ்டின் விவசாய அமைச்சர் புதிய ஒப்பந்தத்தைத் தமது நாடு ஏற்பதாகத் தெளிவாகக் கூறினர். அது ஒரு ''சக்தி வாய்ந்த சமரசம்'' என்று குறிப்பிட்ட அவர், அதற்கு இப்பொழுது கிடைக்கக் கூடியதாயுள்ள அதிகரித்த மூலபலங்களால் விலைகளை ஸ்திரப்படுத்துவதற்கான அதன் பயனுறுதி வாய்ந்த சக்தி பெருமளவுக்கு அதிகரிக்கப்பட்டுள்ளதென்று கூறினர். எனினும், அங்டாட்டின் துணைச் செயலாளர் - நாயகம் பிரதம விளைபொருள்களுக்கு நல்ல விலைகள் கிடைக்கும் சாத்திய:பாடுகள்பற்றி மிகுந்த அவநம்பிக்கை தொனிக்கும் ஒரு முற்கணிப்பை வெளியிட்டார்.

கொக்கோ ஒப்பந்தம் தக்க சமயத்தில் செய்யப்பட்டதென்பது வெளிப்படை. ஏனென்ருல், கடந்த சில வருடங்களில் விலை வீழ்ச்சிப் போக்கிலிருந்து தப்பிவிட்ட ஒரு சில பிரதம விளைபொருள்களில் இதுவும் ஒன்ருகும். ஆனுல், கொக்கோ வெண்ணெய்க்கு உயர்ந்த விலைகள் கிடைத்துவருவதால், ஒரு செயற்கை மாற்றுப் பொருளைத் தேடிக்கொண்டிருக்கும் உயிர் — இரசாயனவியலாளர்களுக்கு அது ஒரு பிரதான இலக்காகியுள்ளது. புதிய உற்பத்திப் பகுதிகளில் அறுவடை செய்யப்பட்டதும் வழங்குநர்கள் விரைவில் கோரிக்கைக்கு மேல் வழங்கத் தொடங்கும் சாத்தியக் கூறும் உண்டு. எனினும், இதைவிட அதிக பயங்கரமானது மற்றுஞ் சில பண்டங்களின் வருங்கால வாய்ப்புகள். அண்மையில் கோலாலம்பூருக்குச் சென்றிருந்த ''ஹிந்து'' பத்திரிகையின் நிருபரான எஸ். இராமச்சந்திரன் அறிக்கை செய்தார் இப்படி: ''கோலாலம்பூரிலுள்ள பொருளியலாளர்களும் அரசியல் வட்டாரங்களும் கூறுவது போல, றப்பர், தால எண்ணெய், உலோகங்கள் போன்ற பொருள்களுக்குக் கிடைத்துவரும் குறைந்த விலைகள் தொடர்ந்து இருந்து வரும்; ஏனென்ருல், பண்ட உற்பத்தி நாடுகளின் பொருளாதாரங்களுக்கும் செல்வமிக்க கைத்தொழில் நாடுகளின் பொருளாதாரங்களுக்குமிடையேயுள்ள இணைப்பில் ஓர் அடிப்படை மாற்றம் ஏற்பட்டுள்ளது.''

''கடந்த 40 வருடங்களில் தற்காலிக வியாபார மந்தத்தின் போது வீழ்ச்சியுறும் கோரிக்கையைப் பிரதிபலிக்க விலைகள் வீழ்ச்சியடைந்த போதெல்லாம், கைத்தொழில் உலகின் வளர்ச்சி விகிதங்கள் மீண்டும் அதிகரித்ததும் இறுதியில் விலை உயர்வு ஏற்படுமென்று பண்ட உற்பத்தியாளர்கள் எதிர்பார்க்க முடிந்தது.'' ஆனுல், வளர்முக நாடுகளுக்கு நல்ல வர்த்தக நிலைமைகளை ஊக்குவிக்கும் வர்த்தகம், அபிவிருத்தி பற்றிய ஐ. நா. மகாநாட்டு ஸ்தாபனத்தின் துணைச் செயலாளர் - நாயகம் அலிஸ்டேர் மக் இன்டயர் ''இப்போக்கு தொடர்ந்து இருந்துவராது'' என்று எச்சரித்திருக்கிருர்.

''பொருளாதார நடவடிக்கைகளில் சுழல் முறையில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளுக்கும் மூலப் பொருள்களுக்கான கோரிக்கைக்குமிடையே பரம்பரையாக இருந்து வந்த தொடர்பு முறிக்கப்பட்டுவிட்டது'' என்று அவர் மூலப்பொருள்களை உற்பத்தி செய்யும் நாடுகளின் சிரேஷ்ட வங்கியாளர்களுக்கு எழுதிய கடிதமொன்றில் கூறியுள்ளார்.

தால எண்ணெய் விஷயத்தில் விலை வீழ்ச்சி பெரும் பரபரப்பூட்டுவதாயிருந்தது. மலேசியாவின் பிரதான ஏற்றுமதிப் பொருளான இதன் விலை 1985ம் ஆண்டு ஆரம்பத்தில் தொன் ஒன்று 1205 மலேசிய டொலரிலிருந்து 440 மலேசிய டொலருக்குச் செங்குத்தாக வீழ்ச்சியடைந்துவிட்டது.

மலேசியாவின் மற்றும் ஏற்றுமதிகளில் தகரம் அதே காலத்தில் அதன் பெறுமதியில் பாதியை இழந்துவிட்டது. றப்பரின் விலை கிலோ ஒன்று ஏறக்குறைய 180 ஸென் (மலேசிய நாணயம்) ஞகப் பலவீனமாயிருந்து வந்துள்ளது. இதனுடன் ஒப்பிடுகையில், 1980ம் ஆண்டு ஆரம்பத்தில் இதன் விலை 330 சென்ஞக இருந்தது.

மலேசியப் பிரதமர் டாக்டர் முஹம்மத் மஹாதிர் இவ்வாறு கூறியுள்ளார்: ''பல சக்திகள் ஒன்றுசேர்ந்து, மலேசியாவினுல் மட்டுமன்றி முழு உலகினுலும் உற்பத்தி செய்யப்பட்டு, ஏற்றுமதி செய்யப்படும் சகல பிரதம விளைபொருள்களின் விலைகளையும் கீழே தள்ளியுள்ளன.'' சகல பண்டங்களும் அண்மையில் முற்ருக விலை வீழ்ச்சி கண்டுள்ளமை, இதற்கு முன் ஏற்படாத ஒரு புதிய சம்பவமாகுமென்று அவர் கூறினர். சில பண்டங்களைப் பொறுத்தவரை, அவற்றின் அந்திம காலம் நெருங்கிவிட்டதென்பதில் துளியும் சந்தேகமில்லையெனத் தோன்றியது. பண்ட உற்பத்தி நாடுகள் ''கழுத்தறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப்பு''க்கு உள்ளாகுமென எதிர் பார்க்கப்பட்டது.

வியாபாரப் பொருள்களின் விலைகள் குறைந்ததற்குத் தொழில் நுட்பவியல் துறையில் ஏற்பட்டுவரும் துரிதமான மாறுதல்களே காரணம் என்று பொருளியலாளர்கள் குறை கூறுகின்றனர். சிறந்த நீர்ப்பாசனம், நல்ல விதைகள், சிறந்த உரங்கள் ஆகியனவெல்லாம் சேர்ந்து உற்பத்தியைப் பெருவாரியாக அதிகரித்துள்ளன. இன்றைய றப்பர் விளைச்சல் அமேஸான் காடுகளில் காணப்படும் பூர்வ மரங்களின் உற்பத்தியைப்போல் பத்து மடங்காகும் அளவுக்கு உற்பத்தி அதிகரித்துள்ளது.

தொழில் நுட்பத்துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தின் பயனாக, இயற்கைப் பொருள்களுக்குச் செயற்கை மாற்றுப் பொருள்கள் உற்பத்தி செய்யப் பட்டுள்ளனவென்று திரு. எம். ஸக்கமோட்டோ கூறுகிறார். இவர் சர்வதேச வர்த்தகத்துக்கான ஜப்பானிய கழகத்தில் பிரதம பொருளியலாளராக இருக்கிறார். தொடர்பியல் கைத்தொழிலில் செம்பின் இடத்தை மலிவான கண்ணாடி நார்கள் துரிதமாகப் பிடித்து வருகின்றன. உணவைப் பொதிப் படுத்துவதில் கண்ணாடியும் பிளாஸ்திக்கும் அலுமினியமும் தகரத்தை வெளித்தள்ளி வருகின்றன.

பிரச்சினையை அதிகரிக்க, கைத்தொழில் நாடுகள் குறிப்பாக அமெரிக்காவும் ஐரோப்பாவும் உணவுப் பொருள்களைப் பெருமளவில் ஏற்றுமதி செய்து வருகின்றன. ஏனென்றால் விவசாயிகளுக்கு வழங்கப்படும் மான்ய உதவிகள் உற்பத்திப் பெருக்கத்துக்கு அடிகோலியுள்ளன. இதன் விளைவாக, அமெரிக்காவின் அரிசி ஏற்றுமதிகள் ஆசியாவில் தாய்லாந்தின் இலாபகரமான அரிசி வியாபாரத்தை இப்பொழுது பயமுறுத்துகின்றன. ஐரோப்பிய பொருளாதார சமூகத்தின் சீனி ஏற்றுமதிகள் வளர்முக நாடுகளின் சீனி ஏற்றுமதியாளர்களைப் பாதித்து வருகின்றன.

வளர்முக நாடுகள் ஏற்றுமதிப் பொருள்களைப் பன்முகப் படுத்த வேண்டும் அல்லது ஒரு பயங்கரமான எதிர்காலத்தை எதிர்நோக்க வேண்டும் என்று அங்டாட்டின் துணைச் செயலாளர் - நாயகம் கருதுகிறார், "மிகப் பெரும்பாலான பிரதம விளை பொருள்கள் தொடர்பாக கோரிக்கையும் வழங்கலும் உருவாகும் முறைகளில் ஏற்பட்டு வரும் பாரதூரமான மாற்றங்கள் பல வளர்முக நாடுகளில் அபிவிருத்தி வாய்ப்புகளை ஆழமாகப் பாதித்தேதீரும்.'' இத்தகைய நாடுகளுக்கு அவற்றின் புதிய உற்பத்திப் பொருள்களுக்கு அபிவிருத்தியடைந்த நாடுகளில் சந்தை வசதிகள் தேவைப்படுகின்றன. ஆனால், வளர்முக நாடுகளின் புதிய உற்பத்திப் பொருள்கள் அபிவிருத்தியடைந்த நாடுகளில் உள்நாட்டு உற்பத்திப் பொருள்களைப் பாதுகாப்பதற்காக இறக்குமதிப் பொருள்கள் மீது விதிக்கப்படும் தீர்வைகளை எதிர்நோக்குகின்றன.

(22-ம் பக்கத் தொடர்ச்சி)

படவில்லை. இதன் விளைவாக எண்ணெய் விலைகளில் வீழ்ச்சி ஏற்பட்டது. 1985ன் கடைசிக் காலாண்டின் போது பீப்பா ஒன்று 27 அமெரிக்க டொலராக இருந்த விலை 1986ன் இரண்டாவது காலாண்டில் 10 டொலராக விழ்ச்சியடைந்தது.

இந்த விலை வீழ்ச்சி மட்டம் சவூதி அரேபியா கூட எதிர் பார்த்திராத ஒன்றாகும். ஒபெக் அல்லாத உற்பத்தி நாடுகள் தமது உற்பத்தி மட்டங்களைக் குறைப்பதன் மூலம் ஒபெக்கின் அதிகரித்த உற்பத்தியினால் நேரவிருக்கும் விலை வீழ்ச்சியைத் தவிர்க்க முயலும் என சவூதி அரேபியா நம்பியிருந்தது. பீப்பா ஒன்றின் விலையை 15 - 20 அ. டொலருக்குள் வைத்திருக்க இந் நாடுகள் முயலும் என சவூதி எதிர்பார்த்திருந்தது. எனவே, ஒபெக் அல்லாத நாடுகள் விலை வீழ்ச்சிக்கு இடமளித்ததன் காரணமாக எதிர்பார்த்திராத பல சிக்கல்கள் தோன்றின.

ஏனைய அங்கத்துவ நாடுகளின் எதிர்ப்புக்கு மத்தியிலும் கூட, சவூதி அரேபியா குறைந்த எண்ணெய் விலைகளில் பல அநுகூலங்கள் இருப்பதனை காண்கிறது. குறுகிய காலத்தில் இது சென்மதி நிலுவைப்பிரச்சினைகளைத் தோற்றுவித்த போதிலும், நீண்டகாலத்தில் உலகளாவிய எண்ணெய்க்கான கேள்வியில் ஒரு புதிய அதிகரிப்பினை இது கொண்டு வரும் என அது நம்புகிறது.

உலக பொருளாதார மந்தம், எண்ணெய்ப் பாவனையில் சிக்கனம், பதிலீட்டு வலுப் பொருட்கள் போன்ற பல்வேறு காரணங்களினால் உலக சுத்திகரிக்கப்படாத எண்ணெய் நுகர்வு 1979 இலிருந்து 1983 வரையில் ஆண்டொன்றுக்கு சராசரியாக 5 சதவிதம் வீழ்ச்சியடைந்துள்ளது. பொருளாதார ஒத்துழைப்புக்கும் அபிவிருத்திக்குமான நாடுகளின் எண்ணெய் இறக்குமதிகள் நாளொன்றுக்கு 26 லட்சம் பீப்பாக்களிலிருந்து 16 லட்சம் பீப்பாக்களாக வீழ்ச்சியடைந்தன. மலிவான எண்ணெய் விலைகள் நுகர்வு நாடுகளில் வலுப்பிரதியீட்டு முயற்சிகளுக்கு வழங்கப்பட்டிருந்த ஊக்குவிப்புக்களை அகற்றவும், ஒபெக் அல்லாத நாடுகளில் புதிய எண்ணெய் வயல்களை அபிவிருத்தி செய்வதனை தடுக்கவும் வழிகோலலாம்.

எண்ணெய் விலைகளில் ஒரு குறிப்பிடக் கூடிய விலை மீட்சி இந்த தசாப்தத்துக்குள் ஏற்பட வாய்ப்பில்லை என்றே பல அவதானிகள் கருதுகின்றனர்.

நன்றி: ஸவுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் போதைவஸ்து வியாபாரமும் பாவனையும் தற்போதைய நிலைமை

(இவ்வறிக்கை தேசிய அபாயகரமான போதைவஸ்துக்கள் கட்டுப்பாட்டுச் சபையினால் தயாரிக்கப்பட்டதாகும்.)

## 1. அறிமுகம்

பல்வேறு போதை வஸ்துக்களின் துஷ்பிரயோகம் உலகின் பெரும்பாலான பகுதிகளில் அதிக அளவில் நடைபெற்று வருகின்றது; இது இலங்கை உட்படச் சில நாடுகளில் இப்பொழுது அதிகரித்து வருகிறது. மதுசாரத்துடன் சேர்த்து அடிக்கடி பல்வேறு போதை வஸ்துக்கள் உபயோகிக்கப்படுவதால் உடலாரோக்கியத்துக்கு அபாயங்கள் நேரிடுகின்றன. போதை வஸ்துக்களுக்கான செடிகளின் சட்ட விரோதமான பயிரிடலும் போதைவஸ்துக்களின் உற்பத்தியும் நடைபெறும் நாடுகளின் தொகை வளர்ந்து கொண்டேயிருக்கிறது. இந்நாடுகள் சமீப கிழக்கு, மத்திய கிழக்கு, தென்னாசியா உட்பட உலகின் பல பிரதேசங்களில் அமைந்துள்ளன. மேற்குறித்த பகுதிகளில் நடைபெறும் சட்ட விரோதமான சாகுபடியும், உற்பத்தியும், வியாபாரமும் தவிர்க்க முடியாதவாறு அப்பகுதிகளில்வாழும் உள்ளூர் மக்களின் துஷ்பிரயோகத்துக்கு அடிகோலியுள்ளனவென்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது; இத்துஷ்பிரயோகம் இளவயதினரை அதிகரித்த அளவில் பாதித்து வருவதுடன் அதன் மூலம் இத்தகைய நாடுகளின் எதிர்காலத்துக்கும் ஓர் ஆபத்தாக உருவெடுத்து வருகிறது.

இச் சட்டவிரோதமான நடவடிக்கைகளுக்கு, கட்டுப்பாடான முறையில் அமைந்துள்ள குற்றவாளிகளைக் கொண்ட குழுக்களே நிதியளிப்புச்செய்து, செயற்படுத்திவருகின்றன. இக்குழுக்கள் பெரும்பாலும் சர்வதேச தொடர்புகளைக் கொண்டனவாயுள்ளன. பல பிரதேசங்களில் தோன்றியுள்ள ஓர் அபாயகரமான நிலைமை என்னவென்றால், போதைவஸ்துக்களைக் கள்ளத்தனமாக இடத்துக்கிடம் கொண்டுபோய் வியாபாரம் செய்வோரிடையே இருந்துவரும் நெருங்கிய தொடர்புகளாகும். இவ்வியாபாரத்திலிருந்து கிடைக்கும் ஆதாயம் துப்பாக்கி முதலான படைக்கலங்களில் நடைபெறும் கள்ளக் கடத்தல், சதிநாசவேலைகள், சர்வதேச பயங்காரவாதம் உட்பட மற்றும் பெருங் குற்ற நடவடிக்கைகளுக்கு நிதிகளை வழங்க உபயோகிக்கப்படுகிறது. போதைவஸ்துக்களில் நடைபெறும் சட்டவிரோதமான வியாபாரம் பிரமாண்டமான இலாபங்களைத் தருகிறது. இந்த ஆதாயங்கள் சில நாடுகளில் பொருளாதார, சமூக ஒழுங்கைச் சீர்குலைக்கவும், வன்செயல்களையும் ஊழல்களையும் பரப்பவும், அரசியல் ஸ்திரத்தையும் பந்தோபஸ்தையும் மோசமாக்கவும் பயன்படுத்தப்படுகின்றன.

சட்ட விரோதமான போதைவஸ்து வியாபாரத்துக்கும் துஷ்பிரயோகத்துக்குமெதிராகச் சர்வதேச சமூகம் ஏற்கெனவே சவிஸ்தாரமான எதிர்த் தாக்குதல்களைத் தொடுத்துள்ளது. இதைவிட பலமான அரசியல் நடவடிக்கைகள் அரசாங்கங்களின் உயர் மட்டங்களில் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. பயனுறுதிவாய்ந்த, ஒன்றிணைந்த நடவடிக்கைகளை வளர்ப்பதற்காகக் கிரமமாக எடுக்கப்படும் புதிய முயற்சிகளும் குறிப்பாகச் செயற்பாட்டு மட்டத்தில் பிரதேசங்களுக்கிடையிலான ஒத்துழைப்பைப் பெருக்கும் நடவடிக்கைகளும் ஓரளவு வெற்றிக்கு அடிகோலிவருகின்றன. சகல நாடுகளும் ஒத்துழைத்தால் மட்டுமே பாதிக்கப்பட்ட எந்தவொரு நாட்டிலும் பயன்படத்தக்க, நிரந்தர முன்னேற்றத்தைச் சாதிக்கமுடியும் என்ற பொது நம்பிக்கையிலிருந்தே இந்தக் கூட்டு எதிர் நடவடிக்கைகள் யாவும் பிறக்கின்றன.

அண்டை நாடுகளில் அபினும் ஹீரோயினும் பெரும் அளவுகளில் கைப்பற்றப்பட்டுவரும் சம்பவங்கள், கசகசாச் செடிகள் சட்ட விரோதமாக விரிவான அளவில் சாகுபடி செய்யப்பட்டு வருவதையும், கணிசமான அளவில் ஹீரோயினை உற்பத்தி செய்யும் ஆற்றல் இருந்து வருவதையும் எடுத்துக் காட்டுகின்றன. ஹீரோயினில் அதிகரித்து வரும் கள்ளக் கடத்தலும் அது சுலபமாகக் கிடைக்கக் கூடியதாயிருப்பதும், இலங்கை உட்பட ஆசியப்பிரதேசத்தின் பல பகுதிகள் இந்தப் போதைவஸ்தின் துஷ்பிரயோகம் பெருமளவு அதிகரிப்பதற்கு அடிகோலியுள்ளது.

## 2. போதைவஸ்து துஷ்பிரயோகம்

சட்ட விரோதமான போதைவஸ்து வியாபாரத்தினாலும் போதைவஸ்தைச் சார்ந்திருக்கும் நிலையினாலும் ஏற்படும் எதிர்மறையான விளைவுகளைத் தவிர்க்க எந்த நாட்டினாலும் முடியவில்லை. இது குடிமக்களின் ஆரோக்கியத்தைப் பாதித்து வருவதுடன் பொருளாதார. சமூக ஸ்தாபனங்களையும் நிலைகுலைத்து வருகின்றது. பங்கி (சடைக்கஞ்சா), அபினி அடங்கிய போதைவஸ்துக்கள், மற்றும் அடிமைப்படுத்தும் இலாகிரி வஸ்துக்கள் ஆகியனவற்றின் துஷ்பிரயோகம் தொற்றுநோய் மட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டத்தில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதன் விளைவாக, போதைவஸ்து தொடர்பான மரணங்களும் குற்றங்களுமாகிய இரண்டும் நிகழ்ந்து வருகின்றன. குறிப்பாக, இது இளவயதினரை அழித்துவிடுவதால், பல நாட்டு மக்களின் எதிர்கால வலிமையை நிர்மூலமாக்கிவிடுகிறது. போதைவஸ்துக்கள் தொடர்ந்து உற்பத்தி செய்யப்பட்டு வருவதால், அவற்றின் வழங்கல் தொடர்ந்து அதிகரிக்கிறது: போதை வஸ்துக்கள் கிடைக்கக் கூடியதாயிருப்பது அவற்றின் துஷ்பிரயோகத்தில் ஒரு முக்கிய காரணியாக விளங்குகிறதென்று ஏற்றுக்கொள்ளப்படுகிறது. குறிப்பாக ஹீரோயின் இப்பொழுதுவிட மிகப் பரந்த அளவில் உபயோகிக்கப்படும் நிலைமை நிச்சயமாக உருவாகும்.

### 2. 1. இலங்கையில் துஷ்பிரயோகஞ் செய்யப்படும் போதை வஸ்துக்கள்

### 2. 1. 1. பங்கி (சடைக்கஞ்சா)

சடைக்கஞ்சா பிரதானமாக நாட்டின் தென்பகுதியிலும் தென்மேற்குப் பிரதேசத்திலும் தனமல்வில, அம்பாந்தோட்டை, மொனருகலை, வெள்ளவாய, பிபிலே ஆகிய பகுதிகளிலுள்ள காட்டுப் பரப்புகளில் சாகுபடி செய்யப்படுகிறது. தற்போது இச் சாகுபடியின் கீழுள்ள மொத்தப் பரப்பு 200 ஏக்கர் என மதிப்பிடப்படுகிறது. அறுவடை செய்யப்படும் கஞ்சா வழமையாகக் கொழும்புக்கும் அதன் சுற்றுப்புறங்களுக்கும் நிதியாளர்களாலும் தனிப்பட்ட கொள்வனவாளர்களாலும் கொண்டு போகப்படுகிறது. இப்பகுதிகளிலிருந்து மரக்கறிகள் போன்ற கிரமமான வியாபாரப் பொருள்கள் கொண்டுசெல்லப்படும் வாகனங்களில் ஒளித்து வைக்கப்பட்டே வீதி வழியாக இது கொண்டுசெல்லப்படுகிறது.

கீழ்க்கண்ட அட்டவணை 1980ம் ஆண்டிலிருந்து 1985ம் ஆண்டுவரை கைப்பற்றப்பட்ட கஞ்சாவின் தொகைகளையும் கஞ்சா தொடர்பான குற்றங்களுக்காகக் கைது செய்யப்பட்டவர்களின் தொகையையும் எடுத்துக்காட்டுகிறது.

1980, 1981, 1983 ஆகிய ஆண்டுகளில் நடத்தப்பட்ட விசேஷ கஞ்சா ஒழிப்பு இயக்கங்களின் விளைவாக, சாகுபடியின் கீழிருந்த மொத்தப்பரப்பு குறைந்தது. எனினும், தேசிய முதலிடம் பெறவேண்டிய மற்றும் விஷயங்களின் காரணமாக, 1983ம் ஆண்டுக்குப் பின்னர், ஒழிப்பு நடவடிக்கைகள் பெருமளவுக்குக் குறைந்துவிட்டன.

1981ம் ஆண்டில் 18,000 கஞ்சா அடிமைகளிருந்தனரென்று மதிப்பிடப்பட்டது. இந்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் சடைக் கஞ்சா (பங்கி) உள்நாட்டு நுகர்வுக்குத் தேவைப்படும் தொகையைவிட அதிகமென இப்பொழுது ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக பிரிட்டனிலே அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட கஞ்சாக்கடத்தல் சம்பவங்களிலிருந்து, உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் கஞ்சா பிரதானமாக, தேங்காய் எண்ணெய்ப் பீப்பாக்கள், தேயிலைப் பெட்டிகள் போன்ற கிரமமான ஏற்றுமதிகளில் ஒளித்துவைக்கப்பட்டு, கடல் வழியாகச் சட்டவிரோதமாக ஏற்றுமதி செய்யப்படுகிறதெனத் தெரியவருகிறது.

| ஆண்டு | கைதானோர் தொகை | கைப்பற்றிய கஞ்சாவின் அளவு |
|---|---|---|
| 1980 | 6,009 | 3,60,227 கிலோ |
| 1981 | 6,015 | 4,33,777 " |
| 1982 | 4,977 | 11,532 " |
| 1983 | 3,893 | 70,548 " |
| 1984 | 4,901 | 7,396 " |
| 1985 | 3,058 | 11,238 " |

இலங்கைக் கஞ்சாவைவிட அதிக சக்திவாய்ந்த கேரளக் கஞ்சா இந்தியாவிலிருந்து பிரதானமாகக் கள்ளக்கடத்தல் மூலம் கடல் வழியாக இலங்கைக்குள் கொண்டுவரப்படுவதாகவும் இக் கண்டுபிடிப்புகளிலிருந்து தெரிய வருகிறது. இது இலங்கையில் நுகரப்படுவதற்காகவும் ஐரோப்பாவுக்கும் வட அமெரிக்காவுக்கும் கொண்டுசெல்லப்படுவதற்காகவும் இங்கு இவ்விதம் சட்ட விரோதமாகக் கொண்டு வரப்படுகிறது.

கடந்த மூன்று வருடங்களின் போது உள்நாட்டுக் கஞ்சாவின் விலை மூலத்தில் கிலோ ஒன்று 40 ரூபாவுக்கும் 120 ரூபாவுக்கும் இடையேயிருந்து வந்துள்ளது: கொழும்பில் கிலோ ஒன்று 100 ரூபாவுக்கும் 250/- ரூபாவுக்குமிடையேயிருந்துள்ளது; ஏற்றுமதிக்கான சிறந்த ரகம் கிலோ ஒன்று 500/- ரூபாவாக இருந்து வந்திருக்கிறது.

### 2:1:2. ஹாஷிஷ் (கஞ்சாத்துளிர்)

இந்நாட்டிலுள்ள ஹாஷிஷில் பெரும் விகிதம் முன்னர் ஒன்றில் பாகிஸ்தானிலிருந்தோ அல்லது இந்தியாவிலிருந்தோ தான் வருகிறது. வழக்கமாக இலங்கையரல்லாதாரால் நாட்டுக்குள் கொண்டுவரப்படுகிறது. மறுபக்கம் அட்டவணை 1980ம் ஆண்டிலிருந்து 1985ம் ஆண்டு வரை கண்டுபிடிக்கப்பட்ட சம்பவ விவரங்களைக் காட்டுகின்றது.

### 2.1.3. உள நிலைகளைப் பாதிக்கும் பொருள்கள்

உள நிலைகளைப் பாதிக்கும் பொருள்களின் துஷ்பிரயோகம் சம்பந்தமாகக் கள்ளங் கண்டுபிடிப்புகள் மிகச்சிலவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| ஆண்டு | கைதானோர் தொகை | கைப்பற்றிய தொகை |
|---|---|---|
| 1980 | 59 | 79 கிலோ |
| 1981 | 98 | 126 " |
| 1982 | 99 | 28.2 " |
| 1983 | 61 | 2.5 " |
| 1984 | 47 | 18.5 " |
| 1985 | 25 | 1.2 " |

### 2.1.4. அபின்

உள்நாட்டில் விநியோகிக்கப்படுவதற்காக இந்தியாவிலிருந்து சட்ட விரோதமாக அபின் கள்ளக் கடத்தல் செய்யப்படுகிறது. இது பிரதானமாகப் பாக்கு நீரிணை வழியாகக் கடல் மூலம் கொண்டு வரப்படுகிறது. சமீப ஆண்டுகளில் அபின் கிடைப்பது குறைந்திருப்பதாகப் புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன. இக் குறைவுக்குப் பிரதான காரணம் அபினைத் துஷ்பிரயோகஞ் செய்தோர் ஹீரோயினுக்கு மாறிவிட்டதும், புதிய போதைவஸ்துப் பிரியர்கள் அபினைவிட அதிக சக்திவாய்ந்த ஹீரோயினை உபயோகிக்க விரும்புவதுமாகும். வடபகுதியில் பரம்பரையாகக் கரையிறங்கும் பகுதிகளில் பாதுகாப்புப் படைகள் இருந்துவருவதால் அபினின் கள்ளக்கடத்தல் ஓரளவுக்குக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. கீழ்க்கண்ட அட்டவணை 1980ம் ஆண்டிலிருந்து 1985ம் ஆண்டுவரை அபினின் கள்ளக் கடத்தல் சம்பந்தமாகக் கைது செய்யப்பட்டோர், கைப்பற்றப்பட்ட அபினின் தொகைகள் ஆகிய விவரங்களைத் தருகிறது:

1975ம் ஆண்டுக்கும் 1979ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் போதை வஸ்துக்களைச் சார்ந்திருக்கும் நிலையிலிருந்து விடுபடுவதற்கு உதவி கேட்டு வந்த 3,000 பேரில் 60 சதவிகிதத்தினர் நாட்பட்ட அடிமைகள். 1980ம் ஆண்டிலே நாட்டில் அபினை உபயோகிப்போர் ஏறக்குறைய 5,800 பேர் இருப்பதாக மதிப்பிடப்பட்டது. ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட அபின் அடிமைகள் குழுவொன்றின் சராசரி வயது 55 ஆகவும், அவர்களில் 94 சதவிகிதத்தினர் விவாகமானவர்களாகவும் இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டது. 1980ம் ஆண்டுக்கும் 1985ம் ஆண்டுக்குமிடையே அபினின் துஷ்பிரயோகம் குறைந்திருந்தது. ஹீரோயினைத் துஷ்பிரயோகஞ் செய்வோரின் தொகை துரிதமாக அதிகரித்த அதே சமயத்தில் இக் குறைவு காணப்பட்டது. தற்போது அபின் மிகக்குறைந்த அளவிலேயே கிடைக்கக் கூடியதாயுள்ளது.

1981ம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்ட ஓர் இரகசிய ஹீரோயின் ஆய்வு கூடத்தைத் தவிர, மற்றப்படி இலங்கையில் அபின் மோர்பைனாகவும் ஹீரோயினாகவும் மாற்றப்பட்டதற்கான சாட்சியங்கள் எதுவும் கிடைக்கவில்லை.

### 2.1.5. ஹீரோயின்

இந்நாட்டுக்குள் கொண்டு வரப்படும் ஹீரோயினில் கிட்டத்தட்ட முழுவதும் இந்தியாவிலிருந்தும் பாகிஸ்தானிலிருந்துமே வருகிறது. இப்போதை வஸ்துவின் மூலஸ்தானம் "பொற்பிறை" பிரதேசம் எனப்படும் பகுதியில் அமைந்துள்ளது. இது ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், ஈரான் ஆகிய நாடுகளின் எல்லைகளுக்குள் அமைந்துள்ள பிரதேசமாகும். இப்பகுதியில்தான் அபின் பெறப்படும் கசகசாச் செடிகள் சட்டவிரோதமாகப் பயிர் செய்யப்படுகின்றன. மலைப்பாங்கான இப்பிரதேசத்தில் சட்டத்தை அமுல் நடத்துவது கடினம் என்று சொல்லப்படுகிறது. அத்துடன், மலைஜாதி மக்கள் வாழும் இப்பகுதிகள் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இல்லை. ஹீரோயினைக் கள்ளத்தனமாகக் கடத்திக் கொண்டு வருவோரில் பெரும்பாலோர், (பிறருக்காக இவ்வேலையைச் செய்யும் தூதர்கள்) இலங்கையர்களாகவே இருக்கின்றனர். இவர்கள் இந்தியாவிலும் பாகிஸ்தானிலுமுள்ள துறைமுகங்களிலிருந்து விமான மார்க்கமாகப் பயணஞ் செய்து, இந் நாட்டுக்கு வந்து சேருகின்றனர். இலங்கை வர்த்தகக் கப்பல் மாலுமிகளும் ஹீரோயினைச் சட்ட விரோதமாக இந்நாட்டுக்குக் கொண்டுவந்துள்ளனர். ஆனால் இவர்கள் கொண்டுவந்தது வரையறுக்கப்பட்ட அளவே. இலங்கையரல்லாதார் இலங்கைக்குள் ஹீரோயினைக் கள்ளத்தனமாகக் கடத்திக்கொண்டு வந்த ஒரு சில சம்பவங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவர்களும் பிரதானமாக விமான மூலமே இதைச் செய்துள்ளனர். இவர்களும் இந்தியாவிலும் பாகிஸ்தானிலுமுள்ள துறைமுகங்களிலிருந்தே பயணஞ் செய்துள்ளனர். இந்தக் கள்ளக் கடத்தல் தூதர்கள் பாகிஸ்தானியர்களாகவும் மேற்கு ஐரோப்பியர்களாகவும் இருந்துள்ளனர். 1980ம் ஆண்டிலிருந்து 1985ம் ஆண்டுவரை கைதானோரின் தொகையும் கைப்பற்றப்பட்ட ஹீரோயினின் தொகையும் கீழுள்ள அட்டவணையில் தரப்படுகின்றன.

| ஆண்டு | கைதானோர் தொகை | கைப்பற்றிய தொகை |
|---|---|---|
| 1980 | 148 | 188 கிலோ |
| 1981 | 165 | 28 " |
| 1982 | 166 | 11.3 " |
| 1983 | 148 | 6.3 " |
| 1984 | 152 | 1.4 " |
| 1985 | 68 | 4.6 " |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| ஆண்டு | கைதானோர் தொகை* | கைப்பற்றிய தொகை |
|---|---|---|
| 1980 | எவருமில்லை | ஒன்றுமில்லை |
| 1981 | 08 | 0.277 கிலோ |
| 1982 | 33 | 3.000 ,, |
| 1983 | 263 | 5.260 ,, |
| 1984 | 1,794 | 38.700 ,, |
| 1985 | 3,339 | 18.250 ,, |

*இலங்கையரல்லாதாரும் அடங்குவர்.

குறிப்பாக, மேற்கு ஐரோப்பாவுக்கு ஹீரோயினைக் கொண்டு போக இலங்கை ஓர் இடைவழிக் கடப்பு முகாமாகவே உபயோகிக்கப்பட்டுள்ளது. எனினும், கடந்த இரு வருடங்களில் இந்தப் போக்கு கவனிக்கத்தக்க முறையில் வீழ்ச்சியடைந்துள்ளது. ஏனென்றால், கள்ளக்கடத்தல் தூதர்கள் பாகிஸ்தானிலிருந்தோ அல்லது இந்தியாவிலிருந்தோ நேரடியாக இப்போதை வஸ்துவைக் குறித்த இடங்களுக்குக் கொண்டுபோவது சுலபமாகவும் வசதியாகவுமிருப்பதைக் காண்கின்றனர். இரு நாடுகளிலும் உள்ளூர் நுகர்வுக்கோ அல்லது ஐரோப்பாவுக்குக் கொண்டு போவதற்கான ஓர் இடைவழிக் கடப்பாகவோ ஹீரோயின் வழக்கமாகப் பயணப் பெட்டிகளின் போலி அடிப்பகுதிகளிலோ, உள்ளறைகளிலோ வைக்கப்பட்டு அல்லது பயணச் சாமான்களில் ஒளித்து வைக்கப்பட்டுக் கள்ளத்தனமாகக் கடத்தப்படுகிறது. இலங்கையர்களும் உடல் துவாரங்களில் ஹீரோயினை ஒளித்து வைத்துக் கடத்த முயன்ற சம்பவங்கள் தெரியவந்துள்ளன.

ஹீரோயினைச் சட்ட விரோதமாகக் கடத்தியதற்காக வெளிநாடுகளில் கைது செய்யப்பட்ட இலங்கையர்களின் தொகை அதிகரித்து வந்துள்ளது. இவர்களில் பெரும்பாலோர் தமிழினக் குழுவைச் சேர்ந்தவர்கள். வெளிநாடுகளில் ஹீரோயினைக் கள்ளக் கடத்தல் செய்யமுயன்ற குற்றங்களுக்காகக் கைது செய்யப்பட்ட இலங்கையர்களின் தொகை கீழ்க் கண்ட அட்டவணையில் தரப்படுகிறது.

| ஆண்டு | கைதானோர் தொகை | ஆண்டு | கைதானோர் தொகை |
|---|---|---|---|
| 1980 | 42 | 1983 | 231 |
| 1981 | 82 | 1984 | 301 |
| 1982 | 120 | 1985 | 315 |

வெளிநாடுகளில் கைது செய்யப்பட்ட எமது நாட்டுப் பிரஜைகளின் அதிகரித்த தொகையுடன் ஒப்பிடுகையில், போதை வஸ்து குற்றங்களுக்காக இலங்கையில் கைது செய்யப்பட்ட அந்நியர்களின் தொகை குறிப்பிடத்தக்கவாறு குறைந்துள்ளது. இதற்குத் திருத்தப்பட்ட சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ள கடும் தண்டனைகள் ஓரளவுக்குக் காரணமாகுமெனக் கூறப்படுகிறது. 1980ம் ஆண்டிலிருந்து 1985ம் ஆண்டுவரை போதை வஸ்து குற்றங்களுக்காகக் கைது செய்யப்பட்ட அந்நிய நாட்டினரின் தொகை கீழ்க்கண்ட அட்டவணையில் காட்டப்படுகிறது.

பாகிஸ்தானிலும் இந்தியாவிலும் ஹீரோயின் உடனடியாகக் கிடைக்கக் கூடியதாயிருப்பதால், கள்ளக்கடத்தல் தூதர்களாகப் பணியாற்றப் பெருந்தொகையான இலங்கையர்கள் ஈர்க்கப்பட்டுள்ளனர். ஹீரோயினை வாங்குவதற்கான பணம் வெளிநாட்டு நாணயத்தில் தரப்படுகிறது. ஹீரோயினை வாங்குவதற்காகத் தங்கம் ஒரு மாற்றுப் பொருளாக உபயோகிக்கப்படுகிறது அல்லது ஹீரோயினை வாங்குவதற்கான பணத்துக்காகத் தங்கம் விற்கப்படுகிறது. இந்நோக்கத்துக்காகத் தங்கம் இலங்கைக்கு வெளியே கள்ளத்தனமாகக் கடத்தப்படுகிறது.

3. ஹீரோயின் துஷ்பிரயோகம்

இலங்கையில் ஹீரோயினின் துஷ்பிரயோகம் 1980ம் ஆண்டில் முதல் முறையாகக் கண்டு பிடிக்கப்பட்டது. அதற்குப்பின் ஹீரோயின் கிடைக்கும் வாய்ப்புகள் அதிகரித்துள்ளன. அதனுடன் இந்த ஆபத்தான போதை வஸ்துவைத் துஷ்பிரயோகஞ் செய்வோரின் தொகையும் அதிகரித்துள்ளது.

3.1. ஆரம்பத்தில், கொழும்பு மாநகரிலும் உல்லாசப் பயணிகள் தங்கும் ஒரு சில பகுதிகளிலும் ஹீரோயின உபயோகிக்கப்படும் சம்பவங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. மற்றும் நகரப் பகுதிகளிலும் ஓரளவுக்கு நகரப் பகுதிகளாயுள்ள பிரதேசங்களிலும் ஒரு சில கிராமப் பகுதிகளிலும் அது உபயோகிக்கப்படுவதற்கான சான்றுகள் அண்மையில் கிடைத்துள்ளன. இப்போது கவலையை வளர்த்து வருவதென்னவென்றால், ஹீரோயின் அருந்தும் பழக்கத்துக்கு அடிமையாகும் நிலை நாட்டின் அபிவிருத்தி முயற்சிப் பகுதிகளுக்கும் பரவத் தொடங்கியுள்ளதென்ற ஒரு சந்தேகமாகும்.

| ஆண்டு | கைதானோர் தொகை | ஆண்டு | கைதானோர் தொகை |
|---|---|---|---|
| 1980 | 88 | 1983 | 123 |
| 1981 | 147 | 1984 | 54 |
| 1982 | 139 | 1985 | 34 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1985ம் ஆண்டின் பிற்பகுதியில் போதைவஸ்து ஒழிப்புச் சபை ஹிக்கடுவையிலுள்ள உதவி அரசாங்க அதிபர் பிரிவில் போதைவஸ்து துஷ்பிரயோக நிலைமைபற்றி ஓர் ஆய்வை நடாத்தியது. ஏனென்றால் உல்லாசப் பயணிகள் தங்கும் முக்கியமான சுகவாசஸ்தலங்கள் இப்பகுதியில் தான் அமைந்துள்ளன. இந்த ஆய்வின் குறிக்கோள்கள், பாதிக்கப்பட்ட இப்பகுதியில் தற்போதுள்ள போதைவஸ்து துஷ்பிரயோக நிலைமையின் தன்மையையும் அளவையும் இனங்கண்டு மதிப்பிடுவதும், உல்லாசப் பயணிகளின் வருகையால் போதைவஸ்து துஷ்பிரயோகப் பிரச்சினையில் ஏற்பட்டுள்ள தாக்கத்தை மதிப்பிடுவதுமாகும்.

இந்த ஆய்வின் முக்கியமான முடிவுகளில் சில வருமாறு:

1. இப்பகுதியில் ஒப்பியல் ரீதியாகக் குடிமக்களின் அடர்த்தி அதிகமாயிருக்கிறது. ஒரு குடும்பத்தில் சராசரியாக ஆறேழுபேர் அடங்கியுள்ளனர். இம்மக்களின் கல்வித்தரங்கள் ஒப்பியல் ரீதியாகக் குறைவாயுள்ளன. 29 சதவிகிதத்தினர் எட்டாம் தரத்தில் தங்கள் படிப்பை நிறுத்திவிட்டதாகக் கண்டுபிடிக்கப்பட்டனர். 2 சதவிகிதத்தினர் மட்டுமே பத்தாம் தரம் வகுப்புவரை படித்துள்ளனர்.

விவசாய நடவடிக்கைகளுக்குக் கிடைக்கக் கூடியதாயுள்ள காணிகளும் மற்றும் வளங்களும் ஒப்பியல்ரீதியாகக் குறைவாகவே உள்ளன. இப்பகுதியிலுள்ள அதிக இலாபந்தரும் உல்லாசப் பயணத்துறைக் கைத்தொழில் மீன்பிடி வள்ளங்களைக் கரையில் நிறுத்தி வைப்பதற்குப் பரம்பரையாக உபயோகிக்கப்பட்ட மிகப் பரந்த காணிப் பரப்புகளில் அமைந்துள்ளது. இக் கைத்தொழில் இளவயது மீனவர்களை அவர்களுடைய பரம்பரைத் தொழிலிலிருந்தும் கவர்ந்து விட்டது. இதனால் மீன்பிடித் தொழில் கணிசமான அளவுக்கு வீழ்ச்சியடைந்துள்ளது.

2. இப்பகுதியில் வசிக்கும் மக்களில் பெரும்பாலோரின் வருமானத்துக்கு உல்லாசப் பயணத் துறையே முக்கிய ஆதாரமாக உள்ளது. உல்லாசப் பயணத் துறையுடன் இணைந்த சட்டபூர்வமான தொழில்களிலிருந்து பெறப்படும் வருமானத்துக்கு மேலதிகமாகத் தங்கள் வருவாயை அதிகரித்துக்கொள்வதற்காகப் பெண் விபசாரம், தன்னினச் சேர்க்கை போன்ற சட்டவிரோதமான காரியங்களிலும் இவர்கள் ஈடுபடுகிறார்கள். ஹிக்கடுவையின் பொருளாதாரம் உல்லாசப் பயணத்துறையை அடிப்படையாகக் கொண்டிருப்பதனால், இங்குள்ள மக்களின் குறிக்கோள் குறிப்பாக உல்லாசப் பயணிகள் அதிகமாக வரும் பருவ காலத்தில் இக்கைத்தொழிலுக்குச் சட்ட பூர்வமாகவோ அல்லது வேறு விதத்திலோ சேவைகளை வழங்குவதன் மூலம் அவர்களுடைய சம்பாத்தியங்களை ஆகக்கூடிய அளவுக்குப் பெருக்கிக் கொள்வதேயாகும். ஹிக்கடுவையில் போதைவஸ்து துஷ்பிரயோகப் பிரச்சினையைத் தனியாகப் பிரித்து நோக்குவதற்கில்லை. ஏனென்றால், அது மற்றும் சமூகப் பிரச்சினைகளுடன் இரண்டறக் கலந்துள்ளது.

3. இப்பகுதியில் மிக விரிவான அளவில் துஷ்பிரயோகஞ் செய்யப்படும் போதைவஸ்துக்கள் ஹீரோயினும் பங்கி (சடைக் கஞ்சா) யுமாகும். போதைவஸ்துக்களை உபயோகிக்கும் உல்லாசப் பயணிகளுடன் நெருங்கிப் பழகுவதால், இளைஞர்கள் போதைவஸ்துப் பழக்கத்தைக் கைக்கொண்டுவிட்டனர். எனினும், தற்போது பலர் தங்களுக்குச் சமதையான நண்பர்களாலேயே போதைவஸ்துக்களுக்கு அறிமுகஞ் செய்யப்பட்டுவருகிறார்கள். ஹிக்கடுவ பகுதியில் ஹீரோயினின் சில்லறை வியாபாரம் கிட்டத்தட்ட முற்றாக இலங்கையர்களின் கைகளிலேயே இருந்துவருகிறது.

4. உல்லாசப் பயணிகளுக்கு வழிகாட்டிகளாக உள்ள பலர் அவர்களே தன்னினச் சேர்க்கையிலும் போதைவஸ்து துஷ்பிரயோகத்திலும் ஈடுபட்டு வருபவர்களாவர். போட்டி வழிகாட்டிக்கு ஒரு வெளிநாட்டு வாடிக்கையாளரை இழந்துவிடாது தவிர்ப்பதற்காகவே பிரதானமாக அவர்கள் இப்படிச் செய்கின்றனர்.

5. 2,000 போதைவஸ்து அடிமைகள் இப்பகுதியில் வசிப்பதாக மதிப்பிடப்படுகிறது. ஹிக்கடுவையில் ஹீரோயின் குறைந்த விலையில் கிடைப்பதால் அம்பலாங்கொடை, காலி போன்ற அயல் பகுதிகளிருந்து பல போதைவஸ்து அடிமைகள் ஹீரோயின் வாங்குவதற்காக ஹிக்கடுவைக்கு வருகின்றனர்.

### 3.2. சமீபப் போக்குகள்

அண்மைக் காலம்வரை அபின் கலந்த போதைவஸ்தை உபயோகிக்கும் பழக்கம் பெரும்பாலும் நடுத்தர வயதானவர்களிடையேதான் இருந்தது. இப்பொழுது இப்பழக்கம் இளைஞர்களுக்கும் வந்துவிட்டது. ஹீரோயின் பழக்கம் இளம் வயதினரிடையே சர்வ சாதாரணமாகக் காணப்படுகிறது என்று பல பரிசீலனைகள் எடுத்துக் காட்டியுள்ளன. போதைவஸ்து தொடர்பான குற்றங்களில் சம்பந்தப்படுவோர் 18 வயதுக்கும் 30 வயதுக்கும் கிடைப்பட்டவர்களாயுள்ளனர் என சட்டஅமுல் புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. சிகிச்சை பெற வந்த ஹீரோயின் அடிமைகளுடன் ஏற்பட்ட அனுபவம் அவர்களைவிடக் குறைந்த வயதினர் குழு இப் போதைவஸ்து உபயோகத்தில் ஈடுபட்டிருப்பதைச் சுட்டிக் காட்டுகின்றது. களுத்துறை கல்விச் சுற்றுவட்டத்தில் 8ம் தரத்திலிருந்து 12ம் தரம் வரையுள்ள 6,205 மாணவர்களிடையே அடிமையாக்கும்போதைவஸ்துக்களின் மருத்துவஞ்சாரா உபயோகம் சந்பந்தமான அறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வையும் மன நிலைகளையும் பழக்கங்களையும் மதிப்பிடும் நோக்கத்தைக் கொண்ட ஒரு பரிசீலனை 1985ம் ஆண்டின் முதற் காற்பகுதியின்போது 37 பாடசாலைகளில் நடத்தப்பட்டது. இப்பரிசீலனைக்குக் களுத்துறையில் உள்ள தேசிய சுகாதாரக்கழகம் மையமாகக் கொள்ளப்பட்டது. கிட்ட இருப்பது, செயற்படுதல் சுலபம் ஆகிய காரணங்களுக்காகவே இம் மாவட்டம் தெரிவு செய்யப்பட்டது. இது தவிர, களுத்துறை மாவட்டம் இலங்கைக் கிராமியத்தன்மை, நகர்ப்புறக் காட்சிகள் ஆகியவற்றில் பல சிறப்பியல்புகளைப் பகிர்ந்து கொள்கின்றது. இன்னொரு காரணம், களுத்துறை மாவட்டம் கொழும்புக்கும் உல்லாசப் பயணத்துறையின் செல்வாக்குக்கும் வெகு அருகிலிருப்பதாகும். இப்பரிசீலனையிலிருந்து 1.2 சதவிகிதத்தினர் அடிமைப்படுத்தும் போதைவஸ்துக்களை குறைந்தபட்சம் ஒரு முறையேனும் உபயோகித்துள்ளனர் என்பது தெரியவந்தது. தற்போது உபயோகிப்போர் அனைவரும் ஆண் மாணவர்கள். குறைந்தபட்சம் ஒரு முறையாவது எந்தப் போதைவஸ்துவையேனும் உபயோகித்துள்ள மாணவர்களில் 63.9 சதவிகிதத்தினர் சடைக் கஞ்சா (பங்கி) வையும் 33.3 சதவிகிதத்தினர் ஹீரோயினையும் எஞ்சிய 2.8 சதவிகிதத்தினர் அபினையும் உபயோகித்துள்ளனர். மாணவர்களில் 38.7 சதவிகிதத்தினர் ஆராய்ந்தறிந்து கொள்ளும் வேட்கையினாலும் இன்னொரு 49.3 சதவிகிதத்தினர் நண்பர்களின் நெருக்குதலினாலும் போதைவஸ்துக்களை உபயோகித்துள்ளனர்.

உபயோகித்தவர்களில் 2.7 சதவிகிதத்தினர் 12 வயதுக்கு முன்பே தங்களுடைய முதலாவது அனுபவத்தைப் பெற்றுள்ளனர்; 12 வயதுக்கும் 16 வயதுக்கும் இடைப்பட்ட 13.3 சதவிகிதத்தினரும் எஞ்சியுள்ள 84 சதவிகிதத்தினரும் 16 வயதானதற்குப்பின்பு உபயோகித்துள்ளனர்.

பரிசீலனைக்குள்ளான மாணவர்களின் மொத்தத் தொகையில் 11.7 சதவிகிதத்தினர் மதுசாரத்தை உபயோகித்துள்ளனர்; 9.0 சதவிகிதத்தினர் புகையிலையை உபயோகித்திருக்கின்றனர்.

### 3.3. ஹீரோயின் துஷ்பிரயோக அளவு

1980ம் ஆண்டிலிருந்து இலங்கையில் போதைவஸ்து தொடர்பான குற்றங்களுக்காக ஆண்டு தோறும் ஏறக்குறைய 6,000 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். 1980ம் ஆண்டில் போதைவஸ்து அரங்கில் ஹீரோயின் புகுத்தப்பட்டதற்குப் பின்பு ஹீரோயின் தொடர்பான வழக்குகள் 1984ம் ஆண்டுக்கும் 1985ம் ஆண்டுக்குமிடையே கிட்டத்தட்ட பத்து மடங்கு அதிகரித்துள்ளன. 1984ம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்ட போதைவஸ்து தொடர்பான சகல குற்றச் சம்பவங்களின் மொத்தத் தொகையில் 15 சதவிகிதமாக் மட்டுமே அமைந்திருந்த ஹீரோயின் குற்றச் சம்பவங்கள் 1985ம் ஆண்டில் 57 சதவிகிதத்துக்கு அதிகரித்துவிட்டன. அவ்வாண்டில் (1985) ஏறக்குறைய 3,000 ஹீரோயின் தொடர்பான குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டனர். கைது செய்யப்படும் ஒவ்வொரு 100 பேரிலும் 80 பேர் உபயோகிப்பவர்கள் என ஏற்றுக் கொள்ளப்பட்ட சர்வதேச புள்ளி விவரத்துக்கிணங்க, கைது செய்யப்படுவோரில் ஏறக்குறைய 2,400 பேரும் ஹீரோயின் உபயோகிப்பவர்களாகவே இருப்பார்கள். உண்மையில் உபயோகிக்கும் 10 பேரில் அடையாளங் காணப்படுபவர் 1 ஆள் என்னும் உலக சுகாதார ஸ்தாபனத்தின் குறியீட்டெண் அட்டவணையை உபயோகிக்குமிடத்து, 1985ம் ஆண்டுக்கான ஹீரோயின் உபயோகிப்பாளர்களின் மதிப்புத் தொகை 24,000 ஆக இருக்கும்.

ஹீரோயின் அடிமையொருவரின் சராசரி தின நுகர்வு தற்போது சுமார் 500 மில்லிகிராமாக உள்ளது. இந்த அடிப்படையில், ஹீரோயின் உபயோகிப்போர் என மதிப்பிடப்படும் 24,000 பேருக்கு அவர்களுடைய பழக்கத்தைப் பராமரிக்க ஒவ்வொருநாளும் மொத்தம் 12 கிலோ ஹீரோயின் தேவைப்படும். இலங்கையில் உபயோகிப்போர் ஹீரோயின் மீது தினமும் செலவிடும் தொகை 25 இலட்சம் ரூபாவாகும். 1985ம் ஆண்டில் பொலீஸ், சுங்கப்பகுதி, கலால் பகுதி ஆகிய சட்ட அமுல் முகவரகங்களால் கைப்பற்றப்பட்ட ஹீரோயினின் மொத்தத் தொகை அவ்வருடம் நாட்டுக்குள் கள்ளத்தனமாகக் கடத்திக் கொண்டுவரப்பட்டதாக மதிப்பிடப்படும் ஹீரோயின் மொத்தத் தொகையில் 1 சதவிகிதத்தைவிடக் குறைவு எனப் புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. உலகெங்கும் கைப்பற்றப்படும் போதைவஸ்துக்கள் உண்மையில் களவாகக் கடத்தப்பட்ட தொகையில் 7 சதவிகிதத்திலிருந்து 10 சதவிகிதம் வரையுள்ளதை மட்டுமே குறிக்கும் எனச் சர்வதேச மட்டத்தில் நடத்தப்பட்ட ஆய்வுகள் நிரூபிக்கின்றன.

3.4. உதாரணமாக எடுத்துக் காட்டத்தக்க ஒரு ஹீரோயின் அடிமை (1985ம் ஆண்டு) வழக்கமாக விவாகமான ஓர் ஆணாக, 16 வயதுக்கும் 25 வயதுக்கும் இடைப்பட்டவராக, குறைந்த வருமானம் பெறும் மக்கட் பிரிவைச் சேர்ந்தவராக, பெரும்பாலும் தேர்ச்சி பெறாத அல்லது அரைத் தேர்ச்சிபெற்ற உடலுழைப்புத் தொழிலிலோ அல்லது வியாபாரத்திலோ ஈடுபட்டவராக, முறைமை சார் கல்வி பெறாதவராக, பெற்றோரின் பராமரிப்பு ஆகக்குறைவாயுள்ள ஒரு பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவராகவே இருந்தார்.

ஹீரோயின் அடிமைகளிடையே தனியொரு போதைவஸ்துவை மட்டும் உபயோகிப்போ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரும் பல போதைவஸ்துக்களை உபயோகிப்போரும் உள்ளனர் என்று சமீபத்தில் நடத்தப்பட்ட ஆராய்ச்சி யொன்றிலிருந்து தெரிய வருகிறது. பெரும்பாலான அடிமைகளால் துஷ்பிரயோகஞ் செய்யப்பட்ட முக்கிய போதைவஸ்து ஹீரோயினாக இருந்த போதிலும், அவர்களில் சுமார் 80 சதவிகிதத்தினர் ஒன்றில் சடைக்கஞ்சா (பங்கி) வை உபயோகித்துள்ளனர் அல்லது அதே உபயோகித்து வருகின்றனர். போதைவஸ்து அடிமைகளிடையே, ஒன்றில் பிரதான போதைவஸ்துவின் பயனை அதிகரிப்பதற்காகவோ அல்லது அதன் பயன் விலகும் அறிகுறிகளைத் தணிப்பதற்காகவோ ஹாஷிஷ், சாந்தியாக்கிகள் அல்லது மற்றும் தணிப்பான்களை உபயோகிக்கும் நபர்களும் உள்ளனர். அடிமைகளில் சுமார் 70 சதவிகிதத்தினர் தினமொன்றுக்கு பத்திலிருந்து நாற்பதுவரையான சிகரெட்டுகளைப் புகைத்தனர்; 40 சதவிகிதத்தினர் மதுசாரத்தை அருந்தினர்.

போதைவஸ்து அடிமையொருவர் உபயோகித்த ஹீரோயினின் சராசரி அளவு நாளொன்றுக்கு 340 மில்லிகிராமாகும். 1985ம் ஆண்டில் ஹீரோயினின் சராசரி தின நுகர்வு 500 மில்லிகிராமுக்கு அதிகரித்தது. 1983/84ம் ஆண்டுகளில் ஓர் அடிமையின் சராசரி தினச் செலவான 100 ரூபா 1985ம் ஆண்டில் நாளொன்றுக்கு 150 ரூபாவாக அதிகரித்தது. 1985ம் ஆண்டில், ஹீரோயின் அடிமைகளில் 60 சதவிகிதத்தினர் சிகிச்சைக்கு வருமுன்பு ஒரு வருடகாலத்துக்கு மேல் அப் போதைவஸ்துவை உபயோகித்துள்ளதாக அறிவித்தனர்.

ஹீரோயினை உபயோகிக்கும் முறைகளில் பேராதரவு பெற்றுள்ள முறை அதை உட் சுவாசித்தலாகும் (87 சதவிகிதத்தினர்); 11 சதவிகிதத்தினர் அதைச் சிகரெட்டுகளில் வைத்துப் புகைத்தனர்; எஞ்சிய 2 சதவிகிதத்தினர் அதை நாசியில் வைத்து மூச்சோடு உள்ளிழுத்தனர் அல்லது அதை ஊசிமருந்து போல் உடலுள் ஏற்றிக்கொண்டனர். கிட்டத்தட்ட சகல காரியங்களுக்கும் உபயோகிக்கப்பட்ட ஹீரோயின், பழுப்புச் சீனி (நம்பர் - 3 ஹீரோயின்) எனக் குறிப்பிடப்படும் ரகமாகவே இருந்தது. இதன் தூய்மை மட்டம் சராசரியாக 50 சதவிகிதம்.

பெரும்பாலான அடிமைகளுக்கு (80 சதவிகிதத்தினர்) இப் போதைவஸ்துவை அறிமுகஞ் செய்த மூல கர்த்தாக்கள் அவர்களுடைய நண்பர்கள் தான். உல்லாசப் பயணிகளும் போதைவஸ்துக்களின் சில்லறை வியாபாரிகளும் இதற்கு மற்றும் பொறுப்பாளிகளாவர். போதைவஸ்துக்களில் முதல் அனுபவம் பெறுவதற்கான முக்கிய காரணங்களில் ஒன்று, அவற்றில் உள்ளதை அறிந்து கொள்ளும் வேட்கைதான்.

### 3.5. சமூக விளைவுகள்

ஹீரோயினின் சட்டவிரோதமான கடத்தல், துஷ்பிரயோகம் ஆகியவற்றுடன் தொடர்புள்ள மற்றும் பல நாடுகள் அனுபவத்தில் கண்ட பிரச்சினைகளையே இலங்கை தற்போது எதிர் நோக்குகின்றது. ஹீரோயினுக்கு அடிமைப்படும் நிலை சமூக, குடும்ப, ஆளுமைச் சீர்குலைவுகளுக்குப் பொறுப்பான ஒரு காரணி என்று இப்பொழுது அறியப்பட்டுள்ளது. இப்போதைவஸ்துவைச் சார்ந்ததிருந்த பல உபயோகிப்பாளர்கள் அதன் விளைவாகத் தங்களுடைய வேலைகளை இழந்துள்ளனர்.

சராசரி தினவருமானம் ஹீரோயின் பழக்கத்தைப் பராமரிக்கத் தேவைப்படும் பணத்தை விடக் குறைவாயிருந்ததால், பல அடிமைகள் தங்கள் சொந்தப் பொருள்களையும் குடும்பத்துக்குச் சொந்தமான சாமான்களையும் விற்கவேண்டி நேரிட்டது. அதன் விளைவாக, குடும்ப உறவுகளும் நிதி நிலைமைகளும் மோசமாகப் பாதிக்கப்பட்டன.

ஹீரோயின் அடிமைகளில் சிலர் அற்ப குற்றங்களில் மட்டுமன்றிக் கொடிய குற்றங்களிலும் சம்பந்தப்பட்டனர். மாதிரிக்கு 100 அடிமைகளில் 14 பேர் கடந்தகால குற்றப் பதிவேடுகளைக் கொண்டிருந்ததாகத் தெரிய வந்தது. தொழில்களில் அமர்ந்திருந்த அடிமைகளில் பெருந்தொகையினர் தங்கள் தொழில் நிலைமைகளுக்கு ஈடுகொடுக்க முடியாதிருப்பதை உணர்ந்தனர். குறைந்த அளவான வினைத்திறனுடன் வேலை செய்தனர். இதற்கு வேலைத்திறன் பாதிக்கப்பட்டமை, அக்கறையின்மை, செயலூக்கமின்மை, சோம்பல் குணம் ஆகியனவே காரணங்களென்று வழக்கம்போல் கூறப்பட்டன. இவற்றையெல்லாம் உண்டாக்கியது போதைவஸ்துவே.

### 4. போதைவஸ்து - பயங்கரவாதம்

போதைவஸ்து தொடர்பான குற்றச் செயல்களில் இலங்கையர்கள் வெளிநாடுகளில் சம்பந்தப்பட்ட சம்பவங்களின் அதிகரிப்பு 1982ம் ஆண்டில் முதலாவதாக அவதானிக்கப்பட்டது. அதற்குப்பின்பு வெளிநாடுகளில் கைது செய்யப்படும் இலங்கையர்களின் தொகை படிப்படியாக அதிகரித்து வந்துள்ளது.

1984ம் ஆண்டில் கைது செய்யப்பட்ட இலங்கையர்களின் தொகை 301. இவர்களில் 80 சதவிகிதத்தினர் தமிழர்கள். 1985ம் ஆண்டில் 315 பேர் கைது செய்யப்பட்டனரென்று பொலீஸ் போதைவஸ்துத் தடுப்புப் பணியகத்தில் கிடைக்கும் புள்ளி விவரங்கள் கூறுகின்றன. இவர்களில் 90 சதவிகிதத்தினர் இலங்கைத் தமிழர்கள். போதைவஸ்துக் கள்ளக் கடத்தலுக்காகப் பிரதானமாக இத்தாலி, பிரான்ஸ் ஸ்பெயின், மேற்கு ஜெர்மனி, சுவிட்ஸர்லாந்து, பிரிட்டன் ஆகிய நாடுகளில் இலங்கைத் தமிழர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் கைது செய்யப்பட்டுள்ளனர். ஹீரோயின் கள்ளக் கடத்தலுக்கும் இலங்கையிலுள்ள தமிழ்ப் பயங்கரவாத இயக்கத்துக்கும் திட்டமான தொடர்பு உண்டெனப் புலன் விசாரணைகள் ஸ்தாபித்துள்ளன. புலன் விசாரணைகளின் போதும் கைது செய்யப்பட்டவர்கள் அளித்த ஒப்புதல் வாக்கு மூலங்களின் மீதும் இங்கும் வெளிநாடுகளிலும் சேகரிக்கப்பட்ட ஆவணங்கள், மற்றும் சாட்சியங்கள் ஆகிய இரண்டினுலும் இத்தொடர்பு ஊர்ஜிதஞ் செய்யப்பட்டுள்ளது. அவர்களில் பெரும்பாலோர் மேற்கு ஐரோப்பிய நாடுகளில் அரசியல் அகதி அந்தஸ்தைக் கோரியவர்களாவர். ஒரு சிலர் கைது செய்யப்பட்ட பின் அரசியல் அடைக்கலம் கோரியிருக்கின்றனர்.

இந் நாடுகளில் இலங்கைத் தமிழர்கள் தங்களை நன்கு நிலைப்படுத்திக்கொண்டு, கட்டுப்பாடான முறையில் அமைந்துள்ளனர். அவர்கள் இப்பொழுது போதைவஸ்துக்களை இடத்துக்கிடம் காவிச் செல்வதைக் கையாளுவதுடன் பல ஐரோப்பிய நாடுகளுக்குள் கள்ளத்தனமாகக் கடத்திச் செல்லப்பட்ட ஹீரோயினின் கிட்டத்தட்ட முழு விநியோகத்தையும் கூடக் கையாளுகின்றனர். மற்றும் குற்றங்கள் புரியும் ஸ்தாபனங்களுடனும் பயங்கரவாத அமைப்புகளோடும் அவர்கள் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.

இலங்கையர்களில் பெரும்பாலோர் தாங்கள் வேலையின்றியிருப்பதைக் கண்டனர். இவர்களின் கல்விப் பின்னணி பெருமளவுக்குக் குறைவானதாகவே இருந்தது. எனவே, இவர்கள் சட்டவிரோதமான கடத்தல் ஸ்தாபனங்களுக்குச் சுலபமான இலக்குகளாயினர். இந்த நிகழ்வுப் போக்கு தொடருகிறது. அண்மைக் காலத்தில் வெளிநாடுகளில் கைது செய்யப்பட்ட இலங்கையர்களின் தொகை இந்த வர்த்தமானங்களுக்குச் சான்று பகருகின்றது. இந்த நபர்களில் கிட்டத்தட்ட 50 சதவிகிதத்தினர் 18 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்டவர்களாயிருக்கின்றனர். இவ்வகையான போதைவஸ்துக் கள்ளக் கடத்தலில் தொடர்ந்து சம்பந்தப்பட்டிருந்ததன் விளைவாக, ஒரு காலத்தில் கடத்தல் தூதர்களாயிருந்த இவர்கள் இப்பொழுது ஸ்பெயினிலும் சுவிட்சர்லாந்திலும் இத்தாலியிலும் பிரான்ஸிலும் செயலாற்றும் கள்ளக்கடத்தல் குழுக்களாகத் தங்களை அமைத்துக்கொண்டுள்ளனர். இலங்கையரான கடத்தல் தூதர்கள் பாரிஸிலும் ரோமிலும் ஆம்ஸ்டர்டாமிலுமுள்ள போதைவஸ்து வியாபாரிகளோடும் குற்றவாளிகள் குழுக்களுடனும் நெருங்கிய தொடர்புகளை ஸ்தாபித்திருக்கின்றனர். குறிப்பிடத்தக்க ஹீரோயின் கடத்தல்காரர்களென நிரூபணமான இந்தியர்கள், பாகிஸ்தானியர், ஈரானியர், நைஜீரியர் ஆகியோரோடு சேர்ந்து இவ்வேலையில் ஈடுபடுகின்றனர். இலங்கையரான கடத்தல்காரர்களில் பெரும்பாலோரிடம் கள்ளக் கையெழுத்திட்ட 'விஸா' புறக்குறிப்புக்களுடன் இசைவாக்கிய போலி பாஸ்போர்ட்டுகளும் இருக்கின்றன. அவர்கள் பிரிவினைவாத அரசியல் பிரசார ஏடுகளையும் காவுவர். 1986ம் ஆண்டு கோடைகாலத்தில் இலங்கையர்களும் மற்றும் கடத்தல்காரர்களும் இந்தியாவிலிருந்தும் பாகிஸ்தானிலிருந்தும் பெருந்தொகையான ஹீரோயினை மேற்கு ஐரோப்பாவுக்குள் கொண்டுவந்துவிடுவார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த இலங்கைத் தமிழர்களில் சிலர் சட்டபூர்வமாகவோ அல்லது சட்ட விரோதமாகவோ இந்தியாவுக்கோ அல்லது பாகிஸ்தானுக்கோ பயணஞ் செய்து, பின்னர் ஹீரோயினுடன் மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்லும் அதே சமயத்தில், இந்தக் கள்ளக்கடத்தல்காரர்களில் பெரும்பாலோர் முதலில் அரசியல் அகதிகளாக ஐரோப்பிய நாடுகளுக்குள் பிரவேசித்து பிறகு ஐரோப்பிய நாடுகளில் ஸ்தாபிக்கப்பட்ட ஸ்தாபனங்களுக்காக ஹீரோயினைச் சேகரிப்பதற்காக அங்கிருந்து இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் பிரயாணமாகின்றனர். இந்த ஸ்தாபனங்களில் இலங்கைத் தமிழர்களும், சர்வதேச குற்றவாளிகள் குழுக்களும், பயங்கரவாத நிறுவனங்களும் அடங்கியுள்ளன. பிரயாணம், தங்கல், ஆவணத்தயாரிப்பு, நிதியளிப்பு ஆகிய நுணுக்கமான விஷயங்களைக் கையாளும் இச் சர்வதேச குற்றவாளிகள் குழுக்களும் பயங்கரவாத ஸ்தாபனங்களும் இத்தகைய நபர்களின் அரசியல் புகலிடத்துக்கான உரிமைக் கோரிக்கைகளை நிலைநாட்டவும் இவர்களுக்கு உதவி புரிகின்றன.

இவர்கள் வெளிநாடுகளிலுள்ள பயங்கரவாத பயிற்சிமையங்களுடனும் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டுள்ளனர். தமிழரின் ஆதிக்கத்திலுள்ள போதைவஸ்துக் கடத்தல் குழுக்களுக்குச் சர்வதேச பயங்கரவாத ஸ்தாபனங்கள் அளித்துவரும் ஆதரவுக்குக் கைம்மாறாக, ஹீரோயின் வியாபார ஆதாயங்களிலிருந்து ஒரு பகுதியையும் அந்த ஸ்தாபனங்களுக்கு இவர்கள் வழங்குகின்றனர்.

போதை வஸ்துக்களில் நடைபெறும் கள்ளக் கடத்தல்களையும், உள்ளூர் வியாபாரத்தையும் தடுப்பதற்கு சாத்தியமான சகல நடவடிக்கைகளும் எடுக்கப்படுதல் வேண்டும். இக்குற்றங்களுக்கு மிகக் கடுமையான தண்டனைகளை வழங்குவதன் மூலமும், நுணுக்கமான கண்காணிப்பின் மூலமுமே இதனைச் சாதிக்க முடியும். மறு புறத்தில், போதை வஸ்துக்களுக்கு அடிமையானவர்களை அத்தீய பழக்கத்திலிருந்து மீட்டு அவர்களுக்கு புனர் வாழ்வளிப்பதற்கு திட்டங்கள் வகுக்கப்படல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபாற் கந்தோரில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

மக்கள் வங்கி ஒரு சமூகப்பணித் திட்டமாக "பொருளியல் நோக்கை" வெளியிடுகின்றது. பாரபட்சமற்ற பரிசீலனைகள், கருத்தாழமிக்க கலந்துரையாடல்கள் என்பன மூலம் பொருளாதாரத்திலும் பொருளாதார அபிவிருத்திப் படிமுறையிலும் ஆர்வத்தினை உண்டாக்கி அறிவினை வளர்ப்பதே எமது குறிக்கோளாகும். நாட்டின் மிக முக்கியமான சமூக, கலாசாரத் தேவைகள் குறித்து வங்கியின் வளங்கள் பயன்படுத்தப்படும் பல்வேறுபட்ட திட்டங்களில் இதுவும் ஒன்றாகும்.

மேலும், மக்கள் வங்கி, நாடெங்கணும் சிதறிக் காணப்படும் 200 க்கும் அதிகமான அதன் கிளைகள் மூலமும், சுமார் 550 கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் மூலமும், கடற்றொழில் வங்கிகள் மூலமும் விரிவான சகல வங்கிச் சேவைகளையும் வழங்கி வருகின்றது. உலகெங்கணுமிருக்கும் முகவர்கள், பிரதிநிதிகள் என்போரின் உதவியுடன் சர்வதேச வர்த்தகம், கொடுப்பனவுகள் என்பன குறித்த சகல அம்சங்களையும் வங்கி மேற்கொண்டு வருகின்றது.

பிரதி விலை ரூ. 3-50

வருட சந்தா ரூ. 40-00

# பொருளியல் நோக்கு

## மக்கள் வங்கியின் ஆராய்ச்சிப் பகுதி வெளியீடு

283, கே. சிறில் சி. பெரேரா மாவத்தை கொழும்பு-13ல் உள்ள இன்டர் நெஷனல் கிரபிக் மெகசின் லிமிடட் அச்சுயந்திரசாலையில் அச்சிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org